விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 81


வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 24 புதன்கிழமை (10.10.2012)

பக்கங்கள்: பதினாறு + 8

கல்வி ஒளி
இலவச
இணைப்பு
உள்ளே...

# நீதிச்சேவை ஆணைக்குழு செயலருக்கு பாதுகாப்பு வழங்கியிருக்க வேண்டும்

## அமைச்சர் வாசுதேவ கண்டனம்



நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்னவை அரசாங்கம் பாதுகாத்திருக்க வேண்டுமென தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். மஞ்சுளவின் விவகாரம் குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தியிருக்க வேண்டும் எனவும், கூடுதல் பாதுகாப்பு வழங்கியிருக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக மஞ்சுள திலகரட்ன அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தாக்குதல் சம்பவம் பெரும் அதிர்ச்சியை அளிக்கிறது. அத்துடன் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என்று அவர் சுட்டிக் காட்டினார். நீதிமன்றக் கட்டமைப்பிற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் விரிசலை ஏற்படுத்த சிலர் முயற்சித்து வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரது பாதுகாப்பு தொடர்பில் கூடுதல் சிரத்தை எடுத்துக் கொண்டிருக்க வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குற்றவாளிகளுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என்றும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

## முள்ளிவாய்க்காலில் படையினர்-மக்கள் மோதல்?

(புதுக்குடியிருப்பு)

முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை படையினருக்கும் பொது மக்களுக்கும் இடையில் முறுகல்நிலை தோன்றியதாகவும் இதன்போது 02

## தமிழ்நாட்டுக்கான பயணத்தடையை நீக்கியது இலங்கை அரசாங்கம்

(கொழும்பு)

தமிழ்நாட்டுக்குச் சென்ற இலங்கை யாத்திரிகர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களை அடுத்து இலங்கைப் பிரஜைகள் தமிழ் நாட்டுக்கு செல்வதைத் தவிர்க்குமாறு விடுத்த அறிவுறுத்தலை, இலங்கை அரசாங்கம் விலக்கிக்கொண்டிருக்கிறது.

இந்தப் பயத்தடை அறிவுறுத்தல் செப்டம்பர் மாதம் விடுக்கப்பட்டது. தமிழ் நாட்டில் இலங்கைப் பயணிகள் தொல்லைகளுக்குள்ளான சில சம்பவங்கள் இடம்பெற்றன. 02



அரியாலைப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து நேற்று மீட்கப்பட்ட ஆயுதங்கள், வெடிபொருட்களைப் படத்தில் காணலாம்.

# இளைஞர்களுக்குத் தலைமைத்துவ பயிற்சி கட்டாயம் வழங்கப்பட வேண்டும்

(கொழும்பு)

## பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ

இளைஞர் யுவதிகளுக்கு கட்டாய தலைமைத்துவ பயிற்சி வழங்கப்பட வேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இளைய தலைமுறையினரின் தன் நம்பிக்கையை பலப்படுத்த தலைமைத்துவ பயிற்சி முக்கியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தரம் ஒன்றைச் சேர்ந்த அதிபர்களுக்கு கேணல் பட்டங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போது அவா இதனைக் தெரிவித்தார். இளம் சமூகத்தினர் தீர்மானங்களை சுயமாக எடுக்கக் கூடிய வகையில் பயிற்றப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இதேவேளை, தன்னம்பிக்கை இழந்த காரணத்தினாலேயே நான்கு தடவைகள் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் பங்கேற்ற இலங்கை அணியினரால் சம்பியன் பட்டத்தை வெல்ல முடியவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நீதிபதிகள் இன்றுமுதல் பணிக்கு

(கொழும்பு)

நீதவான்களும் மாவட்ட நீதிபதிகளும் இன்று புதன்கிழமை நீதிமன்ற நடவடிக்கைகளை தொடருவதற்கு தீர்மானித்துள்ளனர். நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இலங்கை நீதித்துறை சேவைகள் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

நீதிச்சேவைகள் ஆணைக் 02

# கடைசிவரை போராட நினைத்த புலிகளும் தவறு; குறிவைத்து தாக்குதல் நடத்திய இலங்கை அரசும் தவறு

## பி.பி.ஸி.பேட்டியில் எரிக் சொல்ஹெம்

“போரின் இறுதிமுடிவு என்னவாக இருக்கப் போகிறது என்பதை அனைவரும் உணர்ந்த நிலையில், போரை ஒழுங்குபடுத்தப்பட்டமுறையில் முடிக்காமல், கடைசி வரை போராடவேண்டுமென்று புலிகளின் தலைமை முடிவெடுத்தது மிகப்பெரிய வரலாற்றுத் தவறு. அதேசமயம் இதனைக் காரணமாகக் காட்டி இலங்கை அரசு நடத்திய குறிவைத்த தாக்குதல்களையும் நியாயப்படுத்த முடியாது” என்று லண்டன் பி.பி.ஸி. தமிழோசைக்கு அளித்தபேட்டியில் நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கூறினார்.

இலங்கை இராணுவத்துக்கும் புலிகள் அமைப்புக்கு மிடையி லான போரில், 2009 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், போரின் இறுதிக் கட்டத்தில் பெருமளவிலான பொது மக்கள் கொல்லப்படக்கூடியமனிதப் பேரவலம் நடக்காமல் தடுக்கும் நோக்கத்தில் சர்வதேச நாடுகள் கூட்டாக ஒரு முயற்சி எடுத்ததாக ஏற்கெனவே செய்திகள் கசிந்திருந்தன.

அந்த முயற்சியில் முக்கிய பங்காற்றிய நோர்வே நாட்டின் முன்னாள் அமைச்சரும், இலங்கையில் அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னின்று நடத்தியவர்களில் ஒருவருமானஎரிக் சொல்ஹேய்ம், அந்த திட்டம் குறித்து தற்போது வெளிப்படையாக பேசியுள்ளார். கடந்தவாரம் லண்டனில் பிபிசி அலுவலகம் வந்திருந்த எரிக்சொல் ஹெய்ம் அவர்களிடம் இந்த திட்டம் உருவான பின்னணி குறித்தும் அதுஏன் செயற்படாமல் கைவிடப்பட்டது என்றும் பிபிசி தமிழோசை சார்பில் செவ்வி காணப்பட்டது. 07

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்

# வடமராட்சி கிழக்கு கடலில் அமிழ்ந்து கிடக்கும் போர் தளபாட சிதைவுகளை அகற்றக் கோரிக்கை

வடமாரட்சி கிழக்கு, மருதங்கேணி, தாளையடி மற்றும் அதனை அண்டிய கடற்பகுதியில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் அழி-வடைந்த போர்த் தளபாடங்கள் கடலுக்கடியில் காணப்படுவதால் அப்பகுதிகளில் தொழில் நடவடிக்கையை மேற்கொள்வதில் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தம் நடைபெற்ற காலப்பகுதிகளில் விடுதலைப் புலிகள் மற்றும் கடற்படையினரின் கடற்கலங்கள் இக்கடற்பரப்பில் மூழ்கி சிதைவடைந்துள்ளதால் குறித்த பகுதியில் தொழில் நடவடிக்கையை மேற்கொள்ளும் கடற்தொழிலா-ளர்களின் வலைகள் மற்றும் வள்ளங்கள் நாள்தோறும் சேதமடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பெரும்பாலும் குறித்த பகுதியில் வாழும் மக்கள் கரைவலைத் தொழில் நடவடிக்கையினை நம்பியே தொழில் நடவடிக்கையை மேற்கொண்டு வருதால் கடலில் உள்ள சிதைவடைந்து காணப்படும் பொருட்களால் கடற்தொழிலாளர்கள் நாளாந்தம் பெரும் நட்டத்தை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நீரியல் வளத்திணைக்களம் மற்றும் கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசம், பருத்தித்துறை நகர சபை ஆகியவற்றுக்கு எழுத்து மூலம் அறிக்கை சமர்பிக்கப்பட்டும் எவ் விதமான நடவடிக்கையும் எடுக் கப்படவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# 6 வயது சிறுவனின் வயிற்றில் 90 புழுக்கள்

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் 6 வயது சிறுவனொருவனின் வயிற்றுக்குள் காணப்பட்ட 90 புழுக்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றப்பட்டன.

இது பற்றி தெரியவருவதாவது,

வயிற்றுவலியால் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இச்சிறுவனின் வயிற்றை சோதித்தபோது வயிற்றின் பெருங்குடலில் புழுக்கள் இருப்பது கண்டுபிடிப்பட்டது. இதனையடுத்து உடனடியாக இச்சிறுவனை சத்திரசிகிச்சைக்குட்படுத்தி வயிற்றுக்குள் காணப்பட்ட புழுக்களை வெளியில் எடுத்து சிறுவனின் உயிரை வைத்திய நிபுணர் ஜெமில் காப்பாற்றியுள்ளார்.

இப்புழுக்கள் ஒவ்வொன்றும் ஒரு அடி இரண்டு சென்ரிமீற்றர் நீளமுடையதெனத் தெரிவித்த வைத்தியர், தக்கநேரத்தில் சிறுவனை வைத்தியசாலைக்கு அழைத்துவந்ததால் சிறுவனின் உயிர் காப்பாற்றப்பட்டதாகவும் குறிப்பிட்டார். இச்சிறுவன் பல வருடங்களாக பூச்சிகளை அகற்றுவதற்கான மருந்துகளை பாவிக்காத நிலையில் இப்புழுக்கள் வயிற்றில் விளைந்துள்ளதாகவும் வைத்தியர் தெரிவித்தார்.

# மாலினி நேற்று மீண்டும் எம்.பி.யாக சத்தியப்பிரமானம்

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ முன்னிலையில் மீண்டும் நாடாளு மன்ற உறுப்பினராக பிரபல நடிகை மாலினி பொன்சேகா நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண் டுள்ளார்.

அண்மையில் தனது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பி னர் பதவியை ராஜினாமா செய்வ தாக அறிவித்திருந்த பிரபல நடிகை மாலினி பொன்சேகாவின் கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்க மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே நேற்று நாடா ளுமன்றம் கூடியபோது, அவர் மீண்டும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார் மாலினி பொன்சேகா.

# வட மாகாண ஆளுநருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

திவிநெகும எனப்படும் வாழ் வெழுச்சிச் சட்ட மூலத்திற்கு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி அங்கீகாரம் வழங்குவாரேயானால் அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்தது. உச்சநீதிமன்றம் இந்த சட்ட மூலம் தொடர்பாக தனது தீர்ப்பை அறிவிப்பதற்கு முன்னர் பாராளுமன்றத்திற்கு சட்டமூலம் கொண்டு வரப்பட்டால் இந்த நடவடிக்கை எடுக்கப்படுமென்று கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பி. எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநரின் ஒப்புதலையும் பெற்று நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களும் இந்தச் சட்ட மூலத்தை அங்கீகரித்திருப்பதாகக் கூறி அரசாங்கம் இன்று இதனைப் பாராளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாக தெரியவருகிறது என்றும் சுமந்திரன் எம்.பி. சொன்னார்.

உயர்நீதிமன்றம் இந்தச் சட்டமூலம் தொடர்பாக தனது இறுதித் தீர்ப்பை வழங்குவதற்கு முன்னர் பாராளுமன்றம் இந்த சட்ட மூலத்தை ஏற்றுக் கொள்ளுமானால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றினை ஆளுனருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தாக்கல் செய்யும் சாத்தியம் பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆராய்ந்து வருவதாகவும் சுமந்திரன் எம்.பி. கூறினார்.

# ஆரியாலைக் கிணற்றிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு

அரியாலை மணியம் தோட்டப்பகுதியில் கிணற்றில் இருந்து பழைய ஷெல் குண்டுகள் உட்பட ஆயுதங்கள் பல மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து மேற்படி ஆயுதங்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மோட்டார் குண்டுகள் 240, கைக்குண்டுகள் 42, 40 மில்லி மீற்றர் ரக மோட்டார் குண்டுகள் 8, குண்டுகளை செயலிழக்க வைக்கும் பியூஸ் வகை 3 பெட்டிகள், கிளைமோர் குண்டுகள் 2, 12.7 கிராம் ரவைகள் 1615 போன்ற ஆயுதப் பொருட்களே மீட்கப்பட்டன.

# நுழைவுச்சீட்டு மோசடி கைது

இருபதுக்கு இருபது ஐசிசி உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டிக்கான நுழைவுச் சீட்டினை நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகப்படியான விலைக்கு விற்பனை செய்ய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு - வெள்ளவத்தையை வதிவிடமாகக் கொண்டவர் என பொலிஸார் தெரிவித்தனர். இவர் 1,540 ரூபா பெறுமதி யான நுழைவுச்சீட்டினை 14,000 ரூபாவிற்கு விற்பனை செய்துள்ளார்.

இந்நபர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ள.

# ரூ. 60 இலட்சம் பணத்துடன் ஜப்பானிய பிரஜை கைது

கிஷினோவில் வெற்றிபெற்ற 60 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்களுடன் நாட்டை விட்டு வெளியேற முற்பட்ட ஜப்பான் பிரஜையொருவரை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர். அமெரிக்க, ஹொங்கொங் டொலர்கள் மற்றும் கொரிய வொன் ஆகிய நாணயத் தாள்களுடன் டுபாய் ஊடாக கெய்ரோவுக்கு பயணிக்க முயற்சித்த நிலையிலேயே மேற்படி ஜப்பான் பிரஜை கைது செய்யப் பட்டுள்ளார்.

44 வயதான இவர், தான் ஒரு சட்டத்தரணி என்றும் கஷினோவில் வெற்றிபெற்ற இந்த பணத்துடன் கெய்ரோ சென்று அங்கும் கஷினோ சூதாட்டத்தில் ஈடுபடப் போவதாக தெரிவித்தார்.

# 5825 கோடியே 95 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாவால் பாதுகாப்பு செலவீனம் அதிகரிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான மொத்த செலவீனம் 1 இலட்சத்து 33 ஆயிரத்து 500 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில் பாதுகாப்பு செலவீனம் 28,950 கோடியே 25 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாவாகும். 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு செலவீனம் 5825 கோடியே 95 இலட்சத்து 34 ஆயிரம் ரூபா அதிகமாகும்.

2012 ஆம் ஆண்டு பாதுகாப்பு செலவீனமாக அரசாங்கம் 23 ஆயிரத்து 124 கோடியே 30 இலடசம் ரூபாவை ஒதுக்கியிருந்தது. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரசாங்கத்தின் மொத்த செலவீனம் 5071 கோடியே 55 இலட்சத்து 29 ஆயிரம் ரூபா அதிகமாகும்.

கடந்த ஆண்டு மொத்த செலவீனமாக அரசாங்கம் 1 இலட்சத்து 28 ஆயிரத்து 428 கோடியே 44 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியிருந்தது.

பாராளுமன்றம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை கூடியது. சபையின் பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் 2013 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்ட மூலத்தை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அவைக்கு சமர்ப்பித்தார்.

## தமிழ்நாட்டுக்கான...(தொடர்)

குறிப்பாக, பூண்டி மாதா தேவாலயத்தில் வழிபடச் சென்ற இலங்கை யாத்ரிகர்கள் சென்ற வண்டிகள் கல்லெறிச் சம்பவங்களுக்கு இலக்காகின.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஆண்டுதோறும், சுமார் இரண்டு லட்சம் இலங்கைப் பிரஜைகள் சுற்றுலா செல்கிறார்கள், இவர்கள் அனைவரும் தமிழ் நாடு உள்ளிட்ட இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் உளப்பூர்வமாக வரவேற்கப்படுகிறார்கள் என்று இலங்கை கூறியது.

இந்திய அரசு, இந்திய மாநிலங்களின் ஒருங்கிணைப்போடு, தமிழ் நாடு உள்ளிட்ட இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கு வரும் இலங்கையரின் பாதுகாப்பை உறுதி செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திருப்பதாகவும் இலங்கை அரசு கூறுகிறது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான மக்கள் தொடர்புகள் காலங்காலமாக இருந்து வந்தவை இந்த தொடர்புகள் பேணப்பட வேண்டும் என்று கூறியிருக்கும் இலங்கை அரசு, இது தொடர்பாக தமிழக முதலமைச்சர் தெரிவித்த கருத்துக்களையும் வரவேற்றுள்ளது.

முன்பு வெளியிடப்பட்ட பயண அறிவுறுத்தலை விலக்கிக்கொள்ளுமாறு ஏராளமான வேண்டுகோள்கள் தமக்கு விடப்பட்டிருப்பதாகக் இலங்கை அரசு தெரிவித்தது. எனவே இந்தப் பயணத்தடை அறிவுறுத்தல் இனி தேவையற்றது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்தது.

## நீதிபதிகள் இன்று...(தொடர்)

குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள இச்சங்கம், சட்ட ஆட்சியின் வீழ்ச்சி மற்றும் நீதித்துறை சுதந்திரம் பற்றிய சில முடிவுகளை எடுத்ததாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன மீதான தாக்குதலைக் கண்டித்து நாடாளவிய ரீதியிலுள்ள நீதவான் நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இரண்டாவது நாளாகவும் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டனர்.

## முள்ளிவாய்க்காலில் படையினர்...(தொடர்)

பொது மக்கள் பலர் சிறுகாயங்களுக்கு உள்ளானதாகவும் முள்ளிவாய்க்கால் தகவல்கள் கூறுகின்றன.

முள்ளிவாய்க்கால் பகுதியில் கடந்த மூன்று தினங்களாக பொதுமக்கள் தமது உடைமைகளை மீட்க படையினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

இதனால் ஏராளமான பொதுமக்கள் இறுதிப்போரின் போது தாம் கைவிட்டு வந்த பொருட்களை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் காலை எட்டு மணியளவில் இவ்வாறு தமது பொருள்களை எடுத்துக்கொண்டிருந்த பொது மக்களுக்கும் அங்கு வந்த படையினருக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியதென்று 'குளோபல் தமிழ்' இணையத் தளம் தெரிவித்தது.

# திவிநெகும சட்டமூலத்தினால் ஜனாதிபதிக்கும் நீதித்துறைக்கும் மோதல் என்கிறார் அமரசேகர

அரசியல் நெருக்கடி நோக்கி நகர்ந்து வரும் திவிநெகும சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றுமாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

திவிநெகும எனப்படும் வாழ்வெழுச்சிச் சட்டமூலத்தினால் அரசாங்கம் மற்றும் அதற்கு வெளியில் ஏற்பட்ட சில சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம் மற்றும் நீதித்துறைக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

அண்மைய கால வரலாற்றில், பல சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் தலையீட்டின் அடிப்படையில், பாகிஸ்தான் நீதித்துறையிலும் நிறைவேற்று அதிகாரத்திலும் மோதலை ஏற்படுத்திய சூழ்ச்சியின் விதத்தை நாம் அவதானித்துள்ளோம். நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை அதற்கு இணையான நிலைமை அல்ல என்ற போதிலும், பாகிஸ்தானிடம் இருந்து பாடம் கற்பதில் தவறில்லை என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச பிரிவினைவாத சக்திகள் அதனைத் தமக்குச் சாதமாக பயன்படுத்திக் கொள்ள வாய்ப்புள்ளது.

நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் திவிநெகும சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்ததால், தற்போது வடமாகாண சபையை அடிப்படையாகக் கொண்டு மற்றுமொரு தீர்ப்புப் பெற்றுக்கொள்ளப்பட உள்ளது. இந்த இரண்டு தீர்ப்புகள் மூலம் மாகாண சபைகளின் அதிகாரங்கள் மிகவும் உறுதிப்படுத்தப்படும் என்பது தெளிவானது.

இந்தப் புதிய நிலைமையானது சம்பந்தன்களின் புதிய ஈழத் திட்டத்திற்கு மிகவும் சாதகமான ஒன்று என்பதை கூறத்தேவையில்லை. மாகாண சபைகளின் அதிகாரத்தைக் கொண்டு, மத்திய அரசாங்கத்திற்கு சவால் விடும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்துள்ளது. அவர்களின் புதிய ஈழ திட்டத்தின் பிரகாரம் 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின்படி வடமாகாணத்தை ஸ்தாபிப்பதே அவர்களின் நோக்கமாகும்.

இரண்டாவது அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, காவற்துறை மற்றும் காணி அதிகாரங்களை பெற்று கொள்ள நீதிமன்றத் தீர்ப்பை தமக்குச் சாதமாகப் பயன்படுத்த அவர்கள் முயற்சிப்பர். இதனடிப்படையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்து கொள்வது என்பது வெறும் பிரசாரமாகவே இருக்கும். அவர்களின் புதிய ஈழ திட்டத்தின் படி தெரிவுக்குழு என்பது மைல் கல்லாக அவர்கள் அடையாளமிட்டுள்ளது மிகவும் தெளிவானது என்பதை காணக்கூடியதாக உள்ளது.

இந்த நிலைமையில், இந்தப் பிரச்சினை தீர்க்கும் அதிகாரத்தை அரசாங்கம் நீதிமன்றத்திற்கு வழங்காது அதனை நாடாளுமன்றத்திற்கு வழங்க வேண்டும் என்பதே எமது நம்பிக்கையாகும். இதனால் நீதிமன்றத்துடன் ஏற்படும் பிரச்சினைகளை தவிர்க்க முடியும் எனபதுடன், தேவையற்ற வகையில் மாகாண சபைகளின் அதிகாரங்கள் மேலெழுப்புவதையும் தவிர்க்க முடியும். இதனால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெருபான்மை பலத்தில் திவிநெகும சட்டமூலத்தை நிறைவேற்றுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம் எனவும் குணதாச அமரசேகர தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

# மனவளக்கலை யோகா பயிற்சி நேற்று வடமராட்சியில் ஆரம்பமாகியது

இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் வடமராட்சி பகுதியில் நேற்று ஆரம்பமாகிய மனவளக்கலை யோகா பயிற்சி வகுப்புகள் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவிருக்கின்றன.

மேற்படி அறக்கட்டளையின் யாழ்.வண்ணார்பண்ணை தவமையத்தின் ஆதரவுடன் இப்பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன. நேற்று (செவ்வாய்க்கிழமை) உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இன்று (புதன்கிழமை) வடஇந்து மகளிர் கல்லூரியில், நாளை (வியாழக்கிழமை) தேவரையாளி இந்துக் கல்லூரியிலும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை (12 ஆம் திகதி) கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும் இடம்பெறவிருக்கும் மனவளக்கலை யோகா பயிற்சி வகுப்பின்போது விசேடமாக காயகல்பப் பயிற்சி வழங்கப்படும்.

இந்தியா திருநெல்வேலியிலிருந்து வருகை தந்திருக்கும் மனவளக்கலை பேராசிரியை திருமதி எஸ்.இந்திரா இந்தப் பயிற்சியை நடத்துகிறார். இவருடன் மனவளக்கலை பேராசிரியர் சி.முருகானந்தவேல், மனவளக்கலை துணைப் பேராசிரியர்களான எஸ்.பாலசுப்பிரமணியம், எஸ்.தங்கராசா, எஸ். நந்தகுமாரன் ஆகியோரும் இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு விளக்கமளிக்க விருக்கிறார்கள்.

இது தொடர்பாக தகவல் தந்த மனவளக்கலை துணைப் பேராசிரியர் எஸ்.பாலசுப்பிரமணியம், இந்தப் பயிற்சி வகுப்பில் 14 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் பிள்ளைகள் கலந்துகொள்ளலாம் என்றும், இது பற்றிய மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம், கேசாவில் முதலாம் ஒழுங்கை 3/8 ஆம் இலக்கக் கட்டிடத்தில் அமைந்திருக்கும் வண்ணார் பண்ணை தவமையத்தில் (தொலை பேசி இல:0213202320) பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

உலக மக்கள் உடலாலும் மனதாலும் அனுபவித்து வரும் துன்பங்களைப் போக்கி, நல்ல உடல் நலமும் மனவளமும் பெற்று அமைதி, அன்பு, இன்பமுடன் வாழுவதற்கு ஏற்ற ஆன்மீக கல்வி மற்றும் பயிற்சிகளாக மனவளக்கலை யோகாவை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி வகுத்துக் கொடுத்துள்ளார். இவரால் 1958 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட உலக சமுதாய சேவா சங்கம் என்ற அமைப்புடன் இணைப்புப் பெற்ற 273 அறக்கட்டளைகள் இலங்கை, இந்தியா உட்பட உலகின் பல்வேறு நாடுகளில் இயங்கிவருவதாகவும் மனவளக்கலை துணைப் பேராசிரியர் எஸ். பாலசுப்பிரமணியம் தகவல் தந்துள்ளார். (க)

# சிலாபத்தில் ரயிலில் மோதுண்டு ஒருவர் பலி

சிலாபம் பொலிஸ் பிரிவிற்குடபட்ட சவரான மற்றும் பலாபன ரயில் நிலையங்களுக்கு இடையில் மைக்குளம் பிரதேசத்தில் ஓடும் ரயிலில் மோதுண்டு ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கிப் பயணித்த அலுவலக ரயிலில் மோதுண்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 07.45 அளவில் இடம்பெற்றுள்ளது. தற்கொலை செய்து கொண்ட 41 வயதுடைய நபரின் சடலம் சிலாபம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# கர்த்தான்குடியில் ஆட்லறி குண்டு மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முண்முனைத்துறைப் பகுதியில் வெடிக்காத நிலையில் இருந்த ஆட்டிலறிக் குண்டு ஒன்று நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

மண்முனைதுறை பாலம் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களே இவற்றை கண்டு காத்தான்குடி பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர்.

அக்குண்டை மீட்டுள்ள பொலிஸார் அதனை செயலிழக்கச்செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் - படைக்கட்டுப்பாக்கும் இடைப்பட்ட சூனியப் பிரதேசமாக மண்முனைத்துறைப் பாலம் இருந்தது.

இதனூடாக இயந்திரப் படகு சேவை நடத்தப்பட்டுவந்த நிலையில் படுவான்கரையினையும் எழுவான்கரையினையும் இணைக்கும் பாலம் அமைக்கும் பணிகள் ஜப்பான் அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் இந்தக் குண்டு மீட்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவில் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் மீட்பு

முல்லைத்தீவு வெள்ள முள்ளிவாய்க்கால் பகுதியிலிருந்து பொலிஸ் அதிரடிப்படையினர் ஒரு தொகுதி ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற அதிரடிப் படையினர் குறித்த ஆயுதங்களை மீட்டுள்ளனர்.

விமானத்தைத் தாக்கும் ஆயுதம் ஒன்றும் மற்றும் ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் 1563, விமான எதிர்ப்புக் குண்டுகள் 160 மற்றும் பல்வேறு துப்பாக்கிகளும் பயன்படுத்தப்படும் குண்டுகளும் 1300 என்பன மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாயுதங்கள் நிலத்தின் கீழ் புதைக்கப்பட்ட நிலையிலிருந்து மீட்டுள்ள போதிலும் இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எவரும் கைது செய்யப்பட்டவில்லை எனவும் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

# தாய், மகன் மீது தாக்குதல்

மொனராகலை - கல்வல வீதி - ரம்புக்கனை பகுதி வீடொன்றில் நித்திரையில் இருந்த தாய் மற்றும் மகன் மீது இனந்தெரியாத நபர்கள் பொல்லுகள் கொண்டு சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் படுகாயமடைந்த தாய் மற்றும் மகன் ஆகியோர் மொனராகலை வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டனர். இதில் 16 வயது மகன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். தாய் தொடர்ந்தும் சிறிபுர வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறார். தாக்குதல் நடத்தியவர்கள் மற்றும் தாக்குதல் நடத்தக் காரணம் என்பன இதுவரை வெளியாகவில்லை.

# சகல கட்சிகளினதும் ஆதரவுடன் கிழக்கை முன்மாதிரியான மாகாணமாக மாற்றியமைப்பேன்

## கிழக்கு முதல்வர்

இந்த நாட்டின் நீடித்த நிலையான அபிவிருத்திற்கு இனங்களுக்கு இடையிலான சக வாழ்வுடன் கூடிய சமாதானமும் பிரதேச அபிவிருத்தியும் அவசியமாகும். இதற்கு சிறந்த உதாரணமாக கிழக்கு மாகாணம் திகழ்கின்றமை இங்கு வாழும் மூவின மக்களுக்கும் பெருமை மிகுந்த விடயமாகும் எனக் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

கிண்ணியா பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் தலைமை உரையாற்றும் போதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

முதலமைச்சர் தொடாந்து அங்கு உரையாற்றுகையில்,

கிழக்கு மாகாணத்தின் முதல் முஸ்லிம் முதலமைச்சர் என்ற பெருமை என்னைச் சேர்ந்தது என்றாலும் நான் மூவின மக்களுக்கும் உரிய முதலமைச்சராக எனது பணியைச் செய்யக் காத்திருக்கிறேன்

இம்மாகாண சபையில் இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி போன்ற இதரக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு இந்த மாகாணத்தை இந்த நாட்டில் ஒரு முன்மாதிரியான மாகாணமாக மாற்றியமைப்பேன்.

தமிழராக இருந்தாலும் முஸ்லிமாக இருந்தாலும் சிங்களவராக இருந்தாலும் அவர்களின் உழைப்பும் ஆற்றலும் இந்த நாட்டின் அபிவிருத்திக்கே என்பதை எவரும் மறுக்க முடியாது.

திருகோணமலை மாவட்டதில் நவீன கைத்தொழில் பேட்டைகளை நிறுவி இம்மாவட்டத்தில் உள்ள இளைஞர் யுவதிகளின் தொழில் இல்லாப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண எனது தலைமையிலான மாகாண சபை நடவடிக்கை எடுக்கும் என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றவே திணைக்களங்களை நாடி வருகின்றனர். அரச ஊழியர்கள் அவர்களின் தேவைகளை நிறைவேற்றவே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வகையில் நாட்டின் அபிவிருத்தி கருதி ஊழியர்கள் பொறுப்புணர்ச்சியுடனும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்ற வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.எல்.எம்.ஹஸன் மௌலவி, கிண்ணியா பிரதேச செயலாளர் சீ.கிருஷ்நேந்திரன், பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.சி.எம்.முஸ்ஸில் மற்றும் உள் ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# இன்றைய இராசி பலன் (10.10.2012)

**நந்தன வருடம் புரட்டாதித் திங்கள் 24ஆம் நாள் புதன்கிழமை**

**நட்சத்திரம்** : பூசம் முற்பகல் 11.10 வரை அதன் பின் ஆயிலியம்
**திதி** : தசமி இரவு 11.40 வரை. அதன் பின் ஏகாதசி
**சுபநேரம்** : 4.32 - 6.02
**இராகுகாலம்** : 12.02 - 1.32
(இந்த நேரங்கள் இரவுக்கும் ப்கலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : பொருள் வரவு, நற்காரிய செய்கை, மன ஆறுதல்
**இடபம்** : காரிய சித்தி, பொருள் சேர்க்கை, இனிய செய்தி
**மிதுனம்** : அதிக செலவு, பிரயாணக் கஷ்டம், போசன சுகக்குறைவு
**கடகம்** : மனமகிழ்ச்சி, அதிக இலாபம், தொழில் விருத்தி
**சிங்கம்** : காரியத் தடை, தொழில் சஞ்சலம், மனவிரக்தி
**கன்னி** : பூமி இலாபம், தெய்வ அனுகூலம், தந்தைவழி நன்மை
**துலாம்** : மனச்சஞ்சலம், ஆரோக்கியக் குறைவு, யோசனை மிகுதி
**விருச்சிகம்** : நற்செய்தி, பிரயாண சுகம், நண்பர் உதவி
**தனுசு** : கடன்பிரச்சினை, ரோக பயம், அமைதியின்மை
**மகரம்** : முயற்சி வெற்றி, பாக்கிய விருத்தி, புத்திர இலாபம்
**கும்பம்** : உற்சாகம், இல்லத்தில் மகிழ்ச்சி, வாகன சுகம்
**மீனம்** : காரிய நஷ்டம், வீண் பிரயாசை, சகோதர பீடை

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# நீதிச்சேவை ஆணைக்குழு செயலாளர் மீதான தாக்குதல்., சி.ஐ.டி.விசாரணை



நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரத்ன மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணை-களை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொள்ளவுள்ளனர். கல்கிஸை பொலிஸாரினால் சேகரிக்கப்பட்ட கைவிரல் அடையாளம் மற்றும் ஐவரின் வாக்குமூலங்கள் உட்பட அனைத்து தடயங்களும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்கிஸை புனித தோமஸ் கல்லூரிக்கு அருகில் காலை 8.30 மணியளவில் தனது காரினுள் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரத்ன மீது இனந்தெரியாத சிலர் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

தாக்குதலை மேற்கொண்டவர் காரொன்றில் மேலும் மூவருடன் வந்ததாகவும், கைத்துப்பாக்கி ஒன்றினை வைத்து "நீதானா அவன்" என்று கேட்டு தாக்கியதாகவும் தனது வாக்குமூலத்தை மஞ்சுள பதிவுசெய்துள்ளார். அத்தோடு தனது கையடக்கத் தொலைபேசியையும் தாக்குதல் மேற்கொண்டவர் எடுத்துச் சென்றுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் மேலும் தெரிவித்துள்ளார் மஞ்சுள.

# அரச ஆதரவுக் குழுவே மஞ்சுளவைத் தாக்கியது என்கிறார் பொன்சேகா

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரத்ன மீது அரசாங்கத்தின் ஆதரவுடன் இயங்கும் ஒரு குழுவே தாக்குதல் நடத்தியுள்ளது என முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நீதித்துறையே நீதி கேட்கும் நிலைமை உருவாகியுள்ளது. அரசியல் வாதி என்ற வகையில் நீதித்துறைக்கு நீதி கிடைப்பதை நாம் ஆதரிப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான வழக்குத் தள்ளுபடி

தெற்காசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ நிறுவனத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது.

பிரதம நீதிபதி 'ஷிராணி பண்டாரநாயக்கா, நீதிபதிகள் பி.ஏ. ரத்நாயக்க, எஸ்.ஐ.இமாம் ஆகியோர் கொண்ட நீதிபதிகள் குழுமம் இவ்வழக்கை விசாரணை செய்தது.

மாலபே தனியார் மருத்துக் கல்லூரி என்றழைக்கப்படும் இந்தக் கல்லூரிக்கு எம்.பீ.பீ.எஸ் மருததுவ பட்டம் வழங்கும் தகுதியில்லை எனக்கூறி இந்த மனுவை இரண்டு மருத்துவர்களும் இரண்டு பல்கலைக்கழக ஆசிரியர்களும் தாக்கல் செய்திருந்தனர். சைற்றிம் கல்லூரிக்கு மருத்துவத்தில் பட்டம் வழங்கும் அங்கீகாரத்தைக் கொடுத்த ஓகஸ்ட் 30, 2012இல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனங்களிள் கட்டளையை செல்லுபடியற்றதென அறிவிக்க வேண்டுமென மனுதாரர்கள் தமது மனுவில் தெரிவித்திருந்தனர்.

மேலும், இந்த மனுவில் மருத்துவப் பட்டத்தை வழங்கும் பாடநெறியை நடத்துவதற்கு முதலீட்டு சபையின் கீழ் "சைற்றிம்"க்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தை இரத்து செய்யும்படி முதலீட்டுச் சபையை பணிக்க வேண்டுமெனவும் கோரப்பட்டது.

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளை நிறுத்தக் கோரிக்கை

க.பொ.த உயர்தர பரீட்சை விடைத்தாள்களுக்கு புள்ளியிடுவதை பரீட்சை திணைக்களம் உடனடியாக நிறுத்த வேண்டுமென ஆசிரியர் சங்கங்கள் பரீட்சை திணைக்களத்திடம் வலியுறுத்தி உள்ளன.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது வேலை நிறுத்தத்தை கைவிடும் வரை மேற்கொண்டு எதுவும் செய்ய வேண்டாமென அவை வலியுறுத்துகின்றன.

இளைப்பாறிய பல்கலைக்கழக ஆசிரியர்கள் புள்ளியிடுதலை மேற்பார்வை செய்ய பொருத்தமில்லாதவர்கள் என இலங்கை ஆசிரியர் சங்கம் கூறியுள்ளது.

உயர்தர விடைத்தாள் புள்ளியிடும் வேலையை தொடர வேண்டாமெனக் கேட்டு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு கடிதம் எழுதியிருந்ததாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோஸப் ஸ்டாலின் கூறினார்.

சரியான தரங்களுக்கு அமையாத வகையில் புள்ளியிடும் வேலைகள் நடப்பதாக அவர் கூறினார்.

இதேநேரம், உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் வெற்றிகரமாக இடம்பெற்று வருவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. நான்கு மத்திய நிலையங்களில் நேற்று முன்தினம் முதல் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஷ்பகுமார கூறியுள்ளார்.

# மஞ்சுளவைத் தாக்கியவர்கள் கண்டுபிடிக்கப்பட மாட்டார்கள்

## -ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர்

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுளா திலகரட்ண கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்குதலுக்கு இலக்காவதற்கு முன்னர், அரசியல் தலையீடுகள் பற்றி வெளிப்படையாகவே பேசியிருந்தார்.

இதனாலே தான் அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதென்று ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இலங்கை மருத்துவ சபையின் தலைவர் டாக்டர் எஸ்.ஜே. நோனிஸ் சில காலத்திற்கு முன்னர் மரண அச்சுறுத்தலுக்குள்ளானார். இச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களை கண்டு பிடிப்பதற்கு எவ்வித முயற்சியும் எடுகக்கப்படவில்லை. இலங்கை மருத்துவ கவுன்சிலின் உறுப்பினர் டாக்டர் வலந்த ரணசிங்க வீடடின் மீது குண்டு வீசப்பட்டது. இதுவரை இதுதொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. பல்கலைக்கழக போதனாசிரியர் சங்க சம்மேளனத் தலைவர் டாக்டர் நிர்மல் றஞ்சித் தேவஸ்ரீ மீது பல தடவைகள் மரண அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டார். இருந்தும் இதுவரை எவருமே கைது செய்யப்படவில்லை. நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மீது தாக்குதல் நடாத்தப்பட்ட சம்பவம் தொடர்பாகவும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாதென்றும் அவர் சொன்னார்.

# வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்: அறிவித்தல் விடுக்கக் கோரிக்கை

இவ்வருடம் டிசம்பரில் புதிய வாழ்க்கைச் செலவு சுட்டெண் பற்றி வர்த்தமான அறிவித்தலை விடுக்க வேண்டுமென தொழிற் சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன. அதிகாரிகள் இதைச் செய்யாதுவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அவை எச்சரித்துள்ளன.

இந்த சுட்டெண், வாழ்க்கைச் செலவு உயர்வு, கொள்வனவு சக்தி என்பவற்றைப்பற்றிய விளக்கத்தை அளிப்பது என தேசிய தொழிற்சங்க நிலையம் கூறியது.

சம்பளங்கள், வாழ்க்கைச் செலவு சுட்டெண்ணின் 'அடிப்படை யில் தீர்மானிக்கப்படுவதாகவும் இது 2009இன் பின்னர் இன்னும் வெளியிடப்படவில்லையெனவும் தேசிய தொழிற்சங்க நிலையத்தின் தலைவர் கே.டீ. லால்காந்த கூறினார்.

விலைகள் அதிகரிக்கும் போது வாழ்க்கைச் செலவுச் சுட்டென் அதிகரிக்கும். இதற்கேற்ப சம்பளம் அதிகரிக்க வேண்டும். எனவே அரசாங்கம் புதிய வாழ்க்கைச் செலவு சுட்டெண்ணை வெளியிட வேண்டுமென அவர் கூறினார்.

# குடாநாட்டில் படையினருக்கு காணிகள் வழங்கக்கூடாது: ஈ.பி.டி.பி. உட்பட்ட தமிழ் கட்சிகள் ஒருமித்த குரல்

யாழ்.குடாநாட்டில் படையினரின் தேவைகளுக்காகக் காணிகள் எதனையும் வழங்குவதில்லை எனவும், காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை முற்றாக எதிர்ப்பதாகவும் தமிழ்க் கட்சிகள் ஒருமித்த குரலில் கருத்து வெளியிட்டுள்ளன.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு ஒருமித்த கருத்து வெளியிடப்பட்டது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வெஸ்திரி அலன்ரின் ஆகியோரும் ஆதரவு தெரிவித்தனர்.

இதனையடுத்து இதுகுறித்து எதிர்வரும் முதலாம் திகதி விசேட கூட்டம் ஒன்றை நடத்தி ஆராய்வது எனவும் முடிவு எடுக்கப்பட்டது. படையினருக்கு யாழ்ப்பாணத்தில் காணிகள் வழங்கப்படக் கூடாது. அதற்காக மேற்கொள்ளும் முயற்சிகள் உடன் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

அங்கு கருத்து வெளியிட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரான மு.சந்திரகுமார், "படையினருக்குக் காணிகள் வழங்கக் கூடாது என்பது எங்களுக்கும் விருப்பம்தான். அதற்காக மீண்டும் ஆயுதப் போராட்டத்தைச் சந்திக்க இந்த மக்கள் தயாரில்லை என்றார். இந்தக் காணி சுவீகரிப்பை நாங்களும் விரும்பவில்லை. அது அரச காணிகளாக இருக்கட்டும். தனியார் காணிகளாக இருக்கட்டும். ஒரு இணக்கத்தின் அடிப்படையில் அதைத் தடுப்போம்" என்று கூறினார்.

இதுகுறித்து எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி விசேட கூட்டம் ஒன்றில் ஆராய்வது என முடிவு செய்யப்பட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமா காண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரகளான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், அ.விநாயகமூர்த்தி, ஈ.சரவணபவன், சிவஞானம் சிறிதரன், எம்.ஏ.சுமநதிரன் மற்றும் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில் வெஸ்திரி அலன்ரின் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



### மேஜர் தாக்கப்பட்ட சம்பவம்:

# இராணுவ தளபதியிடம் விசாரணை அறிக்கை

கொழும்பு ஹோட்டல் ஒன்றில் அண்மையில் தாக்குதலுக்கு இலக்கான இராணுவ மேஜர் குறித்த, விசாரணை அறிக்கை இராணுவத் தளபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கை நேற்றுமுன்தினம் இராணுவத் தளபதியிடம் கையளிக்கப்பட்டதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வனிகசூரிய குறிப்பிட்டார்.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வாவினால் குறித்த இராணுவ மேஜர் தாக்கப்பட்டதாக கருவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பின்னர் மாலக சில்வா தன்னை தாக்கவில்லை எனவும் அதிர்ச்சியால் அந்த சம்பவம் இடம்பெற்றதாகவும் இராணுவ மேஜர் நீதிமன்றில் கூறினார்.

இந்த சம்பவம் குறித்து இராணுவம் மூன்று நபர்கள் கொண்ட குழுவை நியமித்து விசாரணை செய்தது.

குறித்த இராணுவ மேஜர் இராணுவ சட்டத்தை மீறியுள்ளாரென இந்த விசாரணை மூலம் தெரிய வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# வீதிகளை அமைத்துத் தருமாறு ஊரெழு பகுதி மக்கள் கோரிக்கை

யாழ்.கோப்பாய் பிரதேசத்திற்கு உட்பட்ட ஊரெழு மக்கள் தங்களுக்கு போக்குவரத்து வீதிகளைப் புனரமைத்து தருமாறு கோரி யாழ்.மாவட்டச் செயலகம் முன்பாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை ஆர்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழக் கூட்டம் நடைபெறுவதற்கு சில மணித்தியாலயங்கள் முன்பாக இந்த ஆர்பாட்டம் நடைபெற்றுள்ளது. மக்கள் தாங்கள் போக்குவரத்து வீதிகள் இன்றி அவதிப்படுவதாகவும் மழைக்காலம் நெருங்குவதால் தங்களின் ஓலை வீடுகளில் வெள்ளம் குடி கொள்ளக் கூடும் எனவும் தெரிவித்து இந்த ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்பாட்டக்காரர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்து அவர்களின் பிரச்சனைகள் தொடர்பாக கேட்டு அறிந்து கொண்டார். இவ்விடையம் தொடர்பாக உங்களை எனது அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்ததை நடத்துவதாக கூறி அந்த மக்களை அனுப்பிவைத்தார்.

இதேவேளை, ஊரெழுவில் வீதிகள் இல்லாமை காரணமாக பொதுமக்கள் போக்குவரத்தின் போது பொதுமக்கள் அசௌகாரியங்களை சந்தித்து வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். மேற்படி குறைபாட்டை சுட்டிக்காட்டிய மக்கள் தமது பகுதியில் வீதிகளை அமைத்துத் தருமாறு கோரியுள்ளனர்.

# புனர்வாழ்வு பெற்றவர்களுக்கு சமுர்த்தி நிவாரண உதவிகள் வழங்க நடவடிக்கை

புனர்வாழ்வு பெற்று தொழில் இல்லாது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கையை புனர்வாழ்வு நலன்புரி மீளாய்வுக் குழு மேற்கொண்டுள்ளது.

இது சம்பந்தமான விபரங்களை பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக கிராம அலுவலர்கள் மூலம் சேகரிப்பதற்ககான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த கால யுத்தம் நிறைவு பெற்ற நிலையில் சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் படையினரிடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்று தற்போது அதில் ஒரு பகுதியினர் விடுதலை செய்யப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் பெரும் பகுதியினர் தொழிலின்றி மிகவும் க்ட்டமான நிலையில் காணப்படுவதுடன் மறுபுறத்தே ஒரு பகுதியினர் கைகள் கால்களை இழந்தும் மற்றும் உறுப்புகள் பாதிக்கப்பட்ட நிலையிலும் தொழில் செய்ய முடியாதவர்களாகவும் செய்யலாம் என்றும் இதற்கு எந்த ஒரு கட்சியும் முன்வராத பட்சத்தில், ஈ.பி.ஆர்.எல்.எவ் தனது பெயரை மாற்றியமைக்கத் தனது கட்சியின் அனுமதியைப் பெற்றுத்தரத் தயாராக இருந்தாக சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

என்பதை இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகின்றோம். அது மட்டுமன்றி , தமிழ் மக்களின் நன்மை கருதி நாம் அனைவரும் ஒரே கட்சியாக செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதை வலியுறுத்துகின்றோம்.

### தேசிய பொலிஸ் ஆணைக்குழு:

# அதிகாரத்தை அதிகரிப்பது தொடர்பில் ஆராய ஆலோசனைக் குழு நியமனம்

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அதிகாரங்களை அதிகரிப்பதற்காக பரிந்துரைகள் மற்றும் யோசனைகளை முன் வைப்பதற்காக ஆலோசனை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில், காவற்துறை ஆணைக்குழுவின் உறுப்பினர், சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதி, நிதியமைச்சின் பிரதிநிதி, ஜனாதிபதியின் பிரதிநிதி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர் என ஆணைக்குழுவின் செயலாளர் கே.பி. தென்னகோன் தெரிவித்துள்ளார்.

17வது அரசியல் அமைப்புத்திருத்தத்தில் முழு அதிகாரங்களை கொண்டதாக காவற்துறை ஆணைக் குழு காணப்பட்டது.

காவற்துறையினருக்கு இடமாற்றங்களை வழங்குவது உள்ளிட்ட அதிகாரங்களை ஆணைக்குழு கொண்டிருந்தது.

எனினும் 18வது அரசியல் அமைப்பு திருத்தம் மூலம் அனைத்து அதிகாரங்களும் பறிக்கப்பட்டதுடன், பொதுமக்க ளின் முறைப்பாடுகளை விசாரிக் கும் அதிகாரம் மாத்திரமே ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட் டது.

ஆனால் முறைப்பாடுகளை விசாரித்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் கூட தற்போது, காவற்துறை ஆணைக்குழுவிற்கு இல்லை.

இது குறித்து தெளிவுப்படுத்தி, ஆணைக்குழுவிற்கு கூடுதல் அதிகாரங்களை பெற்று கொள்வதற்காக கடந்த 2 ஆம் திகதி, ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இதனையடுத்தே மேற்படி குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தகுழு இரண்டு மாதங்களில் தனது யோசனைகளையும் பரிந்துரைக ளையும் ஜனாதிபதியிடம் கையளிக்கும் எனவும் தென்னகோன் கூறியுள்ளார்.

### மதுராநகர், சேமமடு கிராமங்கள்:

# போக்குவரத்து வசதியை ஏற்படுத்த இ.போ.ச. இணக்கம்

வவுனியா, மதுராநகர் மற்றும் சேமமடு கிராமங்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி அப்பகுதி மக்களின் போக்குவரத்து தேவையை பூர்த்திசெய்யுமாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலை முகாமையாளரிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கல்நாட்டியகுளம், மதுராநகர் மற்றும் சேமமடு கிராமங்கள் நீண்ட காலமாக போக்குவரத்து வசதிகளற்றுக் காணப்பட்டன.

இதனால் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள் உட்பட பலர் போக்குவரத்து அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடம் பொதுமக்கள் முறையிட்டனர்.

இதனையடுத்து, இலங்கை போக்குவரத்துச்சபையின் வவுனியா சாலை முகாமையாளருடன் தொடர்பு கொண்ட அவர் இவ்வேண்டுகோளை முன்வைத்தார்.

இவ்வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலை முகாமையாளர், இரு கிராமங்களுக்கும் பஸ் வசதியை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டார்.

# முல்லைத்தீவில் மீள்குடியேறிய மக்களுக்கு உதவிகள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட அனைத்து மக்களுக்கும் நிவாரணப் பொருட்களும் வீடுகளை அமைப்பதற்காக 20,000 ரூபா நிதியுதவியும் வழங்கப்படுவதாக அம்மாவட்டத்தின் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முழுமையாக பூர்த்தியடைந்துள்ளன.

முல்லைத்தீவில் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கைகளும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

# பெண்ணின் சடலம் மீட்பு

புத்தளம் தப்போவ - பாவட்டா மடு கிராமம் ஊடாக செல்லும் மீ ஓயாவில் மிதந்துக் கொண்டிருந்த பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இச்சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தப்போவையைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மரணத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

சடலம் குருநாகல் வைத்தியசாலையில வைக்கப்பட்டுள்ளது.

புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# களுகங்கையில் மூழ்கி மாணவன் பலி

களுகங்கையில் குளிப்பதற்காகச் சென்ற பாடசாலை மாணவன் ஒருவன் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

நண்பர்கள் இருவருடன் நீராடச் சென்ற வேளையில் இம் மாணவன் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 16 வயதுடைய மாணவன் என தெரிவிக்கப்படுகிறது.

இவர் தெல்தெனியவைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தெல்தெனிய பொலிஸர் மேற்கொண்டுள்ளனர்.

# சைவப்புலவர் சங்கத்தின் பட்டமளிப்பு விழா

மருதனார்மடம்

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் 52ஆவது பட்டமளிப்பு விழா இம்மாதம் 28ஆம் திகதி மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்வருடம் சித்திரை மாதம் நடைபெற்ற தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்கே அன்றைய தினம் பட்டம் வழங்கப்படவிருக்கிறது.

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறும் காலை அமர்வில் அருளாசியுரைகளும் பட்டமளிப்பும் சைவநாதம் மலர் வெளியீடும் இடம்பெறும்.

சங்கத்தின் உப தலைவரும் ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளருமான சைவப்புலவர் சா. தில்லைநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் மாலை அமர்வில் கருத்தரங்கமும் இசைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

மேற்படி தேர்வில் சித்தியடைந்த யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த இளம் சைவப் புலவர்கள் மற்றும் சைவப் புலவர்கள் ஆகியோருடன், சங்க உறுப்பினர்களான சைவப் புலவர்களும் சங்கத் தலைவருடன் தொடர்புகொண்டு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளும்படி சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (01)

தமிழ்நாதம்
Thamil Naatham

ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி புதன்கிழமை

# பாடசாலைகளில் நச்சு விதைகள்; நாளைய சந்ததிக்கு சாபக்கேடு

நாட்டில் உள்ள பல பாடசாலைகளில் அவ்வப்போது கொந்தளிப்பான நிலைமைகள் ஏற்படுவதுண்டு. கடந்த வாரம் காலி வித்தியாலோக வித்தியாலயத்தில் புதிய அதிபர், பதவியேற்க வந்தபோது மாணவர்களின் தாக்குதலுக்கு உள்ளானார். பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அதிபராக நியமிக்கப்பட்ட அவர், கடமையைப் பொறுப்பேற்பதற்குப் பாடசாலைக்குச் சென்றபோது பலத்த தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். அவரைப் பாடசாலைக்குள் நுழைய விடாமல் பெருந்தொகையான பெற்றோரும், மாணவர்களும் தடுத்தனர் என்று பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது. தென்மாகாண சபை உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கத்தவருமான வண பத்தேகம சமித தேரரும் கூட்டத்தில் காணப்பட்டாரென்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. பழைய அதிபரின் தூண்டுதலினால் இவை நடந்திருக்கலாமென்று பரவலாகச் சந்தேகம் வெளிப்பட்டிருக்கிறது.

இதே மாதிரியான ஒரு சம்பவம் கடந்த ஜூன் மாதம் பெல்வத்தையிலுள்ள ஒரு பாடசாலையில் நிகழ்ந்தது. பாடசாலை வளாகத்துக்குள் பகிடிவதையில் ஈடுபட மாணவர்களுக்கு அனுமதியளிக்க மறுத்த சில ஆசிரியர்கள், மாணவர்களின் தாக்குதலுக்கு ஆளாகினார்கள். இதனால் இரண்டு ஆசிரியர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள். இவ்வாறான சில சம்பவங்கள் வட பகுதியிலும் நிகழ்ந்திருக்கின்றன. சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்திருந்த காலத்தில் சில இயக்கச் செல்வாக்கு மிக்க மாணவர்களால், ஆசிரியர்கள் மட்டுமல்ல அப்பாவி மக்களும் பயமுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

1989ஆம் ஆண்டுக் கிளர்ச்சியின் போது தெற்கில் சூரியகந்த என்ற இடத்தில் முப்பத்திரண்டு மாணவர்கள் ஆயுதப் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்டு, புதைக்கப்பட்டிருக்கிறார்கள் காணாமல் போன தம் பிள்ளைகளைத் தேடிப் பெற்றோர்கள் நாயாய், பேயாய் அலைந்திருக்கிறார்கள். சூரியகந்த படுகொலைகள் 1994ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தில் மிக முக்கியமான ஒன்றாக சுதந்திரக் கட்சியினால் பயன்படுத்தப்பட்டது. மாணவர்கள் மத்தியில் ஜே.வி.பி. தனது அரசியல் வகுப்புகளையும், சட்ட விரோதச் செயற்பாடுகளையும் மேற்கொண்டமையையும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்திருக்கலாம். ஜே.வி.பி. தனது ஐந்து அரசியல் வகுப்புகளை பாடசாலைகளில் நடாத்தி, தனது ஆயுதப் புரட்சிக்கு ஆயிரக்கணக்கான மாணவர்களை அணிதிரட்டி, பலிகொடுத்ததுதான் மிச்சம். இவ்வாறு வடக்கிலும், கிழக்கிலும் கூட இடம்பெற்றிருக்கின்றன.

பாடசாலை மாணவர்களாயினும் சரி, பல்கலைக்கழக மாணவர்களாயினும் சரி, சமூக அக்கறை கொண்டவர்களால் வழி நடத்தப்படுவதில் தவறில்லை. ஆனால் அவர்கள் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளின் எடுபிடிகளாக, மாறி தமது வாழ்க்கையைச் சீரழிப்பது பாரிய பேரழிவாகும். நேற்று கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் முன்னெடுக்கும் ஆசிரியர்கள், அதிபர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் பாராட்டப்பட்டிருக்கிறார்கள். இது வரவேற்கப்படக்கூடிய ஒன்றுதான். இருந்தாலும் இன்று கல்வி வர்த்தக மயமாக்கப்பட்டு விட்டது. அரசாங்கப் பாடசாலைகளுக்குள் அரசியல் புல்லுருவிகள் ஊடுருவி இருக்கிறார்கள். ஆசிரியர்கள், பாடசாலைகளில் கற்பித்தலை விடுத்து, தனியார் கல்வி நிலையங்களுக்கு மாணவர்களை அழைத்து பணம் தேடும் ஒரு பொருளாக கல்வியை மாற்றிவிட்டார்கள்.

ஒரு காலத்தில் ஆசிரியர்கள் எந்த இலாபத்தையும் எதிர்பாராமல் பிரத்தியேக வகுப்புகளைப் பாடசாலைகளிலேயே நடாத்தி இருக்கிறார்கள். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கூட அன்றைய ஆசிரியர்கள் மாணவர்களின் நலன் கருதி பிரத்தியேக வகுப்புகளை நடாத்தி இருக்கிறார்கள் இன்று நிலைமைகள் எல்லாம் தலை கீழாகவே மாறிவிட்டன.

ஆசிரியர்களுக்கெதிராக, மாணவர்கள், முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கு முறைப்பாட்டுப் பெட்டிகளை பாடசாலைகளிலேயே வைப்பதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை முன்வந்துள்ளது. சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பாடசாலைகளில் இடம்பெறும் அடாவடித்தனங்கள் குறித்து விசாரணை நடாத்துவதற்காகவும், கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காகவும் இந்த நடவடிக்கையை எடுக்க வேண்டியிருப்பதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை காரணம் காட்டுகிறது. ஆனால் இவ்வாறான நடவடிக்கை போலியான குற்றச்சாட்டுகளையும், முறைப்பாடுகளையும் முன்வைப்பதற்கு ஓர் காரணியாக அமைந்துவிடும். நோயைத் தீர்ப்பதற்கு சிகிச்சை அளிப்பதற்குப் பதிலாக நோயை அதிகரிக்கச் செய்யும் செயலாக இது மாறிவிடும்.

சமூகத்தில் நல்லவர்களும் இருக்கிறார்கள், கெட்டவர்களும் இருக்கிறார்கள், புனிதர்களும் இருக்கிறார்கள், புல்லுருவிகளும் இருக்கிறார்கள். எனவே தவறுகளையும், குற்றங்களையும் சமூகத்திலிருந்து ஒரேயடியாக விரட்டிவிட முடியாது. இந்த வகையில் ஆசிரியர்களானாலும் சரி, மாணவர்களானாலும் சரி விதி விலக்கானவர்கள் அல்லர். சமூக அக்கறை கொண்டவர்களுக்கு ஓர் தார்மீகப் பொறுப்பு இருக்கிறது. மாணவர்களை மட்டுமல்ல, ஆசிரியர்களையும் கூட வழிநடாத்திச் செல்ல வேண்டிய தார்மீகப் பொறுப்பு மதஸ்தாபனங்கள், சிவில் சமூகத்தினர் ஆகியோரிடத்திலும் உண்டு.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com


# ரஜனி திரணகம படுகொலை - கருத்துச் சுதந்திரத்திற்கு சாவுமணி

(நேற்றைய தொடர்ச்சி)

யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளரும், இலங்கை அரசினதும், இந்தியப் படையினரதும், தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட ஈழ விடுதலைப் போராட்ட இயக்கங்களின் மக்கள் விரோத செயற்பாடுகளை தொகுத்து யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகவிருந்த ராஜன் ஹூல், தயா சோமசுந்தரம், கே. சிறீதரன் ஆகியோருடன் இணைந்து 'முறிந்த பனை' என்ற நூலை வெளியிட்டிருந்தவரும், மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்கள் என்ற அமைப்பை உருவாக்கியவர்களில் ஒருவரும், வடக்குக் கிழக்கில் நடந்த யுத்தத்தின் போது பாதிப்புக்கும், குண்டுத் தாக்குதலுக்கும் உள்ளானவர்களுக்கு நிவாரண உதவிகளை செய்து வந்த "பூரணி இல்லம்" என்ற அமைப்பை உருவாக்கி செயற்பட்டவருமான ரஜனி திரணகம தமிழீழ விடுதலைப் புலிகளால் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு முன் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பொஸ்கோ என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ரஜனி திரணகம படுகொலையானது "முறிந்த பனை" என்ற நூலை வெளியிட்டதற்கான "பரிசாகவும்", கருத்துச் சுதந்திரத்தின் மீதான புலிகளின் தொடர்ந்துவரும் தாக்குதலாகவும் இருந்த அதேவேளை நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட படுகொலையாகவும் இருந்தது. இக்கொலை பொஸ்கோவினால் மேற்கொள்ளப் பட்டிருந்தபோதும் ரஜனி திரணகமவின் நடவடிக்கைகளையும் நடமாட்டத்தையும் உளவு பார்த்து ரஜனியை பொஸ்கோவிற்கு இனங்காட்டியவர்கள் யாழ்ப்பாண கழக மருத்துவ பீடத்தில் ரஜனி திரணகமவின் மாணவர்களாகவிருந்த இருவராவர்.

"நாங்கள் இந்தத் தலைமுறையில் வருந்த வேண்டி இருப்பது கொடியவர்களின் ஈனச் செயல்களுக்காக மட்டுமல்ல



நல்லவர்கள் எனப்படுபவர்களின் மௌனத்திற்காகவும்தான்" என்ற மார்ட்டின் லூதர் கிங்கின் மேற்கோளுடன் வெளியான "முறிந்த பனை" ஆசிரியர் ரஜனி திரணகமவின் கொலையின் பின்பும் "நல்லவர்கள் எனப்படுபவர்களின் மௌனம்" தொடர்ந்து கொண்டிருந்தது.

புலிகளின் இலக்கு ரஜனி திரணகமவாக மட்டும் இருந்து விடவில்லை இடதுசாரி இயக்கங்களில் அங்கம் வகித்தவர்கள் (அண்ணாமலை, விஜயானந்தன்), புத்திஜீவிகள், தமது கருத்துடன் உடன்பாடு காணதவர்கள் என உரிமை கோரப்படாத படுகொலைகள் தொடர்ந்து கொண்டிருந்தன.

# 1970களில் விசுவமடுவில் விவசாயப்படை முகாம்

விசுவமடு - தருமபுரம் பகுதிகளில் 1970ல் இராணுவப் பிரசன்னம் இருந்ததிற்கான காரணத்தை, அதன் பின்னணியுடன் முழுமையாக விளங்கிக் கொள்வது அவசியம். 1965 பொதுத் தேர்தலின் பின்னர் பிரதமர் டட்லி சேனநாயக்க தலைமையில் ஏழு கட்சிகளைக் கொண்ட கூட்டரசாங்கம் ஒன்று பதவிக்கு வந்தது. இந்த அரசாங்கத்தில் தீவிர சிங்கள இனவாதிகளான கே.எம்.பி ராஜரத்ன, ஆர்.ஜீ.சேனநாயக்க போன்றோரும், தமிழ் கட்சிகளான தமிழரசு - தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் ஒன்றாக இணைந்தனர். எதிரும் புதிருமான இனவாதங்களை அவர்கள் பேசி வந்தாலும், பிற்போக்கு வர்க்க அரசியல் கொள்கைகள் அவர்களை ஒன்று சேர்த்தது.

அந்த அரசில் தமிழரசுக் கட்சியின் சார்பாக மு.திருச்செல்வம் (புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியினால் கொல்லப்பட்ட நீலன் திருச்செல்வத்தின் தந்தையார்) உள்ளூராட்சி அமைச்சராகவும், தமிழ் காங்கிரஸ் கட்சியின் உடுப்பிட்டித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் மு.சிவசிதம்பரம் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கத்தையும், அக்கட்சியின் யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரனையும் கொழும்பில் வைத்துச் சுட்டுப் படுகொலை செய்த போது, அவர்களுடன் உடனிருந்து காயமடைந்தவர்) உதவி சபாநாயகராகவும் பதவி வகித்தனர்.

அந்த டட்லியின் அரசாங்கம் தனது விதேசிய சார்பு கொள்கைகளுக்கு இணங்க, உலக வங்கியின் ஆணைப்படி, பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வந்த அரிசி மானியத்தை வெட்டியதுடன், ரூபாயின் மதிப்பையும் 20 வீதத்தால் குறைத்தது. அதுமாத்திரமின்றி, வடபகுதி விவசாயிகளின் பிரதான உற்பத்திப் பொருட்களான வெங்காயம், மிளகாய் என்பனவற்றையும், மீனவர்கள் உற்பத்தி செய்த கருவாடு போன்றவற்றையும் கட்டுப்பாடின்றி இறக்குவதற்கு தனிப்பட்ட முதலாளிகளுக்கு அனுமதி வழங்கி, விவசாயிகள், மீனவர்கள் வயிற்றில் அடித்தது. அதற்கு தமிழ் கட்சிகள் இரண்டும் உடந்தையாகவே செயல்பட்டன.

இவ்வளவற்றையும் செய்து கொண்டு, விவசாய உற்பத்தியைப் பெருக்குவதாக பெரும் தடபுடல் பிரச்சாரத்தையும் செய்து வந்தது. அதன் நிமித்தம் வவுனியா போன்ற இடங்களிலிருந்த குளங்களையும், அதன் அருகிலிருந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் காட்டு நிலங்களையும் தனிப்பட்ட முதலாளிகளுக்குத் தாரை வார்த்தது. மகாவலி கங்கையை வடக்கே திருப்பப் போவதாகச் சொல்லிக் கொண்டு, அந்த நதி வடக்கே கொண்டுவரப்படும் வழி என எதிர்பார்க்கப்பட்ட நெடுங்கேணிப் பகுதியிலிருந்த நூற்றுக்கணக்கான வளமிக்க காணிகளை வட பகுதியிலிருந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், கம்பனிகளுக்கும் வாரி வழங்கியதுடன், அவர்கள் அக்காணிகளுக்கு போய் வருவதற்கென இலவசமாக ஜீப் வண்டிகளையும், காணிகளைச் செப்பனிடுவதற்கென பல இலட்சம் ரூபாய் பணத்தையும் கொடுத்தது.

அவ்வாறு காணிகளைப் பெற்றவர்களில் தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்றோரும், கம்பனிகளில் யானை பீடிக் கம்பனி, ஆர்.வி.ஜீ. பீடிக் கம்பனி, கல்கி பீடிக் கம்பனி, மாவிட்டபுரம் டொலர் அலுமனியத் தொழிற்சாலை போன்றவையும் அடக்கம். (பின்னர் இந்த நிலங்களில் 1977ல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐ.தே.க அரசாங்கம், சிங்களச் சிறைக்கைதிகளைக் குடும்பங்களுடன் குடியேற்றியதும், அவர்களைக் குடும்பங்களாகவே புலிகள் படுகொலை செய்ததும் பின்னாளில் நடந்த சம்பவங்கள்)

டட்லியின் அரசாங்கத்தின் உணவுற்பத்தி வாயளவிலும், பத்திரிகைகள் அளவிலும், விழாக்கள் அளவிலும் இருந்ததேயொழிய, நடைமுறையில் எதுவும் நடைபெறவில்லை. தனது கமராவினால் படம் பிடிக்கும் வேலை மட்டும்தான் ஒழுங்காக நடந்து வந்தது. **(தொடர்ச்சி நாளை)**

# கடைசிவரை போராட நினைத்த புலிகளும் தவறு;....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**எரிக் சொல்ஹேய்ம் பதில்:**
இலங்கையின் சமாதானத்துக்காக முன்முயற்சி எடுத்த உதவி-வழங்கும் நாடுகளான ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நார்வேஆகியநாடுகள் இணைந்து 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒருயோசனையை முன்வைத்தன. ஐநா மன்றமும் இதன் பின்னணியில் இருந்தது. அன்றையநிலைமையில் போரின் முடிவு இலங்கை அரசுக்கு இராணுவ ரீதியிலானவெற்றியாக அமை யும் என்பதுஎல்லோருக்கும் தெரிந்த நிலையில்,போரின் முடிவில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்படும் பேரழிவை தடுக்கும் வகையில் போரை முறையாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்கிறயோசனையை நாங்கள் முன்வைத்தோம்.

அந்த திட்டத்தின் முழுமையான இறுதிவடிவமும் விடுதலைப் புலிகளும் இலங்கைஅரசும் ஒப்புக கொண்ட பிறகு தான் முடிவுசெய்யப்பட்டிருக்கும். ஆனால் அதற்கு அடிப்படையாக நாங்கள் தெரிவித்த நடைமுறை யோசனை என்ன வென்றால், சர்வதேச அமைப்பு,உதாரணமாகஅமெரிக்கா, இந்தியா அல்லது வேறு ஒருநாடு இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிக்கு ஒருபெரியகப்பலை அனுப்பி வைப்பது என்றும், அதில் ஐநாமன்ற அதிகாரிகளோ அல்லதுமற்றசர்வதேசஅமைப்பை சேர்ந்தவர்களோ இருந்து,போரின் இறுதியில் எஞ்சியிருந்த அனைத்து புலிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் ஒருவர் விடாமல் கணக கெடுத்துபுகைப்படத்துடன் பதிவு செய்வதுஎன்றும் தெரிவித்திருந்தோம். அவர்கள் அனைவரும் கொழும்பு கொண்டு செல்லப்பட்டு அவர்களிடமிருந்த ஆயுதங்களைஒப்படைத்தபிறகு,புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் ஆகிய இருவர் தவிர்த்த மற்ற அனைவருக்கும் பொதுமன்னிப்புவழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அப்படி நடந்திருந்தால், சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் சர்வதேச அமைப்புக்களால் பதிவு செய்யப்பட்டவர்களை இலங்கை அரசால் நினைத்தமாத்திரத்தில் கொல்ல முடிந்திருக்காது.

எங்களின் இந்த யோசனை மட்டும் ஏற்கப்பட்டிருந்தால், இறுதிகட்டத்தில் கொல்லப்பட்ட புலிகள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானபேர் இன்று நம்மிடையே உயிருடன் இருந்திருப்பார்கள்.

ஏப்ரல் மாதம் இந்ததிட்டத்தின் இறுதி வடிவத்தை முடிவு செய்வதற்காக புலிகள் அமைப்பின் சர்வதேசபேச்சாளர் குமரன் பத்மநாதன் ஒஸ்லோவுக்கு வருவதாக திட்டமிடப்பட்டி ருந்தது. ஆனால் கடைசி நிமிடத் தில் பிரபாகரன் அவரைதடுத்து விட்டார்.

எங்களின் பாதுகாப்பு அதிகாரிகள் அவரைப் பத்திரமாக அழைத்து வருவதற்காக கோலாலம்பூருக்கே சென்றிருந்தனர். ஆனால் இந்தத் திட்டம் தங்களுக்கு ஏற்படையதல்ல என்று எங்களுக்கு செய்தி சொல்லப்பட்டது. எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

**கேள்வி:** இந்ததிட்டத்திற்கு இலங்கை அரசின் ஒப்புதல் இருந்ததா?

**சொல்ஹேய்ம் பதில்:** அந்தநாட்களில் நான் இலங்கைக்குச் செல்லவில்லை. ஆனால் ஒஸ்லோவில் இருக்கும் இலங்கைத் தூதரகம் மூலமாகவும்,மற்ற தூதரகங்கள் மூலமாகவும் இலங்கை அரசதரப்புடன் எங்களுக்கு இருந்த தொடர்புகள் மூலமாகவும் இலங்கை அரசுடன் நாங்கள் நிறைய பேச்சுவார்த்தைகள் நடத்தினோம். அவர்களுடன் பேசியதிலிருந்து முழுமையான இராணுவ ரீதியிலான வெற்றியைப் பெறுவதே இலங்கை அரசின் பெரும்பாலானவர்கள் விரும்புகிறார்கள் என்கிற உணர்வையேநாங்கள் பெற்றோம். அதேசமயம்,புலிகள் இந்த திட்டத்திற்குஒப்புதல் வழங்கியிருந்தால் இலங்கை அரசுக்கு அதற்கு சம்மதிப்பதைத் தவிர வேறு வழி இருந்திருக்காது என்றே எங்களுக்குதோன்றியது.

**கேள்வி:** இந்ததிட்டத்திற்கு இலங்கைஅரசுஒப்புக்கொண்டிருக்கும் என்றுஎதைவைத்துநீங்கள் நம்புகிறீர்கள்?

**பதில்:** அவர்களுக்கு இதில் விருப்பம் இருக்கிறதோ இல்லையோ, அவர்கள் இதை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டிய நிலைமையே இருந்தது.

காரணம் இந்தியா வும், அமெரிக்காவும் மற்ற வர்களும் இதில் உறுதி காட்டி யிருப்பார்கள், ஒட்டுமொத்தச் சர்வதேச சமூகத்தினரும் இதில் ஒன்றாகவும் உறுதியாகவும் குரல் கொடுத்திருப்பார்கள். இலங்கை அரசில் தயக்கம் இருந்திருந்தாலும் அவர்களுக்குவேறு வழி இருந்திருக்காது.

**கேள்வி:** அப்படியானால், இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு முதன்மையான பொறுப்பு புலிகளின் தலைமையை சாரும் என்கிறீர்களா?

**பதில்:** போரின் இறுதி முடிவு என்னவாக இருக்கப் போகிறது என்பதை அனைவரும் உணர்ந்த நிலையிலும் போரை ஒழுங்குபடுத்தப்பட்டமுறையில் முடிக்காமல் கடைசிவரை போராட வேண்டும் என்று பிரபாகரன் உள்ளிட்ட புலிகள் அமைப்பின் தலைமை முடிவெடுத்தது மிகப்பெரிய வரலாற்று தவறு என்றேநான் நினைக்கிறேன். அதேசமயம், இதைக்காரணமாகக் காட்டி இலங்கை அரசு நடத்தியகுறிவைத்ததாக்குதல்களைஙியாயப்படுத்தமுடியாது. மக்கள் செறிவாகவாழும் பகுதிகள் என்று தெரிந்தே, இலங்கை அரசு தாக்குதல்களை நடத்தியது என்பதற்கான பல சான்றுகள், அறிக்கைகள் வெளிவந்துள்ளன. அதிலும் குறிப்பாகதுப்பாக்கிச் சூடுகள் நடத்தமுடியாத "பாதுகாப்புவலயம்" என்று அரசே ஒரு பகுதியைஅறிவிப்பதும் அந்த பகுதிக்குமக்கள் வந்த பிறகு அங்கே குறி வைத்துதாக்குதல் நடத்துவதுமாக அரசு செயற்பட்டிருக்கிறது என்பதற்கான வலுவான சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

**கேள்வி:** இந்ததிட்டத்திற்கு இந்திய அரசின் ஒப்புதல் இருந்ததா?

**பதில்:** புலிகள் அமைப்பு தொடர்பாக இந்தியஅரசில் கொஞ்சம் கூட அனுதாபம் இல்லை. ராஜீவ் காந்தி கொலை உட்படபல்வேறுகாரணங்கள் இதற்கு பின்னணியில் இருக்கின்றன. ஆனால் அதேசமயம், இறுதிக் கட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்படக் கூடாது என்பதுகுறித்துஅங்கேகரிசனைகாணப்பட்டது.

**தமிழோசைகேள்வி:** நீங்கள் இறுதியாகமுன்வைத்ததிட்டத்திற்கு இந்தியஅரசின் ஒப்புதல் இருந்ததா இல்லையா?

**பதில்:** இலங்கைப்பிரச்சினையில் நான் ஈடுபட்டிருந்த பத்து ஆண்டுகாலங்களில் இந்தியாவுக்கு தெரிவிக்காமல் நான் எந்தத்திட்டத்தையும் முன்னெடுத்ததில்லை. இந்தத்திட்டத்தை இந்தியாஏற்றிருக்கும் என்பதிலும் இந்தத்திட்டத்தின் ஒருபகுதியாக இந்திய அரசும் இருந்திருக்கும் என்பதிலும் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை.

**கேள்வி:** இப்படிஒருதிட்டம் இருந்ததாக நீங்கள் இப்போது கூறும் கருத்துக்கள் உண்மையா என்பதற்குஎன்னஆதாரம்?

**பதில்:** 2009 ஆம் ஆண்டில் நடந்த இந்தவிடயங்கள், கொழும்பில் இருக்கும் அமெரிக்க தூதரகத்தின் தகவல் பரிமாற்றங்கள் மற்றும் அதுதொடர்பானமற்ற ராஜீய தகவல் பரிமாற்றங்கள் அனைத்தும் விகிலீக்ஸில் வெளியாகியிருக்கின்றன.

அவற்றில் இருக்கும் தகவல்களை அணுகிப் பார்த்தால் இந்தக் கூற்றுக்கான ஆதாரங்கள் அதில் இருக்கின்றன.

## பேஸ்புக் ஊடாக ருவென்ரி-20 டிக்கெட் விற்ற மாணவன் கைது

கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கையில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு 20 கிரிக்கெட் இறுதிப் போட்டியை பார்வையிடுவதற்காக 1540 ரூபா பெறுமதியான டிக்கெட்டை 14ஆயிரம் ரூபாவுக்கு தனது முகப்புத்தகத்தினூடாக விற்க முயன்ற மாணவனொருவனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெள்ளவத்தையை வசிப்பிடமாகக் கொண்ட சர்வதேச பாடசாலையில் கல்வி கற்கின்ற 17 வயதுடைய மாணவனான இவரை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

## கல்விக்கு 6 சதவீதம் என்ற கோரிக்கையை கைவிடுவோம்

### -பல்கலை ஆசிரியர்கள் சங்க சம்மேளனம்

"அரசாங்கத்தின் முன்மொழிவுகளை ஆராய்ந்து வேலை நிறுத்தம் தொடர்பில் முக்கிய தீர்மானம் எடுக்கப்படும்" என பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனத்தின் நிறைவேற்றுக்குழு கூறியுள்ளது.

பிரதான கோரிக்கைகளில் ஒன்றான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கல்வி 6 சதவீதத்தை செலவளித்தல் என்பது கைவிடப்படும். ஏனெனில் அது சாத்தியமற்றது என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்தியுள்ளது.

எனினும் ஏனைய விடயங்களில் "இன்னும் இறுதி தீர்மானம் ஏதும் எடுக்கப்படவில்லை. நடைபெறும் பேச்சுவார்த்தையில் திருப்தியான முடிவு கிடைக்குமாயின் மட்டுமே நாம் வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவோம்" என பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் தேவசிறி கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் எமது கொள்கையை கைவிடவில்லை. கல்விக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதத்தை செலவளிப்பதற்காக நாம் தொடர்ந்தும் போராடுவோம். பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ எமது கோரிக்கைகள் பலவற்றுக்காக சாதகமான பதிலளித்தார். இருப்பினும் இன்னும் எழுத்து வடிவ ஒப்பந்தம் ஏற்படவில்லை.

கடந்த 3 மாத சம்பளத்துக்கான சம்பள நிலுவை வழங்கவும் ராஜபக்ஷ சம்மதித்துள்ளார். பல பாதகமான சுற்றரிக்கைகளை மீளப்பெற்றுக்கொள்ளல், சில விரிவுரையாளர்கள் மீது பழிவாங்கல் பற்றிய பிரச்சினையை தீர்த்து வைத்தல், கொள்கை ரீதியான வேறு தீர்மானங்கள் போன்ற விடயங்களுக்கு தீர்வு காண அமைச்சர் பசில் ராஜபக்ஷ சம்மதித்தார்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி

(உடுவில்)

யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலய மாணவர்கள் ஐந்து பேர் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள்.

இ.மேனகை (172 புள்ளிகள்), ஜெ.கஜப்பிரதாப் (171 புள்ளிகள்), ம.வக்சிகா (170 புள்ளிகள்), பா.விஸ்ணுகரசர்மா (151 புள்ளிகள்), ம.தனுஸ்கான் (149 புள்ளிகள்) ஆகியோர் சித்தியடைந்துள்ளார்கள்.

இப்பாடசாலையைச் சேர்ந்த மேலும் 25 பேர் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளார்கள்.

## நோர்வேயின் மனிதாபிமானமற்ற செயற்பாடு குறித்து ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் கவனம் தேவை

ஒஸ்லோவில் இடம்பெற்றுவரும் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் 10ஆவது நாளாகவும் நீடித்திருக்கின்ற நிலைமை தொடர்பில் நோர்வேயின் சிறுவர் விவகார அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ள போதிலும் இது வரையில் அமைச்சோ அல்லது நோர்வே அரசோ அலட்சியப் போக்கினையே கடைப்பிடித்து வருவதாக உண்ணாவிரதப் போராளிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஒஸ்லோ டொம் தேவாலயத்தில் சாகும் வரையில் உண்ணாவிரதம் இருந்து வரும் ரஜித்தா ஆனந்ததராசா மற்றும் டிலாந்தினி எரிக் ஜோசப் ஆகியோரை கடந்த திங்கட்கிழமை பரிசோதனைக்குட்படுத்திய வைத்திய அதிகாரிகள் அவர்களது உடல்நிலை மோசமடைந்து வருவதாக அறிவித்துள்ளனர்.

மேற்படி சாகும்வரையில் உண்ணாவிரதம் இருந்துவரும் இலங்கைத் தாய்மார் தொடர்பான செய்திகள் நோர்வே ஊடகங்களில் வெளிவராத வண்ணம் நோர்வே அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாக பாதிக்கப்பட்டோர் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன் நோர்வே அரசாங்கம் மற்றும் அங்குள்ள சிறுவர் விவகார அமைச்சு ஆகிய தரப்புகள் இவ்விடயம் தொடர்பில் அறிந்திருக்கின்ற போதிலும் இது வரையில் எந்தவொரு பதிலும் தராதிருப்பதாக தெரிவித்துள்ள பாதிக்கப்பட்ட தரப்பினர் நோர்வே அரசு திட்டமிட்ட வகையில் செயற்பட்டு வருவதாகவும் கூறியுள்ளனர்.

எது எவ்வாறு இருப்பினும் நோர்வே அரசாங்கத்திடமிருந்து தமது பிள்ளைகள் தொடர்பில் சாதகமான பதில் ஒன்று கிடைக்கும் வரையில் டொம் தேவாலயத்தைவிட்டு நகரப்போவ தில்லையென்றும் நோர்வே அரசின் பிடிவாத குணத்தை சர்வதேசத்திற்கு தெரியப்படுத்தும் வகையில் டொம் தேவாலயத்திற்குள்ளேயே தமது உயிரை விடுவதற்கும் துணிந்தி ருப்பதாக மேற்படி இருதாய் மாரும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர். நோர்வே அரசாங்கத்தின் பொய்த்தகவல்கள், நேர்மையற்ற நடவடிக்கைகள் மற்றும் மனிதாபி மானமற்ற செயற்பாடுகள் குறித்து ஜெனீவா மனித உரிமைகள் பேரவை மற்றும் ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு மையம் ஆகியன கவனம் செலுத்த வேண்டும் என்றும் உண்ணாவிரதப் போராளிகளான தாய்மார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நிறுவை, அளவை கருவிகளுக்கு முத்திரையிடல்


(உடுவில்)

வலி.கிழக்கு கோப்பாய்ப் பிரதேச சபைப் பிரிவில் உள்ள உரும்பிராய் உப அலுவலகப் பகுதியில் நிறுவை மற்றும் அளவை கருவிகளுக்கு முத்திரையிடும் பணி இடம்பெயவுள்ளது.

எதிர்வரும் 15 மற்றும் 16ஆம் திகதிகளில் உரும்பிராய் உப அலுவலகத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையும் நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடப்படவுள்ளது.

குறிப்பிட்ட தினங்களில் உரும்பிராய் உப அலுவலகப் பகுதியில் உள்ள வர்த்தகர்கள் தமது நிறுவை மற்றும் அளவைப் கருவிகளுக்கு முத்திரையிட்டுப் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# உணர்வுகளை
# உறவுகளை
# வந்ததே உல




உலகின் பல்வேறு நாடுகளுக்குரிய புவியியல், அரசியல், மதம் போன்ற பல்வேறு எல்லை மற்றும் தடைகளைத் தாண்டி எமது மக்களை முழு உலகுக்கும் இணைக்கின்றோம். மக்கள் அவர்களுக்கே உரிய பிரத்தியேகமானதும், மிகப் பெறுமதி வாய்ந்ததுமான தகவல்களையும், பொருட்களையும் எம்மிடம் ஒப்படைப்பது அவற்றைப் பாதுகாத்து மிக வேகமாகவும், மிகக் கவனத்துடனும், அதன் உரிமையாளர்களுக்கு ஒப்படைப்பார்கள் என்ற எம்மீதுள்ள பெருநம்பிக்கை என்பதை நாம் அறிந்துள்ளதோடு அவர்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை உயர் செயற் திறமையுடனும், நேர்மையுடனும், பாதுகாப்போம்.

ஆதிமனிதன் இடம்பெயராமல் இருந்ததால் அவனுக்குச் செய்திப் பரிமாற்றம் அவசியப்படவில்லை. பின்னர் ஏற்பட்ட பல்வகையான காரணிகளின் நிமித்தம் மனிதன் இடம்பெயர ஆரம்பித்தான். அச்சமயம்தான் முதல் முதலாக செய்திப் பரிமாற்றத்தின் அவசியம் உணரப்பட்டது. செய்தியைத் தூர இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு ஒரு சாதனம் தேவைப்பட்டது.

இதற்காக ஆதிமனிதன் முதலில் தன் குரலையே அதி வேகத்துடன் ஒலிபரப்பினான். பின்வந்த காலத்தில் பல்வகையான பொருட்களினால் விதவிதமான ஒலிகளை எழுப்பி தன் வேறுபட்ட செய்திகளை அறிவித்தான். அம்பு, வில் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் அம்பில் தனது செய்தியை அனுப்பி வைத்தான். அதேசமயம் இரகசியமான செய்திகளை அடிமைகள் வாயிலாகச் சொல்லியனுப்ப ஆரம்பித்தான்.

எழுதப்படிக்க ஆரம்பித்த காலங்களில் செய்தி அனுப்பும் துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. இக்காலத்தில் புறாக்களும் வல்லூறுகளும் மற்றும் மிருகங்களும் கூட செய்தியை எடுத்துச் செல்லப் பயன்பட்டன. நீர் நிலைகள், கானகங்கள் கடந்து செல்வதற்குப் புறாக்கள் மிகவும் உதவியாக இருந்தன. பின்னர் போக்குவரத்திற்கான பாதைகள் ஏற்பட்ட காலத்தில் மனிதனே செய்தியை எடுத்துச்செல்ல ஆரம்பித்தான்.

ஒரு அடிமையின் தலையை மொட்டையடித்து தலையில் செய்தியை எழுதி மயிர் வளர்ந்த பின் அவனைக் குறிப்பிட்ட இடத்திற்கு அனுப்பி அங்கு மீண்டும் மொட்டையடிக்கப்பட்டு செய்தி வாசிக்கப்பட்டது. பின்னர் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டு தூதுவனிடம் கொடுத்தனுப்பப்பட்டது. கிரேக்கர்களின் இராச்சியத்தில் வாழ்ந்த மரத்தான் எனும் செய்திப் பிரிவு வீரன் ஒருத்தன் அவசரமான ஒரு யுத்தச் செய்தியை அறிவிப்பதற்காக இடைவிடாது 26 மைல்கள் தூரம் ஓடிச் சென்று செய்தியை அறிவித்த பின் மூச்சிரைத்து இறந்து போனான். இவனது தியாகம் காரணமாகவே சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளில் இன்றும் மரதன் ஓட்டம் நடத்தப்படுகிறது.

தொடர்ந்து ஒரு மனிதனை ஓடச் செய்யாமல் குறிப்பிட்ட தூரத்திற்கொரு வீரனை நிறுத்தி செய்திகள் எழுதப்பட்ட குழலைப் பரிமாறும் உத்தி கண்டுபிடிக்கப்பட்ட பின் தகவல் பரிமாற்றம் எளிதாயிற்று. அஞ்சல் ஓட்டத்தின் வரலாறு இதிலிருந்தே ஆரம்பிக்கின்றது. இந்த அஞ்சல் வீரர்கள் காடு, மலை, நீர்நிலைகள் கடந்து ஓடியே அஞ்சல் பரிமாற்றம் செய்தனர். பின்னர் தூர இடங்களுக்கு குதிரை வீரர்கள் அஞ்சல் செய்தனர். பொதுவாக உலக அஞ்சல் வரலாறு மேற்கண்டவாறு ஆரம்பித்தது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் 1500 களில் ஆண்ட போர்த்துக்கேயர் காலத்திலும் 1600 களில் ஆண்ட ஒல்லாந்தர் காலத்திலும் அஞ்சல் துறையில் போதிய வளர்ச்சிகளோ அபிவிருத்திகளோ காணப்படவில்லை. 1700 களில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே அஞ்சல் துறையில் துரித வளர்ச்சியும் அபிவிருத்தியும் நவீன தொடர்பாடல் உத்திகளும் ஏற்பட்டன.

குறிப்பாக இலங்கையில் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பனியாரின் தகவல் பரிமாற்ற வசதிக்காக இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான ஒரு ஒழுங்கமைக்கப்படாத தபால் சேவை கெப்டன் ஏ.கென்னடி என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. அதன்பின்னர் 1804 தொடக்கம் 1817ஆம் ஆண்டு வரை அஞ்சல் துறையின் தலைமைப் பொறுப்பிலிருந்த திரு. ஈ.பிளாட்டமன் அவர்கள் 1815ல் நமது நாட்டில் கொழும்பு, காலி, மாத்தறை, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய ஆறு இடங்களில் அஞ்சல் அலுவலகங்களை ஆரம்பித்தார். 1832ல் ஆசியாவிலேயே முதல் தடவையாக கொழும்புக்கும் கண்டிக்கும் இடையிலான குதிரை வண்டித் தபால்சேவை ஆரம்பிக்கப்பட்டது.

1838இல் இச்சேவை கொழும்புக்கும் காலிக்குமிடையில் விஸ்தரிக்கப்பட்டது. 1850இல் கொழும்புக்கும் காலிக்கும் இடையில் அவசர தபால் சேவை பழக்கப்பட்ட தபால் புறாக்கள் மூலம் அனுப்பப்பட்டது.

1857 ஏப்ரல் முதலாம் திகதி 6 பென்ஸ் பெறுமதியானதும் விக்டோரியா மகாராணியாரின் தலையுருவம் கொண்டதுமான முத்திரை வெளியிடப்பட்டது. (உலகின் முதல் முத்திரை இங்கிலாந்தில் 1840இல் ஒரு பென்ஸ் பெறுமதியில் வெளியானது)

இலங்கையில் புகையிரதச் சேவை வந்ததன் பின்னர் முதல் தடவையாக 1865இல் கொழும்புக்கும் அம்பேபுஸ்ஸவுக்கும் இடையிலான தபால் புகையிரத சேவை உருவாக்கப்பட்டது. 1867இல் தனியாருக்கான தபால் பை, தபால் பெட்டி, சேவைகள் கொழும்பிலும் கண்டியிலும் ஆரம்பிக்கப்பட்டன. 1872 ஒகஸ்ட் 22இல் தான் முதன் முறையாக தபால் அட்டை வெளியானது.

1873இல் கொழும்புக்கும் இங்கிலாந்துக்குமிடையிலான காசுக் கட்டளை சேவை ஆரம்பிக்கப்பட்டது. 1877இல் உள்நாட்டு காசுக் கட்டளைச் சேவை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தும் 1877 ஏப்ரல் முதலாம் திகதி இலங்கை அகிலதேச அஞ்சல் சங்கத்தில் ஒரு உறுப்பினராக இணைந்து கொண்டதிலிருந்தும் தபால்துறை துரித அபிவிருத்தி காணத் தொடங்கியது.

1880இல் இலங்கை இந்திய காசுக்கட்டளை சேவை தொடங்கியது. 1885 மே 1இல் அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கியும் ஆரம்பமானது. 1893இல் இலங்கை நாணயப் பெறுமதியில் இரண்டு சதம் பெறுமதியான முத்திரை வெளியிடப்பட்டது. 1895 ஒகஸ்ட் 19ஆம் திகதி கொழும்பு பிரதம அஞ்சல் அலுவலகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பின்னர் 1913 தொடக்கம் 1923 வரை இலங்கையில் அஞ்சலதிபதியாக இருந்த திரு. எப்.ஜே. ஸ்மித் அவர்கள் முதல்முறையாக 6 உப தபால் அலுவலகங்களை அக்மீமன, திவுலப்பிட்டிய, ஆனமடுவ, கிரியெல்ல, மூதூர், சிலாபத்துறை ஆகிய ஆறு இடங்களில் அமைத்தார். 1928இல் இலங்கையின் முதலாவது வான்கடிதம் மாஸெல்ஸ் நகரத்திற்கு விமானத் தபால் வாயிலாகப் பறந்தது.

1936இல் அஞ்சல் அறிமுக அட்டை விநியோகம் செய்யப்பட்டதும் இங்கிலாந்திலிருந்து தபால்கள் விமானம் மூலம் இலங்கையை



04.(i)உலகப் படத்தில் A, B, C, எனும் எழுத்துக்களினால் குறிக்கப்பட்டுள்ள வர்த்தக ரீதியிலான கோதுமை உற்பத்தி செய்யும் நாடுகளும் X, Y, Z எனும் எழுத்துக்களினால் குறிக்கப்பட்டுள்ள வாழ்வாதார தானிய உற்பத்தி செய்யும் நாடுகளையும் அதன் ஒழுங்கில் பெயரிடுக.




(ii)வர்த்தக தானியப் பயிர்ச்செய்கை, வாழ்வாதார தானியப்பயிர்ச் செய்கை முறைகளின் விஷேட பண்புகள் முறையே இவ்விரண்டு தருக.

(iii) (அ) பாற்பண்ணை வேளாண்மையின் அண்மைக்காலப் போக்குகள் மூன்று தருக.
(ஆ) கால்நடை வளர்ப்புத் தொழில் தொடர்பாக எதிர்நோக்கப்படும் மூன்று பிரச்சனைகளை தருக.

05.(i)உலகப்படத்தில் நிலக்கரி, பெற்றோலிய உற்பத்திகளில் முக்கியம் பெற்றுள்ள இவ்விரு நாடுகளின் முறையே தெரிவு செய்து குறித்துப் பெயரிடுக.
(ii)நிலக்கரி பயன்பாட்டினால் சூழலில் ஏற்படும் பாதகமான விளைவுளை பரிசீலிக்குக.
(iii)மாற்று சக்தி வளப்பயன்பாடுகளின் அவசியத்தை குறிப்பிட்டு அவற்றைப் பின்பற்றுவதற்கான வழிமுறைகளையும் குறிப்பிடுக.

## பகுதி III

06.நாட்டில் வழமையான வசிப்பிடங்களிலும் திறந்த வெளிகளிலும் வாழும் நபர்களின் அளவே சனத்தொகையாகும்.
(i) இலங்கைப் படத்தில் சனத்தொகைப் பரம்பல் காணப்படும் முறையை பின்வரும் முறையில் குறித்துப்பெயரிடுக.
(அ) இரண்டு மில்லியனுக்கு மேற்பட்ட சனத்தொகை கொண்ட இரண்டு மாவட்டங்கள்.
(ஆ) ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட சனத்தொகை கொண்ட இரண்டு மாவட்டங்கள்.
(இ) சனத்தொகை குறைவாக உள்ள இரண்டு மாவட்டங்கள்.
(ii)இலங்கையில் சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவடைந்து வருவதற்கான காரணங்கள் நான்கு தருக.
(iii)2030 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் சனத்தொகை தொடர்பாக எதிர்நோக்கப்படும் பிரதான பிரச்சசனைகள் நான்கு தருக.

07.(i)இலங்கையில் மேற்கொள்ளப்படும் மீன்பிடி முறைகள் மூன்றினைப் பெயரிடுவதுடன் நீர் பெயரிட்ட மீன்பிடி முறைகளில் இரண்டினைத் தெரிவு செய்து அவற்றிற்கு முக்கியம் பெறுகின்ற இவ்விரு பகுதிகளைத் தெரிவு செய்து இலங்கைப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
(ii)இலங்கையில் நன்னீர் மீன்பிடித் தொழில் வளர்ச்சி பெறாமைக்கான காரணங்கள் மூன்று தருக.
(iii)இலங்கையில் மீன்பிடித் தொழில் தொடர்பாக எதிர்நோக்கப்படும் பிரச்சனைகளையும் அவற்றிக்கான தீர்வுகளையும் குறிப்பிடுக.

08.பாதுகாப்பாக வசிப்பதற்கும் செயற்பாடுகளுக்குமாக அமைக்கப்பட்ட கூடாரங்களே குடியிருப்பாகும்.
(i)இலங்கையில் காணப்படும் பிரதான குடியிருப்புக்களின் வகைகளை உதாரணங்களுடன் யெரிடுக.
(ii)நீர் பெயரிட்ட குடியிருப்புக்கள் இரண்டைத் தெரிவு செய்து அவற்றின் பிரதான பண்புகளை ஒப்பிடுக.
(iii)இலங்கையில் வாழ்விடங்களை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் அண்மைக்கால குடியிருப்பு அபிவிருத்தி திட்டங்கள் பற்றி ஆராய்க.

09.(i)இலங்கையில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு வகைகளை பெயரிடுவதுடன் வெள்ளப்பெருக்கினால் அதிகம் பாதிப்புக்குள்ளாகும் மூன்று மாவட்டங்களை இலங்கைப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
(ii)இலங்கையின் மத்திய மலைநாட்டுப் பகுதியில் அதிகம் ஏற்படும் இயற்கை அனர்த்தத்தை பெயரிட்டு அது ஏற்படுவதற்கான காரணங்களை விளக்குக.
(iii)இலங்கையின் மத்திய மலைநாட்டுப் பகுதியில் அதிகம் ஏற்படும் இயற்கை அனர்த்தங்களை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளை குறிப்பிடுக.

இப்பத்திரிகை இன்.'.போமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 10.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது


# கல்வி ஒளி

தமிழ்நாதம் 10-10-2012

மாணவர் உலகின் கலங்கரைவிளக்கம் கல்வி 01 ஒளி 17


## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - டிசெம்பர் 2012
## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (மாதிரி வினாத்தாள்)

தொகுப்பு: இரா. கல்பனா

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளிக்க.**

1)தரவு, தகவல் என்பவற்றை சரியாக வகைக் குறிப்பது
a. திவ்யா கணித பாடத்தில் பெற்ற புள்ளி 80, திவ்யாவின் இரண்டாம் தவணையின் சராசரிப் புள்ளி 78.9
b. திவ்யா இரு பாடங்களில் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை 80, திவ்யா கணித பாடத்தில் பெற்ற புள்ளி80
c. திவ்யா இரு பாடங்களில் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை 80, திவ்யாவின் இரண்டாம் தவணையின் சராசரிப் புள்ளி 78.9
d. திவ்யா ஆங்கில பாடத்தில் பெற்ற புள்ளி 90, திவ்யா கணித பாடத்தில் பெற்ற புள்ளி 80.

2)அச்சுப்பொறிகளை அவற்றின் விலைக்கு ஏற்றவாறு ஏறுவரிசைப்படுத்தின்
a. Ink-jet Printer, Dot Matrix Printer, Laser Printer
b. Ink-jet Printer, Laser Printer, Dot Matrix Printer
c. Dot Matrix Printer, Ink-jet Printer, Laser Printer
d. Dot Matrix Printer, Laser Printer, Ink-jet Printer

3)Assembley Language ஐ உள்ளீடாக எடுத்து இயந்திர மொழியை(Machine Language) வெளியீடாக வழங்க பயன்படும் கணினி மொழிபெயர்ப்பை (Translater) எவ்வாறு அழைப்பீர்?
a. தொகுப்பி (Compilers) b. பொருள்கோலி (Interpreter)
c. தவறு நீக்கி (Debugger) d. ஒருங்குசேர்ப்பி (Assembler)

4)விசைப்பலகையில் ஒரு சாவியை அழுத்தும் போது அவ் சாவிக்கான அழுத்தத்தை டிஜை ஆக மாற்றுவது?
a. ANSI b. ASCII c. EBCDIC d. ISO

5)ஒரு படத்தை உள்ளீடு செய்வதற்கான HTML?
a. <image source ="www.cartoons.com/deddy.jpg" alt = "this is cute"/>
b. <img src ="www.cartoons.com/deddy.jpg" alt = "this is cute"/>
c. <img source ="www.cartoons.com/deddy.jpg" alt = "this is cute"/>
d. <img alt = "this is cute">www.cartoons.com/deddy.jpg</img>

6)ஒரு Pixel என்பது
a. படங்களை வரையக்கூடிய ஒரு கணினிமொழி
b. துணை நினைவகத்தில் சேமிக்கப்பட்டிருக்கும் படம்
c. ஒரு படத்தின் மிகச் சிறிய அலகு
d. மேற்கூறிய அனைத்துமல்ல

7) பின்வரும் எவ் நினைவகத்தில் குறைகடத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளது?
a. தற்போக்கு பெறுவழி நினைவகம் b. பதுக்கு நினவகம்
c. இறுவட்டு d. உயும் bபும்

8)வன்வட்டில் செயற்படுவதும் ஏனைய மென்பொருட்கள் செயற்படுவதற்கும் அடித்தளமாக அமைவது எது?
a. செயற்படுத்தும் சூழல் b. பணிசெயல் முறைமை
c. பிரயோக மென்பொருள் d. மேற்கூறிய அனைத்துமல்ல

8)வன்வட்டில் செயற்படுவதும் ஏனைய மென்பொருட்கள் செயற்படுவதற்கும் அடித்தளமாக அமைவது எது?
a. செயற்படுத்தும் சூழல்
b. பணிசெயல் முறைமை
c. பிரயோக மென்பொருள்
d. மேற்கூறிய அனைத்துமல்ல

9)TCP ஜீ என்பதன் விரிவாக்கம்?
a. transmission control protocol / Internet protocol
b. tellephone call protocol / International protocol
c. transport control protocol / Internet protocol
d. மேற்கூறிய அனைத்துமல்ல


10)167 இன் இரும எண்ணும் பதினறும எண்ணும் முறையே
a. 1010001112, 10716
c. 1010001112, A716
b. 101001112, 10716
d. 101001112, A716

11)EBCDIC குறியீட்டு முறையை பிரதிநிதித்துவப்படுத்த எத்தனை பிட்கள் பயன்படுகின்றன?
a. 7 b. 8 c. 16 d. 4

12)c\hவின் வீட்டில் பாதுகாப்பை மேம்படுத்த படலையை பயன்படுத்துகின்றனர். அவ் வீட்டின் உள்ளே செல்வதற்கு இரு வழிகள் உண்டு. ஒருவர் உள்ளே நுழையும் போது காவலாளி அறையில் சிவப்பு மின்குமிழ் எரிய வேண்டும். ஒரு நேரத்தில் ஒருவர் மட்டுமே உள் நுழைய முடியுமெனின் அங்கு எவ் படலை பயன்படுத்தப்பட்டிருக்கும்?
a) NOR படலை b) XOR படலை c) AND படலை 4) NOT படலை

13) x.x + x.x' எனும் பூலியன் கோவைக்கு சமனல்லாத கோவை எது?
a) x. (x + x') b) (x + x') . x c) x' d) x

14) காட்டப்பட்ட தர்க்கச் சுற்றில் வெளியீட்டாக 1 ஐ பெற வேண்டுமெனின் x, y இன் பெறுமானங்கள்
a) 0, 0 b) 0, 1 c) 1, 0 d) 1, 1




15) கட்டளைக் கோட்டு இடைமுகத்தை .................... முறைமையில் / முறைமைகளில் பார்க்கலாம்.
a) Windows XP b) MS DOS c) unix d) bயும் உயும்


16) பின்வருவனவற்றில் சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருள் அல்லாதது
a) Microsoft Office Word 2007
b) Open Office Writer
c) Corel word perfect
d) Macromedia Dream Weaver 9



(இ)சரியான படவரை கலையியல் நுட்ப முறைகளைப் பயன்படுத்தி 1-5 வரை இலக்கமிடப்பட்டுள்ள விடயங்களை இலங்கையின் வெளியுருவப் படம் ஒன்றில் குறித்துப் பெயரிடுக.
01.விஜயனின் முதலாவது ஆரிய குடியிருப்பு அமைந்த நதி
02.தென்பகுதியில் கொட்டாவா எனும் இடத்தில் ஆரம்பிக்கும் நெடுஞ்சாலை முடிவடையும் இடம்
03.பிரசித்தி பெற்றுள்ள யானைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்.
04.தென்பகுதிக் கரையோரத்தில் உள்ள பிரதான முனை
05.இரும்புத்தாது படிவு இலங்கையில் அதிகம் காணப்படும் இடம்

## பகுதி II

02.(i)A, B, C, D எனும் எழுத்துக்களினால் குறிக்கப்பட்டுள்ள வளிமண்டல படைகளைப் பெயரிடுக.




(ii)(அ)ஓசோன்படையின் முக்கியத்துவம் மூன்று குறிப்பிடுக.
(ஆ)ஓசோன்படையில் ஓசோனின் செறிவு குறைவடைந்து வருவதற்கான காரணங்கள் மூன்று தருக.

(iii)மாறண் மண்டலத்தின் அமைப்பை குறிப்பிட்டு அதன் முக்கியத்துவம் மூன்று தருக.

03.(i)உலகில் இரும்புருக்கு உற்பத்தியில் முக்கியம் பெறும் இருநாடுகள் அ. ஆ எனும் எழுத்துக்களினால் காட்டப்பட்டதன் முறையே பெயரிடுக.



(ii)(அ) இரும்புருக்கு கைத்தொழில் தொடர்பாக எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் மூன்று தருக.
(ஆ) இரும்புருக்கு கைத்தொழில் தொடர்பான அண்மைக்காலப் போக்குகள் இரண்டு தருக.

(iii)(அ) கப்பல் கட்டும் கைத்தொழிலில் முக்கியம் பெறும் இருநாடுகள் முறையே இ. ஈ என பெயரிடப்பட்டுள்ளன. அவற்றின் முறையே பெயரிடுக.

(ஆ)'இ' எனும் எழுத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள நாட்டின் கப்பல் கட்டும் கைத்தொழிலின் சிறப்புக்கள் மூன்று தருக.


ஆசிரியர்: குமரன் (கடந்த வாரத் தொடர்ச்சி)

***கவனிக்க:***

இவ்வினாத்தாள் I,II,III என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.
பகுதி I இன் வினா கட்டாயமானது. அது அ, ஆ, இ ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டது.
பகுதி II இலிருந்து இரு வினாக்களுக்கும், பகுதி IIIஇலிருந்து இரு வினாக்களுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

01.(அ) வழங்கப்பட்டுள்ள 1:50,000 அளவுத் திட்டத்திலமைந்த இடவிளக்கப் படப் பகுதியினைக் கவனத்தில் கொண்டு கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




I.படத்தின் நேர்கோட்டு அளவுத்திட்டத்தை வரைந்து காட்டுக

II.இப்படத்திலுள்ள பிரதேசத்தின் ஆகக்கூடிய உயரத்தைக் காட்டும் சமவுயரக்கோட்டின் பெறுமானத்தைத் தருக. (500மீ/600மீ/800மீ)

III.இப்படத்தில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய உயரம் கொண்ட திரிகோண கணித நிலையத்தின் உயரத்தை தருக (666.12மீ/600மீ/400மீ)

IV.படத்தில் M யையும் N யையும் இணைக்கும் வரையான பிரதான வீதியின் நீளத்தை கிலோமீற்றரில் தருக.

V.படத்தில் A யையும் B யையும் இணைப்பது பின்வருவனவற்றுள் எவ்வம்சத்தைக் குறிக்கிறது?
i.மென்சாய்வு ii.சரிவுச்சாய்வு iii.பள்ளத்தாக்கு

VI.படத்தில் C யையும் D யையும் இணைப்பது பின்வருவனவற்றுள் எவ்வம்சத்தைக் குறிக்கிறது?
i.மென்சாய்வு ii.குத்துச்சாய்வு iii.குழிவுச்சாய்வு

VII.படத்தில் E யையும் F யையும் இணைப்பது பின்வருவனவற்றுள் எவ்வம்சத்தைக் குறிக்கிறது?
i.சுவடு ii.பள்ளத்தாக்கு iii.குவிவுச்சாய்வு

VIII.படத்தில் X யையும் Y யையும் இணைகும் கோட்டுவழியான குறுக்குமுகப்பார்வை ஒன்றை வரைக.

(IX)படத்தில் காட்டப்பட்டுள்ள பயிர்ப்பரம்பலில் பிரதான பெருந்தோட்டப்பயிரை தெரிவு செய்து அவற்றை வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் வரைந்துகாட்டிப் பெயரிடுக.

X.படத்தில் நெற் பயிர் செய்கை மேற்கொள்ளப்படும் பகுதி

(சாய்வுகளுக்கு இடைப்பட்ட படிக்கட்டுநிலம் /சாய்வுநிலம்/அணைக்கட்டின் கீழ் உள்ள தாழ்நிலம்)

(ஆ) வழங்கப்பட்டுள்ள உலகப்படத்தில் 1-5 வரை இலக்கமிடப்பட்டுள் விடயங்களை சரியான படவரை கலையியல் நுட்பங்களைப் பயன்படுத்தி குறித்துப் பெயரிடுக.

01.அண்மைக்காலத்தில் அணு உற்பத்தி சர்ச்சையில் சிக்கியுள்ள கிழக்காசியா நாடு
02.பிரான்ஸ் - ஸ்பானியாவை பிரிக்கும் மலைத் தொடர்
03.தென்னமெரிக்காவில் இருந்து அத்திலாந்திக் சமுத்திரத்தில் கலக்கும் நதி
04.றியோ 20 உச்சி மாநாடு நடைபெற்ற இடம்
05.கொழும்பில் இருந்து தென்னாபிரிக்கா வரையான கப்பல் பாதையை வரைக.



17)சொல் முறைவழிப்படுத்தலில் வேலை செய்துகொண்டிருக்கும் ஒருவர் தான் வலிந செய்த ஒரு சொற்றொடரை அழித்துவிடுகிறார். மீண்டும் அவ் சொற்றொடரை பெற அவர் பயன்படுத்தும் shortcut key எது?
a) ctrl + z
b) ctrl + y
c) ctrl + x
d) ctrl + m

18)பகுப்பு பொறியை (Analytical Engine) கண்டுபிடித்தவர் யார்?
a) ஜோசப் ஜக்குவாட் (Joseph Jacquard)
b) சார்ல்ஸ் பாபேஜ் (Charles Babbage)
c) பிளேயிஸ் பஸ்கல் (Blaise Pascal)
d) ஜோர்ஜ் பூல் (George Bool)

19)22 ஐ காண்பதற்கு விரிதாளில் பயன்படுத்தப்படும் சமன்பாடு
a) =22
b) =2^2
c) =2 * 2
d) = 2 square 2

20)விரிதாளில் ஒரு கலத்தில் =MOD(5, 2) எனக் குறிப்பிட்டு enter key ஐ அழுத்திய பின் கிடைக்கும் விடை
a) 3
b) 2
c) 1
4) சமன்பாடு பிழை எனக் காட்டும்


21)பின்வருவனவற்றுள் தரவுத்தள முகாமை முறைமை அல்லாதது
a) Oracle
b) Microsoft Access
c) Paradox
4) மேற்கூறிய அனைத்துமல்ல

22)Primary key என்பது?
a) தனியான ஒவ்வொரு பதிவையும் அடையாளப்படுத்தும்
b) மீண்டும் மீண்டும் பயன்படுத்தமுடியாது
c) Auto Number இதற்கு உதாரணமாகும்
d) மேற்கூறிய அனைத்தும்

23)நிகழ்த்துகையில் (Presentation) முதலாவது சட்டகத்திற்கு (Slide) செல்வதற்கான shortcut Key எது?
a) Home
b) Alt + Home
c) Ctrl +Home
d) Shift + Home

24)ஒரு நிகழ்த்துகையில் ஒன்றுக்கு மேற்பட்ட சட்டகங்களை தெரிவுசெய்ய
a) சட்டகத்தில் click செய்க
b) Ctrl + சட்டகத்தில் click செய்க
c) Alt + சட்டகத்தில் click செய்க
d) Shift + சட்டகத்தில் click செய்க

25)காட்டப்பட்ட பாய்ச்சற் படத்தில் வெளியீடாக பெறப்படுவது?
a) 90 b) 110 c) 111 d) 130




26)Visual Basic இல் மாறிக்குரிய பெயராக வரமுடியாதது?
a) _count b) count c) count_1 d) count12

27)பின்வரும் கூற்றுகளை அவதானிக்க

a)முறைமை விருத்தி வட்டத்தில் (SLDC) இறுதி படிமுறை முறைமையை செயற்படுத்தலாகும் (System Implementation).

b)முறைமை வடிவமைப்பில் (System Design) தரவுத்தள (Database) திட்டமிடலும் உள்ளடங்கும்.

c)சோதனையை மேற்கொள்ளும் (Testing) போது முறைமையின் கூறுகளை தனித்தனியாக சோதனைக்கு உட்படுத்தவேண்டும்.

a) a, b ஆகியன மாத்திரம் b) b, c ஆகியன மாத்திரம்
c) b மாத்திரம் d) a மாத்திரம்

28)முறைமை விருத்தி வட்டத்தில் செயல் சார்ந்த தேவைகளில் கருதப்படுவது
a) நம்பகத்தன்மை b) முறைமை பாதுகாப்பு
c) a, b ஆகிய இரண்டும் d) மேற்கூறிய அனைத்துமல்ல

29)பின்வருவனவற்றில் தேடுபொறி அல்லாதது?
a) www.google.com b) www.bing.com
c) www. yahoo.com d) www.cartoon.com

30)WWW வை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்?
a) டிம் பேனர்ஸ் லீ (Tim Berners Lee)
b) வின்டன் சர்ப் (Vinton Cerf)
c) ரொபட் கான் (Robert Kahn)
d) b, c ஆகியோர்

31)கணினி வலையமைப்பு என்பது
a) வன்பொருள் பாகங்கள் மற்றும் கணினிகளின் தொகுப்பு
b) தொடர்பாடல் ஊடகங்களால் இணைக்கப்பட்டிருத்தல்.
c) வளங்களையும் தகவல்களையும் பரிமாறிக் கொள்ளல்
d) மேற்கூறிய அனைத்தும்

32)

```
n=1
Do Untill n >=10
   Print n
   n = n + 1
Loop
```

இதன் வெளியீடு
a) 1 2 3 4 5 6 7 8 9 10 b) 1 2 3 4 5 6 7 8 9
c) 1 2 3 4 5 6 7 8 9 10 11 d) 2 3 4 5 6 7 8 9 10 11



33)பின்வருவனவற்றில் Numbered List ஐ குறிப்பது
a) <OL> </OL>
b) <DL> </DL>
c) <UL> </UL>
d) <LI> </LI>

34) 1 nibble
a) 2 bits 2) 4 bits 3) 16 bits. 4) 6 bits

35)மின்னஞ்சல் பற்றிய தகவலைத் தருவது
a) கட்டாயம் @ குறியீட்டை கொண்டிருக்கும்
b) வெற்றிடங்களை கொண்டிருக்காது.
c) பெரிய (Capital), சிறிய (Simple) எழுத்தக்கள் என பார்ப்பதில்லை
d) மேற்கூறிய அனைத்தும்

36)Outlook Express என்பது
a) மின்னஞ்சல்
b) உலாவி
c) தேடுபொறி
d) மேற்கூறிய அனைத்துமல்ல

37)HTTP என்பதின் விரிவாக்கம்
a) Hyper Text Transfer Protocol
b) Hyper Text Transfer Package
c) hyphenation Text Test Program
d) மேற்கூறிய அனைத்துமல்ல

38)இணைய வசதியை ஏற்படுத்துவதற்கு தேவையற்றது?
a) கணினி b) தொலைபேசி இணைப்பு
c) இணையக்கணக்கு e) மேற்கூறிய அனைத்துமல்ல

39)பின்வரும் கூற்றுகளை கவனிக்க

A)கணினியை வைரஸ் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்கு வைரஸ் எதிர்ப்பு நிரல்களை நிறுவி வைத்திருத்தல்.

B) AVG, Trojans என்பவை வைரஸ்களாகும்.


C)வைரஸ்கள் programmer தனது திறமையை வெளிப்படுத்தும் நோக்குடன் எழுதப்படுவதாகும்.

a) A, B ஆகியன மாத்திரம் b) B,C ஆகியன மாத்திரம்
c) A, C ஆகியன மாத்திரம் d) B, D ஆகியன மாத்திரம்

40) பின்வருவனவற்றுள் VB Coding இல் சரியானது?
a. Dim A as Double
b. Dim A as Double()
c. Dim A as Double;
d. Dim *A as Double

# பரிமாறி
# மேம்படுத்திட
# க அஞ்சல் தினம்



அடைந்ததும் குறிப்பிடத்தக்கன.

1947 இலேயே இலங்கை நாட்டவர் ஒருவர் (திரு. ஏ.இ. பெரேரா) அஞ்சல் அதிபதியாக நியமனம் பெற்றார்.

இதனைத் தொடர்ந்து 1949இல் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் வான் தபால் சேவை ஆரம்பித்தது. 1958இல் இலங்கை போக்குவரத்துச் சேவையுடன் இணைந்து தபால் பஸ்சேவை தினமும் ஓடத் தொடங்கின. இதனால் இலங்கை மக்கள் அனைவருக்கும் தபால் சேவை தங்குதடையின்றிக் கிடைத்தன.

1967 ஜனவரி ஒன்றில் இலங்கை முத்திரைப் பணியகம் ஸ்தாபிக்கப்பட்டது. செப்டெம்பர் மாதம் முதல் முத்திரைக் கண்காட்சி மக்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டது. 1972இல் முத்திரைகளை வெளியிடும் பணி முத்திரைப் பணியகத்திற்கு வழங்கப்பட்டது.

1975இல் அஞ்சல் அதிபர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக வெள்ளவத்தையில் அஞ்சல் பயிற்சி நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1979இல் பிராந்தியங்கள் ரீதியாக தபால்தரம் பிரிக்கும் நிலையம் இரத்தினபுரியில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டதும் தபால்கள் விரைவாக மக்களைச் சென்றடைந்தன.

இதுவரை காலமும் ஒன்றாகவே கையாளப்பட்டு வந்த தபால் துறையானது 1980 ஓகஸ்ட் 15ஆம் திகதி தபால் மற்றும் தந்திச் சேவை என இரண்டாகப் பிரிக்கப்பட்டு தந்திக்கு துரித வசதிகள் செய்யப்பட்டன. 1981இல் அஞ்சல் முகவர் நிலையங்கள் அனுமதிக்கப்பட்டன. மேலும் 1989 ஒக்டோபர் ஒன்றில் ஈ.எம்.எஸ். என்னும் விரைவுத் தபால்சேவை ஆரம்பிக்கப்பட்டது.

1990 ஜூலை 2இல் ஸ்பீற் போஸ்ற் எனப்படும் அதிவிரைவுத் தபாற் சேவை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டது. 1992இல் தபால் திணைக்களத்தில் மாகாண ரீதியிலாக நிர்வாகப் பரவலாக்கம் ஏற்படுத்தப்பட்டதும் பிராந்திய ரீதியில் அஞ்சல் அறிமுக அட்டை வழங்கப்பட்டது. மேலும் இதே ஆண்டு தொலைநகல் சேவைப் பரிமாற்றமும் தொடங்கியது.

1992இல் இதுவரை காலமும் அஞ்சலதிபர்களாக ஆண்கள் மட்டுமே கடமையாற்றிய நிலையிலிருந்து மாறி பெண்களும் அஞ்சல் அதிபர் சேவையில் நியமிக்கப்பட்டனர். 1994இல் கொழும்புக்கு வெளியே அஞ்சல் பொதி ஒப்படைப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

1996இல் தபால் தரம் பிரிப்பை மேலும் இலகுவாக்கும் பொருட்டு ஒவ்வோர் ஊருக்கும் தபால் குறியீட்டு இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. (உதாரணம் : சாய்ந்தமருது அஞ்சல் குறியீடு இலக்கம் 32280) 1999இல் தபால் திணைக்களம் கணனி மயமாகத் தொடங்கியது.

2000ஆம் ஆண்டில் இலங்கையின் பல பாகங்களிலும் தபால்துறை கணனியைப் பயன்படுத்த ஆரம்பித்தது. தொடர்ந்து 2001இல் இணையத்தளம், மின்னஞ்சல், ஒன்லைன் சேவை என தபால் திணைக்களத்தின் சகல செயற்பாடுகளும் அதிநவீன மின்னியல் உலகத்தினுள் பிரவேசித்தன. தற்போது அநேகமாக அனைத்து தபால் நிலை யங்களிலும் ஒன்லைன் வாயிலாக மின் பட்டியல் கொடுப்பனவு, வெளிநாட்டுக் கடிதங்களுக்கான ஒப்படைப்பு அறிவிப்பு இலத்திரனியல் காசுக்கட்டடளைச் சேவை (இ-மணிஓடர்) தபால் பணப்பரிமாற்றச் சேவை (பீ.எம்.ரீ) என்பன புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு பொதுமக்களுக்கு துரிதகதியில் சேவையாற்றப்பட்டு வருகின்றன. ரெலிகொம் நிறுவனத்தின் முற்கொடுப்பனவு அட்டைகளும் விற்பனைக்குள்ளன.

அத்துடன் தற்போது இலங்கை முழுவதும் 609 அஞ்சல் அலுவலகங்களும், 3440 உப தபால் நிலையங்களும், 536 முகவர் தபால் நிலையங்களும், 46 தபால் கடைகளும் இயங்கி வருகின்றன. இவற்றில் திணைக்களத்தின் வழமையான சேவைகளான அஞ்சல் முத்திரை முத்திரையிடப்பட்ட பொருட்கள், எழுதுகருவிகள், தொலைபேசி அழைப்புக்கள், பிரித்தானிய தபாற் கட்டளை, தொகை அஞ்சல் பொருட்கள் பாரமெடுத்தல், சமூக சேவைக் கொடுப்பனவுகள், (சயரோகம், தொழுநோய், புற்றுநோய், வறியவர்களுக்கான ஆதாரப் பணக் கொடுப்பனவுகள்) விவசாய மீன்பிடியாளர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு, பரீட்சைக் கட்டணம் மற்றும் வாகனத் தண்டப் பணம் செலுத்துதல், விரைவுத் தபாற் சேவை, தபால் தேசிய சேமிப்பு வங்கிச் சேவைகள், தபால் பெட்டி மற்றும் தபால் பை சேவைகள் தந்திச் சேவைகள், தொலைநகல், போட்டோப் பிரதிகள், பதிவஞ்சல் மற்றும் சாதாரண கடிதச் சேவைகள், உள்நாட்டு வெளிநாட்டு பொதிச் சேவைகள், காப்புறுதிக் கடித சேவைகள், அஞ்சல் அறிமுக அட்டை, புதினப் பத்திரிகைகள் பதிவு செய்தல் என்பவற்றுடன் மேலும் பல நவீன காலத்திற்கு வேண்டிய புதிய பல சேவைகளும் ஆற்றப்பட்டு வருகின்றன.

புராதன காலத்திலிருந்து அதிநவீன காலம் வரை அனைத்துலக மக்களுக்கும் தனது ஈடினையற்றதும், அர்ப்பணிப்புமிக்கதுமான புனித சேவையை எவ்விதப் பாகுபாடுமின்றி ஆற்றிவரும் தபால் துறையினருக்காக உலக தபால் தினம் பிரதி வருடமும் ஒக்டோபர் 9ஆம் திகதி உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

# இந்தியாவில் தங்கியிருந்த போது பிறந்த பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதழ்

குடும்பமாக இந்தியா சென்ற போது அங்கு பிறந்த குழந்தைகளுக்கு இலங்கையில் பிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து திரும்பிச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் இந்தியாவில் பிறந்த பிள்ளைகளுக்கு இலங்கைப் பிறப்புச் சான்றிதழ் பெற வேண்டுமாயின் தத்தமது பிரதேச செயலகங்கள் அல்லது மாவட்ட மேலதிக பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றில் உரிய படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பத்துடன் தாய், தந்தையரின் பிறப்புச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ் ஆகியவற்றின் மூலப் பிரதிகள், குழந்தை பிறந்த வேளையில் பெற்றோர் இலங்கைப் பிரஜைகள் என்பதை உறுதிப்படுத்தும் பிரகடனப்படிவம், பிள்ளையின் இந்திய பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதி, இந்தியாவிலிருந்து சொந்த இடத்தில் மீளக்குடியமர்ந்துள்ளதை உறுதிப்படுத்தும் பிரிவு கிராம அலுவலரின் கடிதம், இந்தியாவில் வழங்கப்பட்ட அகதி அடையாள அட்டையின் பிரதி, இந்தியா சென்று திரும்பியதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தால் வழங்கப்பட்ட அட்டை, இலங்கைக்கு வந்த பிரயாண ஆவணங்கள், இலங்கை குடும்ப அட்டை போன்றவற்றின் மூலப் பிரதியும் இணைப் பிரதியும் இணைத்து மாவட்ட மேலதிக பதிவாள ரிடம் கையளிக்க வேண்டும்.

இவை அங்குள்ள அதிகாரிக-ளால் சரி பார்க்கப்பட்ட பின்னர் மூலப் பிரதிகளை மீளப் பெற பிள்ளையின் தந்தை அல்லது தாய் உரிய படிவத்தைப் பூர்த்தி செய்து சமாதான நீதிவான் அல்லது சத்தியப் பிரமாண ஆணையாள ரின் கையொப்பம் பெற வேண்டும்.

வழங்கப்படும் ஆவணங்களை மாவட்ட மேலதிக பதிவாளர் நாயகத்தின் ஊடாக இலங்கைக்கான பிரதி தூதரக ஆணையாளருக்கு அனுப்பி வைப்பார்.

பிரதித் தூத ரக அதிகாரிகள் விண்ணப்பத்தை பரிசீலனை செய்த பின்னர் பிள்ளைக்கு இலங்கைப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதற் கான ஏற்பாடுகளை மேற்கொள்வர்.

இந்த விவரங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவன உதவியுடன் இலங்கை அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

# தாண்டிக்குளம் வீட்டுத்திட்டம் தொடர்பில் ஆட்சேபனை இருப்பின் பரிசீலனை

## வவுனியா பிரதேச செயலர்

வவுனியா, தாண்டிக்குளம் பிரதேசத்தில் தற்போது வழங்கப்படவுள்ள இந்திய வீட்டுத்திட்டத்தில் பயனாளிகள் தெரிவில் ஆட்சேபனை இருப்பின் அது தொடர்பில் பரிசீலிக்கப்படுமென வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

தாண்டிக்களம் பிரதேசத்தில் மீள்குடியேறியோருக்கு இந்திய வீட்டுத்திட்டத்தின் மூலமாக வீடமைக்கும் திட்டம் முன்னெடுக்கப் படவுள்ள நிலையில் இதற்கான பயனாளிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றிருந்தது.

எனினும் இப்பயனாளிகள் தெரிவில் வீடற்றவர்களுக்கு வீடுகள் வழங்கப்படவில்லை என பொது மக்கள் பலர் குற்றஞ்சாட்டியிருந்த நிலையில் இது தொடர்பில் கூறும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

தாண்டிக்குளம் வீட்டுத்திட்டம் தொடர்பில் ஆட்சேபனைகள் இருப்பதாகவும் தமக்கு வீட்டத்திட்ட பயனாளிகள் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு தகுதியிருந்தும் அவை இணைத்துக்கொள்ளப்படவில்லை என எண்ணுபவர்களும் பிரதேச செயலகத்தில் தமது ஆட்சேபனைகளை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவை தொடர்பில் பரிசீலனை செய்யப்படும் என அவர் தெரிவித்தார்.

# மின்னல் தாக்கி உயிரிழந்த கொரியர்களின் சடலங்களை குடும்பத்தவர்கள் பார்வை

மின்னல் தாக்கி உயிரிழந்த 2 கொரிய தொண்டர்களின் குடும்பத்தவர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பை வந்தடைந்துள்ளனர்.

இவர்கள் வந்திறங்கியவுடன் தமது பாசத்துக்குரியவர்களின் சடலங்களை சென்று பார்வையிட்டனர்.

கிம் யங் வூ, ஜாங் மூன் ஜியோங் ஆகியோர் அப்புத்தளை பகுதியில் கடந்த சனிக்கிழமை மின்னல் தாக்குதலுக்குள்ளாகினர்.

இவர்கள் இருவரும் கொரிய சர்வதேச கூட்டுறவு முகவரகம் என்னும் தொண்டு நிறுவனத்தை சேர்ந்தவர்கள். அப்புத்தளையிலுள்ள தமது சக தொண்டரொருவரைப் பார்க்கச் சென்றபோதே இவ்வனர்த்தம் ஏற்பட்டது. இந்நிறுவனம் சடலங்களை கொரியாவுக்கு கொண்டுசெல்வதற்காக ஆயத்தங்களை செய்துவருகின்றது.

இத்தொண்டு நிறுவனம் 29 நாடுகளில் 1,300 தொண்டர்களை பணியில் ஈடுபடுத்தியுள்ளது. இலங்கையில் 74 தொண்டர்களுள்ளனர்.

# கடலட்டை பிடிக்க முயன்ற மீனவர்கள் 9 பேர் கைதாகி பின்னர் விடுதலை

கடலட்டை பிடிக்கச் சென்றதாகக் கூறப்படும் 9 மீனவர்கள் பள்ளிக்குடா கடற்படையினரால் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டதாக கிளிநொச்சி கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை பணிப்பாளர் தெரிவித்தார்.

யாழ். குருநகர் பகுதியைச் சேர்ந்த 9 மீனவர்கள் 2 படகுகளில் பள்ளிக்குடா கடற்பரப்பில் கடலட்டை பிடிப்பதற்காக நேற்று செவ்வாய்க்கிழமை காலை சென்றனர். இக்கடற்பரப்பில் கடலட்டை பிடிப்பதற்கு அனுமதியின்றிய நிலையில், தலா ஒவ்வொரு படகிலும் 2 எஞ்சின்கள் பூட்டியவாறு சென்றார்களெனவும் அவர் கூறினார்.

கைதுசெய்யப்பட்ட இம்மீனவர்கள் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதுடன், படகுகளும் மீனவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கிளிநொச்சி கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை பணிப்பாளர் கூறினார்.

# வவுனியா மதுபான விற்பனை நிலையத்தில் தீ விபத்து !

வவுனியா பிரதேசத்திலுள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று (09) அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இத் தீ யின் காரணமாக விற்பனை நிலையத்தில் இருந்த மதுபானங்கள் அனைத்தும் அழிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தீ ஏற்பட்டமைக்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து தீயின் பரம்பலை கட்டுப்படுத்த முயற்சித்ததன் பலனாக இழப்புக்கள் தவிர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயம்.

# ஓமானில் பணிபுரியும் இலங்கை பணிப்பெண்களுக்கு காப்புறுதி

ஓமானில் பணிபுரியும் இலங்கை மற்றும் பங்களாதேஷ் பணிப் பெண்களுக்கு புதிய காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த ஓமான் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்திய மற்றும் பிலிபைன்ஸ் பணிப் பெண்களுக்கு அறிமுகப் படுத்தப்பட்டுள்ள காப்புறுதித் திட்டம் போன்று இலங்கை, பங்களாதேஷ் பணிப் பெண்களுக்கும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஓமானில் பணிபுரியும் எத்தியோப்பியா, தான்சானியா போன்ற ஆப்பிரிக்க நாடுகள் நேபாளம் போன்ற ஆசிய நாடுகளின் பணிப் பெண்களுக்கு இந்த காப்புறுதித் திட்டம் இதுவரை வழங்கப்படவில்லை.

ஓமான் அரசின் இத்திட்டத்தால் 10,000 இலங்கை பணிப்பெண்கள் நன்மை அடைவர் என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இக்காப்புறுதித் திட்டத்தின் கீழ் இரண்டு வருடங்களுக்கு 20-40 ஓமான் ரியால் வழங்கப்படவு[ள்]ளது.

விபத்து மூலம் மரணம், விபத்தினால் பாதிப்பு, ஊனமுறல், விமர்சன நோய் போன்ற தருணங்களில் காப்புறுதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.குடாநாட்டில் 9 மாதங்களில் 19 கொலைகள், 32 வல்லுறவுகள்

யாழ்.குடாநாட்டில் இந்த வருடத்தில் இதுவரை 19 கொலைச் சம்பவங்களும் 32 பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் யாழ்.மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக விசேட உரையாற்றும் போது இவ்விதம் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்.குடாநாட்டில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் பாரிய குற்றச் செயல்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

2011 ஆம் ஆண்டில் 21 கொலைச் சம்பவங்கள் யாழில் நடைபெற்றுள்ளது.

இம்முறை அது குறைவடைந்து 19 ஆக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு யாழில் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் கடந்த வருடத்தை விட இவ்வருடம் அதிகரித்துச் சென்றுள்ளது. 2012 இந்த வருடத்தில் 32 பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதில் காதல் விவகாரம் தொடர்பாக 21 பேர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ள னர்.

உறவினர்களினால் 3 பேர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுததப் பட்டுள்ளனர், 8 பேர் யாழ். மாவட் டத்தைச் சேராத வெளி-மாவட்டத் தவர்களினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படத்தப்பட்டுள்ளனர்.

இந்த பாலியல் வல்லுறவுச் சம்பவங்களிவ் 27 பேர் சிறுமியர்கள் எனவும் 16 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான குற்றச் சம்பவங்களைத் தவிர வாள்வெட்டுச் சம்பவங்கள், வீடு உடைத்துக் கொள்ளைச் சம்பவங்கள் என பல குற்றச் செயல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அம்பாறை - மத்தியமுகாமில் 82 பேர் பொலிஸாரால் கைது

அம்பாறை - மத்தியமுகாம் பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள பிரதேசங்களில் நீதிமன்ற பிடிவிறாந்துள்ள 82 பேரை இரண்டரை மாதங்களில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளதாக மத்தியமுகாம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள பிரதேசங்களில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் வெளிவந்த நிலையில் நீதிமன்றத்திற்கு சமூகமளிக்காமல் தலைமறைவாகியுள்ள 90 பேரை கைது செய்யுமாறு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டது. இவ் நீதிமன்ற உத்தரவையடுத்து பொலிஸாரின் விசேட குழு தலைமறைவாகியவர்களை கண்டு பிடித்து கைது செய்யும் நடவடிக்கையினை கடந்த யூலை மாதம் 15 தொடக்கம் நேற்று திங்கட்கிழமை 8 ம் திகதி வரை மேற்கொண்டு 82 பேரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளதாக மத் தியமுகாம் பொலிஸார் தெரிவித்தனர்.

# வேவல்தெனியவில் விபத்து : வாஸ்து நிபுணர்கள் மூவர் பலி

கொழும்பு கண்டி பிரதான வீதி, வேவல்தெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவமொன்றில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தினூடாகப் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டியொன்றும் லொறி-யொன்றும் மோதியே விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது, முச்சக்கரவண்டியில் பயணித்த வாஸ்து நிபுணர்கள் மூவருமே உயிரிழந்துள்ளனர். இவர்கள் மாலபே, பிளியந்தல மற்றும் ராகம பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. விபத்து தொடர்பான மேலதிக விசாணைகளை வேவல்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பெண் அரசியலின் முக்கியத்துவம்

பெண் அரசியலின் முக்கியத்துவம்.

மானிய மனிதனுக்கு அரசியல் பார்வை இல்லாமலிருக்கலாம் ஆனால் அவனது வாழ்க்கை அரசியலுக்கு உட்பட்டது. அரசியலில் இருந்து தப்ப முடியாதபடி உயிர்மூலங்கள் பிணைக்கப் பட்டிருக்கின்றன. சுவாசிக்கும் காற்று, பருகும் நீர், வாழும் மண், காடுகள், சமவெளிகள், இயற்கை, தலைக்கு மேலாக பங்கிடப்படாமல் விரிந்து கிடக்கிற வானம் என எதுவுமே அரசியலில் இருந்து தப்ப முடியாது. அவ்வகையில் மொழியும் அரசி யலைப் பேசுகிறது் அரசியலோடு தொடர்ந்து உறவாடுகிறது் அரசியலை நடத்துகிறது. குறிப் பிட்ட மொழியின் இலக்கியங்கள் அந்நிலத்தின் கருப்பொருள் சார்ந்தவைகளுக்கு ஆதரவாகவோ எதிராகவோ தன் சாட்சியங்களைப் பேசிச் செல் கின்றன. பெண்ணெழுத்தின் வீரியமும் மௌன மும் வெற்றிடமும் பெண்ணின் வாழ்க்கையை அவளது வரலாறை அவள்மீது சுமத்தப்பட்ட அரசியலை அவள் எதிர்த்த அரசியலை அவளைப் புரட்டிப்போட்ட அரசியலை வெளிப்படுத்தும் சாட்சிகளாக அமைகின்றன.

எழுதப்பட்ட எழுத்துகள் எவற்றை முன் வைக்கின்றனவோ அதற்கு எதிரிடையாக எழுதப் படாத எழுத்துகளின் நிசப்தமும் அரசியலை மொழிக்குள் செலுத்தி வைக்கின்றன. மொழியின் இருமை எதிர்வு குணமானது ஒரு வி'யத்தை ஆதரித்துக் குரல் கொடுக்கும் பொழுதே அதற்கு எதிரான அனைத்தையும் கண்டிக்கும் வன்மையை செலுத்தத் தொடங்கி விடுகிறது. பௌதிகக் காரணிகள் பெண்ணினத்தின் மீதாக வலுவான தாக்கத்தை செலுத்துகின்றன.

உயிர் இயக்கத்தில் தன்னைத் தக்கவைத்துக் கொள்ளப் போராடுகிற ஒவ்வொரு உயிரியும் உயிர்த் தொகுப்புகளும் அறிந்தோ அறியாமலோ அரசியலை சுமந்து கொண்டே பயணிக்கிறது. தமிழில் பக்தியிலக்கிய காலத்திற்கு பின்னும் தற்கால இலக்கியத்திற்கு முன்னுமான இடைப் பட்ட காலத்தின் மௌனம் பெண்ணெழுத்தின் மீதான கேள்விகளை தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அந்த மௌனத்தின் உடைப்பை எதிரொளியைத் தற்காலக் கவிதைகளில் காண முடிகிறது. பிற இலக்கிய வகைமையைக் காட்டிலும் மொழியோடு நெருக்கத்தைக் கொண்டு அகத்தோடு ஊடாடுகிற கவிதைக் களம் பெண் அரசியலின் முன்னெடுப்பை உணர்த்துகிறது.

பெண் வாழ்வியல் எதிர்கொள்ளும் பல் வேறு சிக்கல்களை மீறி ஒடுக்கு முறைகளை மீறி அரசியல், சமூக, பொருளாதார பண்பாட்டுத் தளங் களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னகர்வை கவனத்தில் கொள்ள வேண்டியிருப் பதைப் போன்றே அத்தளங்களோடு பயணிக்கிற மொழியின் மூலமான சாத்தியங்களைப் பார்க்க வேண்டிய அவசியமும் உள்ளது.

தமிழ்க் கவிதைகளில் பெண்கவிதை மொழி தொட்டுச் செல்லுகிற இடங்கள் மற்றும் விட்டுச் செல்கிற இடங்கள் குறித்த பிரக்ஞை என்பது பெண்வாழ்வின் மீதான அரசியல் தாக்கத்தைப் புரிந்துணர வைக்கிற இடமாகவும் இருக்கிறது.

ஆணாதிக்கம் ஆணி வேரென்றால் பெண் மீதான பொருளாதார, பண்பாட்டு, மத ஒடுக்கு முறைகள் சல்லிவேர்களாக இருக்கின்றன. பண்பாடு, அரசியல், பொருளாதார முன்னேற்றங் கள் ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்பட வேண்டியவை. இவை ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல. எனினும் இத்தளங்களில் பெண்களுக் கான முன்னேற்றம் குறித்து பேசத்தொடங்கும் பொழுதே தந்தைவழிப் பண்பாட்டின் அடக்கு முறைகளை ஏற்கவும் நேர்கிறது. கல்வியறிவால் பொருளாதார முன்னேற்றத்தை அடைந்து வரும் பொழுதும் பால்ரீதியான பாகுபாடு மறைந்து விடவில்லை. பெண்களுக்கெதிரான வன்முறைகளும் குறைந்து விடுவதில்லை.

உலக சந்தையில்பெண்களின் உழைப்பை சுரண்டுதல், பெண் உழைப்பு மலி வானதாக பயன் படுத்தப்படுதல் என்பது தொடர்கிறது. பெண்ணுக் கான உரிமைகள் மதிக்கப்படாத நிலையைக் காணமுடிகிறது.

இரண்டாம் பால்களாகக் கருதப்படும் விதத்தால் இங்கு நிலவும் அரசியல் காரணிகளால் வன்முறை செலுத்தப்படுபவளாக உதாசீனப் படுத்தப்படுபவளாக காலந்தோறும் நடத்தப்பட்டு வருகிறாள். இத்தகு புறக்கணிப்பை இலக்கியத்தில் பெண் படைப்பாளிகள் உருவாகாதது, பெண் படைப்பாளிகள் வாழ்ந்திருந்தாலும் அப்படைப்பு கள் ஆவணப் படுத்தப்படாதது, பேசப்படாதது என்கிற கோணத்தில் பார்க்க வேண்டியவையாக இருக்கின்றன. குறிப்பிட்ட மண்சார்ந்த படைப்பு களில் கருப் பொருளாகப் பேசப்படுகிற பெண், பிறகருப்பொருளோடு கொண்டிருக்கும் தொடர்பு குறித்தும் சுமக்கும். அக்கருப்பொருளின்மீது சுமத்தப்படும் சுமைகள் குறித்தும் ஆய்வு மேற் கொள்ளப்பட வேண்டியது அவசியம். கருப் பொருளாக பேசப்படுகிற பெண் படைப்பு சக்தி யாக உயிர் இயக்கத்தில் இருந்தும் மொழியில் ஆளுமையை செலுத்தி விடாதவாறு நிகழ்ந்திருக்கிற புறக்கணிப்பினை கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

சமகாலப் பெண்கவிஞர்கள் அரசியலில் பங்கேற்க வேண்டியது குறித்தும், நிலமற்ற நிராதர வான உயிர்வாழ்க்கையின் சவால்கள் குறித்தும், போர் வாழ்க்கை எதிர்கொள்ளச் செய்யும் வன் முறைகள் குறித்தும், உழைப்புச் சுரண்டல் குறித்தும் பேசிவருகின்றன. இவற்றோடு அன்றாட வாழ்க்கையில் எதிர் கொள்ளும் பல்வேறு சிக்கல்களையும் வெளிப் படையாகப் பேசுகின்றன. அவை குடும்பம், பணியிடம், பொருளாதாரம் என விரிந்து செல்கின்றன.

ரே'ன் கார்டு  
சோதனைக்குப் போனேன்  
மக்கள் தொகைக்  
கணக்கெடுப்பு எடுத்தேன்  
பணியிடைப் பயிற்சி  
நேற்றுதான் முடித்தேன்  
இன்றைக்கு நான் லீவு  
குடும்ப நிகழ்ச்சி  
நாளைக்காவது போக வேண்டும்  
பாடம் எடுக்க  
தி. பரமேசுவரி

பெண்கள் அதிக எண்ணிக்கையில் பணி யாற்றும் கல்வித்துறையின் பள்ளி ஆசிரியப் பணியில் கற்றல், கற்பித்தல், நிகழ்வுகளோடு தொடர்பற்ற பணிகளையும் செய்ய வற்புறுத்தப் படுகிறது. அரசு இயந்திரங்கள் செய்யவேண்டிய பணிகளை ஆசிரியர்கள் மீது செலுத்தி அவர்களின் கற்பித்தல் பணி முடக்கப்படுகிறது. இவற்றால் பணியையும் கவனிக்க முடியாமல், பணி நேரம் முடிந்து வீட்டிற்குச் செல்ல முடியாமல் உபரி வேலைகளுக்குள் சிக்கிக் கொண்டு உள்ளத்தாலும், உடலாலும் பாதிக்கப்படுகின்றனர் என்பதைப் பதிவு செய்கிறார். அமைப்புசாராப் பணியாளரா யிருக்கும் பெண்களின் நிலையோ விவரிக்க முடியா உழைப்புச் சுரண்டலோடு பெண்களை சக்கை யாகப் பிழிகிறது.

தூங்கிக் கொண்டிருக்கும்  
உன் முகத்தில்  
தோன்றி மறையும்  
புன்னகைக்கான கனவு  
அதட்டாத அம்மாவைப் பற்றியும்  
பதட்டத்திற்கு மேலே பறந்து  
செல்லும்  
பறவைகள் பற்றியும்  
இருக்கலாம்  
- இளம்பிறை

குழந்தையின் கள்ளமற்றச் சிரிப்புடனான உறக்கத்தைக் கவிதையாக்கும் கவிஞர் பெண்ணாகத் தன்னை உணரும் தருணத்தை கீழ்கண்டவாறு எழுதுகிறார்.

உனக்கு வேலை மட்டுமே  
வேலை  
எனக்கு வேலையும் ஒரு வேலை  
- இளம்பிறை (பிறகொருநாள்)

பெண்ணின் உடற்கூறு நீர்மையாய் மாற்ற மடையும். அதற்கு இலகுவாய் பெண்ணின் உளவியலும் பொருந்திவிடுகிறது. எனினும் அரவணைப்பையும் ஆறுதலையும் எதிர்பார்க் கிறது. பெண்ணுக்கான கடமைகளுள் ஒன்றாகத் தாய்மை பார்க்கப்படுகிறது. அதனால் கூடுதல் கவனிப்பினை பெண்மீது செலுத்தத் தவறி விடுகின்றனர். அப் பெண்ணை அரவணைக்கும் கைகள் இல்லாமல் ஏக்கத்தைச் சுமக்கிறாள். மகப்பேறு காலத்தில் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை வெண்ணிலாவின் கவிதை பேசுகிறது.

நாளை உன்னோடு வண்டியில்  
முன்நின்று சிரித்துவர  
உன் இனிஷியல் போட்டுக்கொள்ள  
உனக்கு பிள்ளை பெற்றுத் தருவேன்  
நான்கைந்து மணி நேரம்  
ரத்த வெள்ளத்தில் மிதந்து  
கருசுமந்து குழந்தைத் தவம்  
இருக்கும் பெண்களை சுமக்க  
எந்த ஆணுக்கு உள்ளது  
கருப்பை  
- வெண்ணிலா (நீரிலலையும் முகம்)

அப்பாவிடம்  
சொல்ல வேண்டும்  
பெண்  
மாநிறமில்லை  
நல்ல கருப்பு  
என்று சொல்லும்படி  
- ஏ. இராஜலட்சுமி (எனக்கான காற்று)

பெண்பார்த்தல் எனும் சடங்கு ஆண்டுகள் மாறினாலும் மாறாதது என்கிற பட்டியலில் முக்கிய இடத்தில் இருக்கிறது. பெண்ணுக்கான கல்வியறிவு, வேலைவாய்ப்பு, பொருளாதார தற்காப்பு என்பன இருந்தும் போகப் பொருளாக சொத்தாகப் பார்க்கும் பார்வையால் மிகச் சாதாரண உடலியல் காரணிகளை முன்வைத் துப் பெண்களைப் புறக்கணிக் கும்போக்கு குறைய வில்லை.

பேரரசின் சாம்ராஜ்ய சக்ரவர்த்திகள்  
மதம் பிடித்தேகி அருவருப்பாய்ப்  
பிளிற பலியான ஆத்மாக்கள் பலவும்  
தங்களை தேடி அலைகிறது  
இன்னும் நிறுத்தப்படாப்  
போருக்காக  
- எஸ். தேன்மொழி (துறவி நண்டு)

உன்னிடம் வரைபடங்கள் உண்டு  
சேவகர்களை திரட்டி திசைகாட்டி  
முட்களையும்  
நீயே இரை தேடும் பாதை  
மட்டும் அறிந்தவள்  
எதையும் பதிவு செய்கிறாய்  
எனக்கோ சேகரத்தில் சித்தக்குறைவு  
உன் மேன்மைக்கான தந்திர  
விளையாட்டுகளுக்கு  
போர் என பெயரிடுவாய்  
இறையாண்மை என்ற  
அழித்தொழித்தலின்  
ஆற்றலைத் தகர்ப்பன்  
- லீனா மணிமேகலை

## பெண்ணுக்காக...


### பெண்ணே நீ



மலருக்கும் நிலவுக்கும் பேசப்படும் உவமைகளில்...  
புகழப்படும் வார்த்தைகளில்...  
புழங்காகிதம் கொண்டதால்  
மழுங்கடிக்கப்படுகிறது உன்  
அறிவும் புகழும் !  
உன் அழகை வர்ணிக்கும் வார்த்தைகளில்  
தோண்டப்படுகிறது உனக்கு மரணக்குழி!  
பெற்ற பிள்ளை பித்துப் பாசத்தில்  
உரிமைகள் பறிகொடுத்தலில்  
கட்டப்படுகிறதுமுதியோர் இல்லங்கள் !  
அன்பு கருணை போர்வை போர்த்திய  
அரசியலால்கல்லறை கட்டப்பட்டது  
வேலு நாச்சியாருக்கும்  
ஜாண்சி ராணிக்கும் பெண்ணே !  
ஆணாதிக்க வாதத்தால் ஆதரவு  
கரம் பேசி பறிக்கப்படுகிறது உன் பெண்மை !  
நாகரீக முற்போக்கு பேசி மேனாட்டு  
அரைகுறை மோகத்தில் வீழ்த்தப்பட்டு  
இரசிக்கப்படுகிறது உன் பெண்மை !  
"வாழ்க்கை ஒரு முறை  
வாழ்ந்து பார் ஒரு முறை"  
வீர வசனத்தில் உன் இளமை  
உற்சாக உணர்ச்சியேற்றி தகர்க்கப்படுகிறது  
உன் வாழ்க்கை ! பெண் மீது கொண்ட  
பொறாமையில் உனை சொந்தமாக்கத் துடித்து  
சுத்திவரும் ஆண்மை காதல் சொல்லி  
வீழ்த்தப்படுகிறது உன் பெண்மை !  
ஒருமுறை வீழ்ந்தால் வீழ்ந்தே கிடப்பதால்  
தெரிந்தே நசுக்கப்படுகிறது  
பெண்மை ! வீழ்ந்தே கிடப்பது  
அழகல்ல உனக்கு பெண்  
புலியாக எழுந்திரு !  
பெண்மையை இழந்து  
ஆணாகக் கேட்கும்  
சம உரிமை மூடத்தை தூக்கி எறி !  
உலகம் சம படைப்பெனச் சொல்லி அடி !  
"பெண் போகப் பொருளா?"  
கேட்கும் முன்  
போதையில் போகமாகும் பெண்களை ஒழி !  
பெண்மை மேன்படும் ! ஆணுக்கு  
நிகர் கேடுகளை செய்வதில்  
நிறுவப்படுவதில்லை "ஆணுக்கு  
பெண் சளைத்தவரா?" ஆணவப் பேச்சு !  
ஆணும் செய்யாத சாதனைகளை  
சாதிப்பதில் இருக்கிறது  
பெண்மையின் உன்னதம் !  
சாதனை தொட்டுவிடும் தூரம் தான் !  
சோகத்தை சொர்க்கம் ஆக்க  
சோதனையில் சோரம் போகாது சீறி எழுந்திரு  
சாதனைப் பெண்ணே ! சீறி எழுந்திரு !

**வினோத்**

## பெண்ணெழுத்து



நீங்கள் விரும்புகிறீர்களோ இல்லையோ  
உமது உயிர்க் கூறு  
அரசியல் கடந்த காலம் கொண்டது  
உமது சருமம்  
அரசியல் படிந்தது  
உமது விழிகள்  
அரசியல் நோக்கு கொண்டது  
- ***விஸ்வாலா சிம்போர்ஸ்க்கா***

ஸ்நோபால் தங்கள் கனவில் வந்து, நெப்போலியனுக்கு எதிராக சதிசெய்யச் சொல்லித் தங்களைத் தூண்டியதாக அவை ஒப்புக் கொண்டன. "நெப்போலியன் உத்த ரவுகளுக்குக் கீழ்படியாதே!' என்று கனவில் ஸ்நோபால் சொன்னதாக அவை கூறின. அந்த மூன்று கோழிகளும் அங்கேயே கொல்லப் பட்டன.

பிறகு ஒரு வாத்து முன்வந்து, முந்திய அறுவடைக் காலத்தில் ஆறு கதிர்களை இரகசியமாகத் திருடித் தான் தின்றுவிட்டதாக ஒப்புக்கொண்டது. பிறகு ஒரு ஆடு முன்வந்து, தான் ஸ்நோபாலின் தூண்டுதலால் குடிநீர் நிரம்பிய குளத்தில் மூத்திரம் பெய்ததாக ஒப்புக்கொண்டது. ஒரு கிழட்டு ஆடு இருமலால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும்போது, சொக்கப் பனையைச் சுற்றிச் சுற்றித் துரத் தித் தாங்கள் கொன்றுவிட்டதாக இரண்டு ஆடுகள் தங்களையே குற்றம்சாட்டிக் கொண்டன.

அந்தக் கிழட்டு ஆடு நெப்போலி யனின் சிறந்த பக்தர்களில் ஒன்று என்றும் சொல்லின.




எல்லாவற்றிற்கும் மரண தண்டனை விதித்து அந்த இடத்திலேயே நிறைவேற்றப்பட்டது. இப்படியாகப் பல மிருகங்கள் தங்களைப் பற்றியே விதவிதமாகக் குற்றம் சாட்டிக் கொண்டு அங்கேயே உயிர் துறந்தன.

நெப்போலியன் காலடியில் சடலங்கள் போர்போலக் குவிந்தன. இரத்த நாற்றம் காற்றிலே கலந்து வீசிற்று. ஜோன்ஸ் போன பிறகு, அந்தப் பண்ணையிலே இதுவரை இவ்வளவு இரத்த வாடை அடித்தது கிடையாது. இதெல்லாம் ஆன பிற்பாடு பன்றிகளையும் நாய்களையும் தவிர மற்ற விலங்குகளெல்லாம் சேர்ந்துகொண்டு தலை தொங்க முற்றத்தை விட்டு வெளியேறின.

அன்றைய நிகழ்ச்சிகள் அவை-களை துயரத்தில் ஆழ்த்தின. எது அதிகத் துயரமும் பயமும் தந்தது என்று அவைகளாலேயே நிச்சயிக்க முடியவில்லை. ஸ்நோபாலுடன் கூடிக்கொண்டு விலங்குப் பண்ணையைக் கவிழ்க்கச் சதி செய்த மிருகங்களைத் திட்டுவதா? அல்லது இப்போது கண்முன் நடந்த தண்டனை நிறைவேற்றலைத் திட்டுவதா என்று அவற்றிற்குத் தெரியவில்லை. துரோகத்தைப் போலவே,

இந்த இரத்த வெறிச் செயலும் மனதுக்குக் கஷ்டம் தந்த காரியம் என்று அவை கருதின. இதைப் போலவே பயங்கரமான காரியங்கள் முந்தய நாட்களில் பண்ணையில் நடந்திருக்கின்றன. ஆனால் தங்கள் சுதந்திரத்துக்குப் பின் நேர்ந்த இந்த முதல் இரத்த வெறி எல்லாவற்றையும் விடப் பயங்கரமானதாக அந்த மிருகங்களுக்குப்பட்டது. ஜோன்ஸ் அடித்து விரட்டப்பட்டதன் பின், இன்று வரை பண்ணையிலே ஒரு மிருகம் வேறு ஒரு மிருகத்தைக் கொன்றதில்லை. **(நாளை)**

# மூன்று பன்றிக் குட்டிகள்

ஒரு ஊரில் மூன்று குட்டி பன்றிகள் இருந்தது. ஓய்வு நேரங்களில்,நன்றாக சாப்பிட்டு தூங்குவது இவைகளுக்கு ரொம்ப பிடிக்குமாம். இப்படியே நாட்கள் கடந்தன. இன்னும் சிறிது நாட்களில் குளிர் காலம் வந்துவிடும் என்பதால் மூன்றுமே தங்களுக் கென வீட்டைக் கட்டிக் கொள்ள விரும்பியது.


உடனே முதல் பன்றி, வைக்கோல் வைத்து வீட்டைக் கட்டி முடித்தது. இரண்டாவது பன்றி, குச்சிகளை வைத்து கட்டி முடித்தது. மூன்றாவது பன்றியோ செங்கல் வைத்து வீட்டை கட்டி முடித் தது. மூன்று பன்றிகளுக்கும் ஒரே சந்தோசம் தங்களுக்கென ஒரு வீடு இருப்பதை எண்ணி.

ஓரிரு நாட்கள் கழித்து அந்தப் பக்கமாக ஒரு நரி வந்ததாம். அது முதல் பன்றியின் வீட்டுக் கதவைத் தட்டியதாம். உடனே பன்றி ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துப் புரிந்து கொண்டது தட்டுவது யாரென்று. அதனால் கதவைத் திறக்கமுடியாது என்றதாம். அப்போது நரி சொன்னதாம்,

நீ கதவைத் திறக்கவில்லையென்றால் நான் உன் வீட்டை ஊதியே இடித்துவிடுவேன். பிறகு உன்னை சாப்பிட்டும் விடு வேன் என்றதாம். உடனே பன்றியோ, சற்றும் பயப் படாமல், உன்னால் முடிந்தால் செய்துபார் என்றதாம்.

நரி சொன்னதுபோல் வீட்டை ஊதியே இடித்துவிட்டதாம். ஆனால், பன்றியோ பயந்துகொண்டு வேகமாக இரண்டாம் பன்றியின் வீட்டுக்குள் ஓடியதாம். அங்கே சென்றதும் இந்த நரி அங்கேயும் வந்து முன்னதாக சொன்னதுபோல் இங்கேயும் சொன்னதாம்.

உன்னால் முடியாது, முடிந்தால் செய்து பார் என்றார்களாம். அதுவும் சொன்னதுபோல் வீட்டை இடுத்துவிட்டதாம். இடித்தும் இந்த இரண்டு பன்றிகள் பயந்து ஒடுவைதைக் கண்டு சிரித்துக் கொண்டே ஆணவத்துடன் பின்னாலேயே நடந்து போனதாம். அந்த இரண்டு பன்றிகளும் மூன்றாவது பன்றியின் வீட்டிற்குள் நுழைந்து வேகமாகக் கதவைத் தாளிட்டுக் கொண்டது களாம். அப்போது ஒன்றும் தெரியாத அந்த மூன் றாவது பன்றியிடம் நடந்த வற்றைப் பற்றி இவ் விரண்டும் கூறியதாம். அந்த நேரத்தில், நரி இங்கும் வந்து அதே போலவே சொல்லி மிரட்டி யதாம். உடனே மூன்றாவது பன்றியோ, அவ்விரண்டு பன்றிகள் சொன்னது போலவே சொன்னதாம். உடனே நரி ஊ..ஊ....வென வேகமாக ஊதிப் பார்த்ததாம். ஆனால் பாவம் இப்படி செய்து செய்து அதற்கு இருதயம் பலவீனமாகிப் போய் இறந்தே போனதாம். மூன்று பன்றிகளும் உயிர் தப்பியதை எண்ணி பெருமூச்சு விட்டனவாம்.



# சிறுவர் அமுதம்

## பூமியை நோக்கி 'இஸ்கான்'

நிலவை விட 15 மடங்கு பிரகாசமான வால் நட்சத்திரம் ஒன்று பூமியை நோக்கி வரவுள்ளதாக வானியல் ஆய்வாளர்கள் தெரி வித்துள்ளனர்.

அடுத்த ஆண்டு நவம்பர் அல்லது டிசெம்பர் மாதத்தில் தோன்றும் இந்த வால் நட்சத்திரத்திற்கு 'இஸ்கான்' எனப் பெயரிட்டுள்ளனர்.

இந்த வால் நட்சத்திரத்தை ரஷ்யாவைச் சேர்ந்த வானியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த நட்சத்திரம் நிலவை விட 15 மடங்கு பிரகாசமாக இருப்பதால், பகலிலும் எமது கண்களுக்கு தெரியக் கூடியதாக இருக்குமாம்.

இது இப்போது சூரியனின் வட்டப் பாதையில் இருபது இலட்சம் மைல் தொலைவில் பர வளையத்தில் சுற்றி வருகிறது.

இது சூரியனின் வெளிவட்டப் பாதையில் உள்ள ஊர்ட் பகுதியில் உருவானது. இங்கு தான் உறைந்த குப்பை கூளங்கள் உள்ளன.

## வர்ணம் தீட்டுங்கள்



## பதிலா? உயிரா?

ஒரு நாள் எல்லாராலும் உயர்வாக கொண்டாடப் பட்ட சாஷன் ஆசிரியர் ஷிஷைன் தன் னுடைய சீடர்களை சோதித்து பார்ப்பது என முடிவெடுத்து,

"உண்மை வழியினை அடை யத் தேடும் போது, ஒரு உயர மான மரத்தின் கிளையினைப் பல்லால் பிடித்துக் கொண்டு தொங்கிக் கொண்டிருக்கிற மனி தனுக்கு சமமாவோம்" என்றார்,

"கீழே சவகாசமாக அமர்ந் திருக்கும் மற்றொரு மனிதன், மேலே தொங்கிக் கொண்டி ருக்கிறவனைப் பார்த்து, "மேற் கிலிருந்து போதிதர்மா சைனா விற்கு வந்ததன் காரணம் என்ன?" என்று கேட்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது மேலேயிருப்பவன் பதில் சொல்லவில்லையென்றால் முட்டாளாக கருதப்படுவான். ஆனால் வாயைத் திறந்தாலோ எமனுக்கு இரையாகிவிடுவான். சொல்லுங்கள், இதிலிருந்து தப்பிப்பதற்கு என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டார். அங்கிருந்த சீடர்களில் ஒரு வனது பெயர் ஹடோ சாவோ, அவன் எழுந்து நின்று, "எங்க ளுக்கு அந்த மனிதன் உயர மான மரத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்பதைப் பற்றியக் கவலையில்லை. எங்களுக்குத் தேவையானதெல் லாம் யார் அவன், மரத்தின் மேலே ஏறுவதற்கு முன்பு என்ன செய்து கொண்டிருந்தான்?" என்று பதிலுக்கு ஆசிரியரைப் பார்த்துக் கேள்வி கேட்டான்.

அவன் கூறியதைக் கேட்ட ஷிஷைன் அடக்க முடியாமல் சிரிக்கத் தொடங்கினார். சீடனின் பதிலில் திருப்தி அடைந்தவரா னார்.

**- ஒரு ஸென் கதை**

**சுடோக்கு எண் 69 விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 2 | 9 | 7 | 4 | 1 | 8 | 5 |
| 5 | 1 | 7 | 2 | 8 | 6 | 4 | 3 | 9 |
| 9 | 8 | 4 | 3 | 5 | 1 | 6 | 7 | 2 |
| 3 | 6 | 8 | 5 | 9 | 2 | 7 | 1 | 4 |
| 7 | 2 | 9 | 4 | 1 | 3 | 8 | 5 | 6 |
| 4 | 5 | 1 | 7 | 6 | 8 | 9 | 2 | 3 |
| 1 | 7 | 3 | 6 | 4 | 5 | 2 | 9 | 8 |
| 2 | 9 | 6 | 8 | 3 | 7 | 5 | 4 | 1 |
| 8 | 4 | 5 | 1 | 2 | 9 | 3 | 6 | 7 |

**சுடோக்கு எண் 70**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | 3 | | | 2 | | |
| | | | 8 | | 9 | | | |
| | 6 | 9 | | 1 | | | 7 | |
| 6 | | | | | | 9 | 1 | |
| | 3 | 7 | | | | 8 | 4 | |
| | 9 | 8 | | | | | | 6 |
| | 7 | | | 8 | | 5 | 3 | |
| | | | 5 | | 6 | | | |
| | | 3 | | | 4 | | 8 | |

# யாழ்ப்பாணத்தில் அரசியல் பணிகளில் ஜனநாயக தொழிலாளர் கட்சி

யாழ்ப்பாணத்தில் ஜனநாயக தொழிற்கட்சி தனது செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பாக ஞயிற்றுக்கிழமை மானிப்பாயில் தலைவர் எஸ்.சத்தியேந்திரா தலைமையில் ஒன்று கூடித் தீர்மானம் செய்துள்ளது.

இக்கட்சி புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பாக கலந்துரையாடியுள்ளது.

இதன் அடிப்படையில் வட மாகாணத்தில் உள்ள மக்களை தமது கட்சியில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதும் இக்கட்சியின் நோக்கமாகும்.

இக்கட்சியின் செயலாளர் கே. ஸ்ரீரங்கநாதன் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டம் மட்டுமன்றி வட மாகாணம் முழுவதிலும் உள்ள விவசாயிகள் கடும் பிரச்சினைக்கு முகம்கொடுத்து வருகின்றனர். இது தொடர்பாக விவசாயிகளுடன் கலந்துரையாடி தீர்வை எட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வது மட்டுமன்றி, மகளிர் அமைப்புக்களை கிராம மட்டங்களில் உருவாக்குதலும், அவர்கள் மூலம் சிறுவர் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# பயங்கரவாத தடைச்சட்ட கோவைகள் பரிசீலனையில்

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படாதிருக்கும் கோவைகள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட சட்ட ஆலோசனைக்குழு இறுதி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அடுத்த சில வாரங்களுக்குள் இவ் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் 60 பேருக்கு எதிராக வழக்குகளை தாக்கல் செய்யும் என்று மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுகத கம்லத் தெரிவித்தார். தடுத்து வைக்கப்பட்டிருக்கும் புலி இயக்க உறுப்பினர்கள் சுமார் 300 பேரின் கோவைகளையும் முன்னாள் போராளிகள் 150 பேரின் கோவைகளையும் இந்தக் கமிட்டி அண்மையில் பரிசீலித்தது.

பாரதூரமான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகாத முன்னாள் போராளிகளை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்க உள்ளதாக சுகத கம்லத் தெரிவித்தார். நீதிமன்ற விசாரணைகளை துரிதப்படுத்துவதற்காக அநுராதபுரம், வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் வெலிக்கடை சிறைச்சாலையிலும் நான்கு மேல் நீதிமன்றங்களை நீதிச்சேவை ஆணைக்குழு நிறுவ உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோப்பாய் பிரதேசத்தில் இடைவிலகிய மாணவர்கள்

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட சில கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள பாடசாலை செல்லாது இடைவிலகியுள்ள சிறுவர்களை மீண்டும் பாடசாலையில் இணைப்பதற்கு கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கோப்பாய் பிரதேச செயலகத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அலவலர்கள், பட்டதாரி பயிலுநர்கள் மற்றும் அப்பகுதி கிராம அலுவலர்கள் போன்றோரின் உதவியுடன் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இவர்கள் வீடு வீடாகச் சென்று பாடசாலை செல்லாத சிறுவர்களை அன்றைய தினமே பாடசாலைகளில் இணைக்கின்ற செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றனர்.

# ரூபவாஹினியில் முத்தழகு



1957ம் ஆண்டு முதல் பாடி வருபவர் பிரபல பின்னணிப் பாடகரும் தேசியப் பாடகருமான கலாபூஷணம் சூரியகுமார் வி. முத்தழகு. இவர் அன்று முதல் இன்று வரை மெல்லிசை, சரள கீத்த, பொப்பிசை, நாட்டார் பாடல்கள் என பல்வேறுபட்ட பாடல்களையும் தமிழ், சிங்களம், உருது மலையாளம், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாடி வருபவர். இவர் வானொலியில் மாத்திரமின்றி தமிழ், சிங்கள திரைபபடங்களிலும், மேடைகளிலும் பாடி வருபவர்.

தனிநபர் இசை நிகழ்ச்சியாகிய சப்தஸ்வரம், பெம்கெக்குலபீபீ, இசை நிகழ்ச்சிகளிலும் இறுவட்டுக்களிலும் தமிழ், சிங்கள மொழிகளில் மாத்திரமின்றி, தமிழ், சிங்கள திரைப்படங்களிலும் பாடி வருபவர்.

இவர் நாளை மறுதினம் காலை 11.15 மணி முதல் 12.30 வரை தேசிய ரூபவாஹினியில் ஒளிபரப்பாகும் "சந்தரங்க மண்டல" எனும் விசேட தனிநபர் இசை நிகழ்ச்சியில் சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு பாடல்களை பாடவுள்ளார். இந்நிகழ்ச்சியில் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பாடவுள்ளார்.

ரூபவாஹினியின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் திரு. நிஸாந்த உபயவன்ஸவின் மேற்பார்வையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. இலங்கை, இந்தியா மற்றும் தூர கிழக்கு, ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ், சிங்கள ரசிகர்களின் பாராட்டைப் பெற்ற இவரது இன்றைய பாடல்களை சாகர விஜயவன்ஸவின் இசை நெறியாழ்கையில் பாடவுள்ளார். புதிய இளம் பாடகியாக அறிமுகமாகும் செல்வி. யசோதா ரசாஞ்சலி மெதகெதரவும் பங்கு கொள்ளும் இந்நிகழ்ச்சியை திரு. லால் தொகுத்து வழங்க, ரூபவாஹினி தயாரிப்பாளர் திரு. சுமித் திசாநாயக்க தயாரித்து வழங்குகிறார்.

# முதியோருக்கு ஆயிரம் ரூபா உதவிப்பணம் வழங்கல்

**(சண்டிலிப்பாய்)**

எழுபது வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கான பொது உதவிப்பணம் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.

70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டது. இதனடிப்படையில் முதியவர்களிற்கு 1000 ரூபா வைப்பு செய்யப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் வைப்புப் புத்தகங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இதனை அவர்கள் தமக்கருகிலுள்ள தபால் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மொழிப் பிரச்சினைக்கு தீர்வாக விசேட தொலைபேசி இலக்கங்கள்

மொழிப் பிரச்சினைக்கு தீர்வினை வழங்குவதற்காக விசேட தொலைபேசி இலக்கமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு அரச கரும மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு தீர்மானித்துள்ளது.அரச நிறுவனங்களில் சேவைகளைப் பெற்றுக்கொள்ள செல்லும்போது எதிர்நோக்க நேரிடும் மொழிப் பிரச்சினை தொடர்பில் இந்த தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ய முடியும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.

1956 என்ற உத்தேச தொலைபேசி இலக்கம் இன்னும் சில வாரங்களில் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

ஏற்கனவே, சுற்றுநிருபம் மூலம் அறிவிக்கப்பட்ட அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக பயிற்றுவிக்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்கள் வீதம் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமது சேவைப் பிரிவிற்கு பிரச்சினைகள் தொடர்பில் அறியக் கிடைத்தவுடன் குறித்த உத்தியோகத்தர்களை தொடர்புகொண்டு, தெரியப்படுத்தவுள்ளதாக அரச கரும மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து குறித்த நிறுவனங்களிலுள்ள மொழிப் பயிற்சிபெற்ற உத்தியோகத்தர்கள் மூலம் மக்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கவுள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் கூறியுள்ளார்.

# வெளிநாட்டு நாணயத் தாள்களுடன் ஜப்பானியர் கைது

வெளிநாட்டு நாணயத் தாள்களுடன் ஜப்பானிய பிரஜையொருவர் இன்று காலை காலை மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்கவிலிருந்து டோஹாவிற்கு செல்வதற்கு முற்பட்டபோதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக எமது விமானநிலைய செய்தியாளர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 50 இலட்சத்துக்கும் மேற்பட்ட அமெரிக்க டொலர், ஹொங்கொங் டொலர், யென் ஆகிய நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

# மழை காலங்களில் எமனாகும் இடிகுண்டு

**(சண்டிலிப்பாய்)**

கட்டுடை பிரதேசத்திலுள்ள இடிகுண்டு புனரமைக்கப்படாமல் உள்ளது. இதனால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை கருத்திற் கொண்டு இடிகுண்டை உடனடியாக புனரமைப்பு செய்யுமாறு பொதுமக்கள் கோருகின்றனர்.

மழை காலம் ஆரம்பித்துள்ளதால் மழைநீர் தேங்கி நிற்கும். இந்த இடிகுண்டும் முற்றிலும் மழைநீரால் நிரம்பிவிடும். அடையாளமே தெரியாதவாறு இடிகுண்டு மூடப்படும்போது, அப்பகுதிகளில் நடமாடும் கால்நடைகள் மாத்திரமல்ல சிறுவர்கள், வயோதிபர்களும் உயிராபத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை உள்ளது.

எனவே இவ் விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் அதிக கவனமெடுத்து இடிகுண்டை சுற்றி வேலி அமைத்து உரிய முறையில் பாதுகாப்பை ஏற்படுத்தித்தர வேண்டும் என மக்கள் கேட்கின்றனர்.







**உள நல நாள் 2012**

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் உள நல நாள் நேற்று (09.10.2012) (செவ்வாய்) பகல் நடைபெற்ற போது பிரதம அதிதி திருமதி கலாநாயகி சோதிநாதன் (ஆசிரிய ஆலோசகர்) மாணவர்களின் கண்காட்சியை திறந்து வைப்பதும், அதிபர் எம்.எஸ்.ஏ.எம். முபாரக் உரையாற்றுவதும் கலந்து கொண்ட மாணவர்களும்.

- மீரான்

# ஜனாதிபதியாகி மக்களுக்கு சேவை செய்ய விரும்புகிறேன்

## ஆங் சாங் சூகி

மியான்மரின் ஜனாதிபதியாகி மக்களுக்கு சேவை செய்ய விரும்புவதாக அந்த நாட்டு எதிர்க் கட்சித் தலைவரும், ஜனநாயகம் மலர போராடியவருமான ஆங் சாங் சூகி விருப்பம் தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில், தேசிய ஜனநாயக லீக் கட்சியின் தலைவராக உள்ள நான், ஜனாதிபதியாகி சேவை செய்ய வேண்டும் என்று மக்கள் நினைப்பதால் நானும் அதையே விரும்புகிறேன். இதற்கு நான் சார்ந்துள்ள கட்சி அனுமதி தருவது அவசியம் என்றார்.



இராணுவ ஆட்சியாளர்களின் பிடியில் இருந்த மியான்மரில் சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேலாக வீட்டுக் காவலில் சூகி அடைக்கப்பட்டிருந்தார். அங்கு ஜனநாயகம் மலர அமைதி வழியில் போராடினார். முன்னாள் இராணுவ ஜெனரலாக இருந்த தியான் சீன் இப்போது ஜனாதிபதியாக உள்ளார்.

மியான்மரில் 2015ஆம் ஆண்டு தேர்தல் நடக்க உள்ள நிலையில், ஜனாதிபதியாக சூகி விருப்பம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# விண்வெளியில் இருந்தபடியே ஐஸ்கிறீமை சுவைக்க போகின்றார் சுனிதா வில்லியம்ஸ்

சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியுள்ளவர்களுக்காக தனியார் விண்கலம் மூலம் ஐஸ்கிறீம் கொண்டு செல்லப்பட்டது.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகள் இணைந்து பூமிக்கு மேல் 410 கிலோமீற்றர் தொலைவில் சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைத்துள்ளன.

இந்த நிலையத்தில் சுனிதா வில்லியம்ஸ் உட்பட மூன்று வீரர்கள் தங்கியிருந்து ஆய்வு மற்றும் பராமரிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.



இந்நிலையில் இவர்களுக்குத் தேவையான உடை, உணவு, தண்ணீர் மற்றும் சில உபகரணங்கள் உட்பட சுமார் 450 கிலோ எடை கொண்ட பொருட்களை சுமந்து கொண்டு தனியார் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் நேற்றுப் புறப்பட்டது.

இதில் வீரர்களுக்குப் பிடித்தமான வெண்ணிலா ஐஸ்கிரீம்களும் கொண்டு செல்லப்பட்டது. இந்த விண்கலம் நாளை சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தைச் சென்றடையும்.

விண்கலம் விண்வெளி நிலையத்துடன் இணையும் தருணத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறோம் என சுனிதா வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலின் மீது ரொக்கெட் வீசி தாக்குதல் நடத்தியது நாமே

## ஹமாஸ் அறிவிப்பு

இஸ்ரேல் நாட்டின் மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தினோம் என ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிகாத் குழுவினர் பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

இஸ்ரேல் இராணுவம் நேற்று முன்தினம் நடத்திய விமான தாக்குதலில் பலஸ்தீனத்தைச் சேர்ந்த 10 பேர் படுகாயமடைந்தனர்.

இதற்குப் பதிலடியாக இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியதாக இவர்கள் அறிவித்துள்ளனர்.

மேலும் ஹமாஸ் இஸிடைன் அல் குவாஸம் என்ற படைப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில், காஸா பகுதிக்கு உட்பட்ட ராபா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பலர் காயமடைந்தனர்.

இதற்கு பதிலடியாக குவாஸம் மற்றும் அல் குயூஸ் படை பிரிவினர் எதிரி நாட்டின் மீது ராக்கெட் வீசித் தாக்குதலை நடத்தி உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சகோதரர்களை விஷம் வைத்து கொலை செய்ய முயன்ற 14 வயதுச் சிறுமி கைது

உணவில் விஷம் வைத்து இரண்டு சிறுவர்களை கொலை செய்ய முயன்றதாக 14 வயது சிறுமி கைது செய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் ரிச்லேண்டின் புறநகர் பகுதியை சேர்ந்த 12 மற்றும் 13 வயதுடைய இரண்டு சிறுவர்களையே கொல்ல முயன்றதாக 14 வயது சிறுமி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மேலும் இவர்கள் அதிகளவு விஷம் கலந்த உணவை உட்கொள்ளாததால் பாதிப்பிலிருந்து மீண்டுள்ளதாக மருத்துவ அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது. இச்சிறுவர்கள் 14 வயது சிறுமியின் சகோதரர்களாக இருக்கலாம் எனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

# 72 பேரை கொடூரமாக கொலை செய்த நபர் கைது

மெக்சிகோவில் 72 பேரை கொடூரமாகக் கொலை செய்த போதை பொருள் கும்பலின் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மெக்சிகோ நாட்டிலிருந்து மத்திய அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா நாடுகளில் மக்கள் குடிபெயர்வது வழக்கமான ஒன்று.

அவ்வாறு குடிபெயர்ந்த மக்களில் பலர் சான் பெர்னாண்டோ நகருக்கு அருகில் ரான்சு என்னுமிடத்தில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த 2010ஆம் ஆண்டில் 72



பேர்களை கொலை செய்து ஒரே இடத்தில் புதைத்திருந்தனர். இது தொடர்பாக போதைப் பொருள் கடத்தல் கும்பல் மீது புகார் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து நடந்த விசாரணையில், இந்தக் கும்பல் மற்ற நாடுகளுக்கு குடிபெயர விரும்பிய நபர்களைக் கடத்தி, அவர்களை போதைப் பொருளை விழுங்கச் சொல்லி அதன் மூலம் போதை பொருட்களை கடத்தி வந்ததும், இதற்கு மறுப்புத் தெரிவிப்பவர்களை கொலை செய்து புதைப்பதும் தெரியவந்தது.

இந்த வழக்குத் தொடர்பாக போதை பொருள் கடத்தல் கும்பலின் தலைவரான சல்வேடர் அல்போன்ஸா மார்டினேஸ் (வயது31) என்பவரை கப்பற்படை அதிகாரிகள் கைது செய்தனர்.

# உலக பார்வை

## இராணுவ படையினருக்கு உதவிய ஆப்கான் மக்களுக்கு குடியுரிமை வழங்க அரசு முடிவு

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருந்த கனடா படையினருக்கு பலர் உதவி புரிந்தனர். இவர்களுக்கு தங்கள் நாட்டில் குடியுரிமை வழங்கி பாதுகாக்க கனடிய அரசு முடிவு செய்துள்ளது.

இதற்காக கடந்த 2009ஆம் ஆண்டில் சிறப்பு புலம்பெயர்வு திட்டமொன்று தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின் அடிப்படையில் உதவி கேட்டு 6,000 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

ஆனால் இவர்களில் எத்தனை பேர் உண்மையிலேயே போரின் போது, கனடிய இராணுவ வீரர்களுக்கு உதவினார்கள் என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆரம்பத்தில் விண்ணப்பங்களை தாராளமாக ஏற்றுக் கொண்ட அரசு விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகமாகவும், சற்று ஆலோசிக்கத் தொடங்கியது.


அந்த விண்ணப்பங்களில் தாங்கள் கனடா இராணுவத்திற்காக



ஏற்றுக் கொண்ட துன்பங்களை மிகைப்படுத்தி விளக்கியிருப்பதாக தோன்றியது.


இதனால் ஏறத்தாழ பாதி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. 348 பேர் மட்டும் குடும்பத்தோடு வந்து தங்க அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த 2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் ஆறு பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் பல்வேறு சித்ரவதைகளுக்கும், கொடுமைகளுக்கும் ஆளானதாக தெரிவித்துள்ளனர்.



இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள மிடில் டெம்பிளுக்கு வருகை தந்த இளவரசர் வில்லியம் மற்றும் இளவரசி கேத் மிடில்டன்

# ஜேம்ஸ் பாண்ட்டின் கார் ரூபா 2 கோடிக்கு ஏலம்




உலகம் முழுவதும் உள்ள இரசிகர்கள் மத்தியில் ஜேம்ஸ் பாண்ட் படங்களுங்களுக்கு எப்பொழுதுமே தனி வரவேற்பு உண்டு.

அந்தவகையில், முதல் ஜேம்ஸ்பாண்ட் படம் வெளியானதன் 50ஆவது ஆண்டு விழாவை கொண்டாடும் வகையில் அந்த படங்களில் நடிகர்கள் பயன்படுத்திய பொருட்கள் லண்டனில் ஏலம் விடப்பட்டன.

இந்த ஏலத்தில் 600 வி.ஐ.பி.க்கள் கலந்துகொண்டனர்.

குவாண்டம் ஆப் சோலஸ் என்ற படத்தில் ஜேம்ஸ் பாண்டாக நடித்த டேனியல் கிரெய்க் பயன்படுத்திய ஆஸ்டன் மார்டின் கார் 3,86,000 டொலருக்கு (ரூ. 2.08 கோடி) ஏலம் போனது.

இது நிர்ணயிக்கப்பட்ட விலையை விட 1.5 மடங்கு அதிக விலைக்கு ஏலம் போனதாக ஏல நிறுவனம் தெரிவித்தது.


கேசினோ ராயல் படத்தில் டேனியல் கிரெய்க் பயன்படுத்திய 2 நீச்சல் ஆடைகள் ரூபா 37 இலட்சத்துக்கு ஏலம் விடப்பட்டன.

தற்போது தயாரிக்கப்பட்டுவரும் ஜேம்ஸ்பாண்ட் படமான "ஸ்கை பால்" என்ற படத்தில் கிரெய்க் அணிந்த டைட்டானியம் கைக்கடிகாரம் ரூபா 6.5 இலட்சத்துக்கு ஏலம் போகும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அது ரூபா 1.31 கோடிக்கு ஏலம் போனது. மொத்தம் 11 விதமான பொருட்களை ஏலம் விட்டதில் மொத்தம் 1.6 மில்லியன் டொலர் (ரூபா 6.24 கோடி) திரட்டப்பட்டது. இந்தப் பணம் பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்குப் பிரித்து வழங்கப்படவுள்ளது.

# காவிரி – கர்நாடக அரசின் கோரிக்கையை நிராகரித்தார் பிரதமர்

காவிரியிலிருந்து தமிழகத்துக்கு தினசரி விநாடிக்கு 9,000 கன அடி தண்ணீரைத் திறந்து விட வேண்டும் என்ற உத்தரவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற கர்நாடகத்தின் கோரிக்கையை பிரதமர் மன்மோகன் சிங் நிராகரித்து விட்டார்.



இந்த விவகாரத்தில் காவிரி கண்காணிப்புக் குழு எடுக்கும் முடிவின் அடிப்படையில் ஒக்ரோபர் 15ஆம் திகதிக்குப் பிறகு தமிழகத்துக்கு திறந்து விடும் நீரின் அளவை காவிரி நதிநீர் ஆணையம் தீர்மானிக்கும் என்று பிரதமர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

காவிரியிலிருந்து தமிழகத்துக்கு ஒக்ரோபர் 15ம் திகதி வரை நாள்தோறும் விநாடிக்கு 9,000 கன அடி தண்ணீர் திறந்துவிடும்படி கர்நாடக அரசுக்கு காவிரி நதிநீர் ஆணையம் உத்தரவிட்டிருந்தது.

தமிழகத்துக்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டதற்கு கர்நாடகத்தைச் சேர்ந்த விவசாய அமைப்புகள், அரசியல் கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. அம்மாநிலத்தில் பந்த், தமிழக பேருந்துகள் மீது தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்நிலையில், காவிரி நதியிலிருந்து தமிழகத்துக்குத் தண்ணீர் திறந்து விடும்படி உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மறுஆய்வு செய்யக் கோரும் மனு திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது.

இதையொட்டி கர்நாடக முதல்வர் ஜெகதிஷ் ஷெட்டர், அம்மாநில நீர் வளத் துறை அமைச்சர் பசவராஜ் பொம்மை, மாநில சட்டத்துறை அமைச்சர் சுரேஷ் குமார், கர்நாடக பா.ஜ.க எம்.பி.க்கள் 16 பேர் டெல்லி வந்தனர்.

இதைத் தொடர்ந்து கர்நாடகத்தைச் சேர்ந்த காங்கிரஸ் மத்திய அமைச்சர்கள் எஸ்.எம். கிருஷ்ணா, மல்லிகார்ஜுன கார்கே, கே.எச். முனியப்பா ஆகியோர் காலை 11 மணிக்கு சௌத் பிளாக் அலுவலகத்தில் பிரதமரைச் சந்தித்தனர்.

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்பின்போது மத்திய நீர் வளத்துறை அமைச்சர் பவன் குமார் பன்சலும் உடனிருந்தார்.

கோரிக்கை நிராகரிப்பு: காங்கிரஸ், பா.ஜ.க தலைவர்களிடம், மாநில அரசுகளின் தலைமைச் செயலர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் இடம்பெற்றுள்ள கண்காணிப்புக் குழுக் கூட்டம் வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அக்கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவைப் பொறுத்தே ஒக்ரோபர் 15ஆம் திகதிக்குப் பின்னர் காவிரியிலிருந்து தமிழகத்துக்குத் திறந்து விடும் நீரின் அளவைக் காவிரி நதிநீர் ஆணையம் நிர்ணயிக்கும்.

அதனால் கடந்த 19ஆம் திகதி பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்க முடியாது என்று பிரதமர் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டதாக அவரது அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# இந்திய செய்திகள்

## சோனியா காந்தி மகள் மீது முறைகேடு தொடர்பில் புகார்

ஹிமாச்சலப்பிரதேச மாநிலத்தில் சோனியா காந்தியின் மகள் பிரியங்கா கட்டி வரும் பிரமாண்ட பங்களா விடயத்தில் தற்போது சர்ச்சையை எழுந்துள்ளது.

சிம்லாவிலிருந்து 12 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சாப்ரா என்ற மலைப் பகுதியில் சோனியா காந்தியின் மகள் பிரியங்கா மிகப்பெரிய நவீன பங்களா ஒன்றை கட்டி வருகிறார்.

கடந்த சில ஆண்டுகளாக பல கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வரும் இந்த பங்களா, தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பொதுவாக ஹிமாச்சல பிரதேசத்தில் வெளிமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எளிதில் நிலம் வாங்க முடியாது. அதாவது, வெளிமாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் அங்கு நிலம் வாங்க வேண்டுமானால் மாநில அரசு அனுமதி பெறவேண்டும்.

இந்த அனுமதியை கடந்த 2007ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சி நடந்தபோது பிரியங்கா மிக எளிதாகப் பெற்றார்.

இது தவிர சாப்ரா பகுதியில் பிரமாண்ட பங்களா கட்ட அவருக்கு அரசின் பல்வேறு துறைகள் விதிகளை மீறி சலுகைகள் கொடுத்திருப்பது தெரியவந்துள்ளது.

பிரியங்கா கணவர் றாபர்ட் வதேரா மீது அரவிந்த் கெஜ்ரிவால் பல்வேறு முறைகேடுகள் புகாரை கூறியுள்ள இந்நிலையில், பங்களா கட்டியதில் தற்போது பிரியங்காவும் சட்ட விதிகளை மீறியதாக புகார்கள் எழுந்துள்ளது காங்கிரசிற்கு மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.

தற்போது பிரியங்கா கட்டி வரும் பங்களா பற்றி தகவல்களை திரட்ட ஹிமாச்சலபிரதேச அரசு உத்தரவிட்டுள்ளது.

எனவே பிரியங்கா பங்களா பற்றி விரைவில் புதிய தகவல்கள் வெளியாகும் ' என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நடிகர் சயிப் அலிகான் திருமணத்திற்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வருகை

பொலிவுட் நடிகர் சயிப் அலிகானின் திருமணத்திற்கு இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வருகை தருகிறார்.

நடிகர் சயிப் அலிகான், முன்னாள் கிரிக்கெட் வீரர் மன்சூர் அலிகான் பட்டோடியின் மகன் ஆவார்.

இவரும் பிரபல பாலிவுட் நடிகை கரினா கபூரும் நீண்ட வருடங்களாக காதலித்து வந்தனர்.



இந்நிலையில் இம்மாதம் 17ஆம் திகதி திருமணம் நடக்க உள்ள நிலையில் பட்டோடி அரண்மனை புதுப்பிக்கப்படுகிறது.

மேலும் கரினா- சயிப் அலிகானுக்காக திருமண உடைகள் தயாராகிக்கொண்டிருக்கிறது.

சயிப் அலிகானின் அம்மா சர்மிளா தாகூர், ஜனாதிபதி மாளிகைக்கு சென்று பத்திரிக்கை வைத்தார். திருமணத்திற்கு கண்டிப்பாக வருவதாக ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியும் கூறியுள்ளார். பிரணாப் முகர்ஜியும் மன்சூர் அலிகான் பட்டோடியும் சிறந்த நண்பர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில், தங்களது பணிகளை ஒழுங்குபடுத்தக்கோரி, ஶ்ரீநகரில் அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்தினர். இதுதொடர்பாக, மாநில பொலிஸார் பல அரசு ஊழியர்களைக் கைது செய்தனர். பொலிஸாடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்ட பெண் ஊழியரை கட்டுப்படுத்தும் மற்றொரு ஊழியர்.

# இறந்த கணவருடன் ஏழு நாட்கள் வாழ்ந்த மனைவி கணவர் தூங்குவதாக நினைத்தேன் என வாக்குமூலம்

திருச்சி மாவட்டத்தில் இறந்த கணவருடன் 7 நாட்கள் தங்கியிருந்த மனநலம் பாதிக்கப்பட்ட பெண்ணை பொலிஸார் மீட்டனர்.

திருச்சி மாவட்டம் கிளயநல்லூர் அக்ரகாரத்தை சேர்ந்த ராமமூர்த்தி 70, ஓய்வு பெற்ற கப்பல் பொறியாளர் ஆவார்.

இவர் தன்னுடைய மனைவி பானுமதியுடன் அக்ரகாரத்தில் உள்ள ஒரு வீட்டில் வசிந்து வந்தார்.

எப்பொழுதும் வெளியே வரும் பானுமதி சமீப தினங்களாக வெளியே வரவில்லை. மேலும் இவர்களது வீட்டில் இருந்து பிணவாடை வீசியதை அடுத்து அக்கம் பக்கத்தினர் அப்பகுதி கிராம நிர்வாக அலுவலர் கவிதாவிடம் தெரிவித்தனர்.

கவிதாவின் ஆணைப்படி அப்பகுதி பொலிஸார் வீட்டை சோதனையிட்ட போது மிகவும் அதிர்ச்சிகரமான ஒரு காட்சியை கண்டனர்.

அதாவது, ராமமூர்த்தி மல்லாந்த நிலையில் பிணமாக கிடந்ததும் அவரின் உடலில் புழுக்கள் நெலிந்ததுமம் பார்ப்பவர்கள் நெஞ்சை நிலை குழைய வைத்தது.

பின்னர் பானுமதியை மீட்ட பொலிஸார் அவரிடம் விசாரணை நடத்தியபோது அவர் அளித்த வாக்குமூலமும் பொலிஸாரை திகைப்பில் ஆழ்த்தியது.


தன் கணவர் தூங்குகிறார் என்று நினைத்தே இந்த 7 நாட்கள் தன்னுடைய நேரத்தை செலவிட்டதாகத் தெரிவித்தார்.

முதலில் வெளியில் வந்து பால் வாங்குவது, கடைக்கு செல்வதுமாக இருந்த பானுமதி சமீப தினங்களாக வீட்டிற்குள்ளே இருந்து சமைத்து சாப்பிட்டுக்கிறார்.

வீட்டில் அனைத்து விதமான வசதியான பொருட்கள் இருந்தும் உறவினர்கள் மற்றும் அக்கம் பக்கத்தினருடன் பேசாமல் தனிமை வாழ்க்கை வாழ்ந்ததே பானுமதியின் மனதை பாதித்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வீட்டில் உள்ள காலண்டரில் கடந்த மாதம் 30ஆம் திகதி வரையே கிழிக்கப்பட்டிருப்பதால் அன்றுதான் ராமமூர்த்தி இறந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# இறந்ததாக நினைத்து பெண்ணுக்கு இறுதிச் சடங்கு செய்த குடும்பம்




தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த நடேசனும் அவரது மனைவி புஷ்பாவும் மோட்டர் சைக்கிளில் வந்து கொண்டிருந்தனர்.

அப்போது இவர்கள் வந்த மோட்டார் சைககிள் மீது அடையாளம் தெரியாத வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

சிறிய காயத்துடன் தப்பிய கணவர் நடேசன், படுகாயமடைந்த மனைவி புஷ்பாவை தனியார் மருத்துவமனையில் சேர்த்தார்.

ஒருநாள் தீவிர சிகிச்சை பெற்ற புஷ்பா உயிர் பிழைக்க வாய்ப்பில்லை என டாக்டர்கள் கூறியதால் அவரை வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

பின்னர் அவர் உயிரிழந்ததாக கருதி உறவினர்களுக்கு தகவல் கொடுத்துவிட்டு வீட்டில் மாலை போட்டு படுக்க வைத்துள்ளனர்.

இந்நிலையில் புஷ்பா வீட்டுக்கு அருகில் குடியிருக்கும் சமையல்காரர் சரவணன் மாலை போட வந்தபோது புஷ்பாவின் கால் விரல்கள் அசைவதை கண்டார். இதுகுறித்து புஷ்பாவின் உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

உறவினர்கள் புஷ்பாவை, மீண்டும் அரசு மருத்துமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர்.

இறந்த காரியத்துக்காக வந்த உறவினர்கள் இன்ப அதிர்ச்சியோடு திரும்பிச் சென்றாலும் இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# வங்கிக் கொள்ளையர்கள் என்கவுண்டர் விவகாரம்: அறிக்கை கேட்கிறது நீதிமன்றம்

தமிழ்நாட்டில் நடந்த வங்கிக் கொள்ளையர்கள் என்கவுண்டர் தொடர்பான விசாரணை அறிக்கையை தாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாத இறுதி மற்றும் பெப்ரவரி தொடக்கத்தில் சென்னையில் வங்கிக் கொள்ளைகள் இடம்பெற்றது.

கொள்ளையில் ஈடுபட்டவர்கள் வடமாநிலத்தவர்கள் என்றும் அவர்கள் வேளச்சேரியில் பதுங்கியிருக்கிறார்கள் என தகவல் கிடைக்கப்பெற்றதும் பொலிஸார் விரைந்தனர்.

இந்த சம்பவம் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி நடந்தது. அன்று, பதுங்கியிருந்த 5 பேரை பொலிஸார் சுட்டுக்கொன்றனர்.

இது தொடர்பாக புகழேந்தி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொலிஸார் மீது கொலை வழக்குப் பதிவு செய்து சி.பி.ஐ. விசாரணை நடத்த கோரி வழக்கு தொடர்ந்தார்.

இந்த மனு விசாரணைக்கு வந்தபோது மாஜிஸ்திரேட், சி.பி. சி.ஐ.டி. ஆகியோர் வரும் 29ம் திகதிக்குள் விசாரணை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டனர்.

# 3 இலங்கையர் உட்பட 6 நடுவர்கள் சிக்கினர்

6 கிரிக்கெட் நடுவர்கள் போட்டிகளில் தவறான முடிவுகளை வழங்கவோ அல்லது போட்டியின் விபரங்களைக் கையளிக்கவோ தயாராக இருந்தமையை இந்தியத் தொலைக்காட்சியின் புலனாய்வு ஒன்று கண்டுபிடித்துள்ளது. பணத்தைப் பெற்றுக் கொண்டே இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்கள் தயாராக இருந்திருந்திருந்தார்கள்.

இலங்கையைச் சேர்ந்த 3 நடுவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்த 2 நடுவர்கள் பங்களாதேஷ்ச் சேர்ந்த ஒரு நடுவர் என மொத்தமாக 6 நடுவர்கள் இவ்வாறு அகப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் இந்தப் புலனாய்வு நடவடிக்கையில் இலங்கையைச் சேர்ந்தவர்களான காமினி திஸாநாயக்க மௌரிஸ் வின்ஸ்டன்இ சாகர கலகே ஆகியோரும்இ பாகிஸ்தானைச் சேர்ந்த நதீம் கௌரிஇ அன்னீஸ் சித்திக்கி ஆகியோரும்இ பங்களாதேஷைச் சேர்ந்த நதீர் ஷா என்ற நடுவரும் அகப்பட்டுள்ளனர்.

இதில் பங்களாஷேின் நதீர் ஷா சர்வதேசப் போட்டிகள்இ பிராந்தியப் போட்டிகள்இ வேறு ஏதாவது போட்டிகள் ஆகியவற்றில் தவறான முடிவுகளை வழங்க ஏற்றுக் கொண்டுள்ளார். அவர் ஆட்டமிழப்புக்களை தவறாக வழங்க ஒப்புக் கொண்டதோடு பாகிஸ்தானின் துடுப்பாட்ட வீரர் நசீர் ஜம்ஷெத் - பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரின் போட்டிகளில் தவறுகளை மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்.


சாமர கமகேஇ காமினி திஸாநாயக்கஇ அன்னீஸ் சித்திக்கி ஆகியோர் பணத்திற்காக ஸ்பொட் ஃபிக்சிங்கில் ஈடுபடத் தயாராக இருப்பாகத் தெரிவித்துள்ளார்.

இதில் சாமரக கமகே அண்மையில் முடிவடைந்த இந்தியஇ பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான உலக டுவென்டி டுவென்டி பயிற்சிப் போட்டிகளின் நான்காவது நடுவராகக் கடமையாற்றியிருந்தார்.

அத்தோடு ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் போட்டிகளிலும் ஸ்பொட் ஃபிக்சிங்கில் ஈடுபடத் தயாரா இருப்பதாக அவர் தெரிவித்திருந்தார்.

காமினி திஸாநாயக்க ஒருபடி மேற்சென்று குறித்தளவு பணம் தரப்படுமாயின் இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு எதிராக கிளர்ச்சி செய்வதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். இலங்கைக் கிரிக்கெட் சபையிலுள்ள அதிகாரிகளுக்கு மதுபானத்தையும்இ சுற்றுலாக்களையும் வழங்கினால் அவர்கள் எந்தவிதமான வேலையையும் முடித்துத் தருவார்கள் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.அத்தோடு இது தொடர்பாக விசாரணைகள் நடாத்தப்படும் எனவும் அதற்காக குறித்த நிகழ்ச்சியின் ஒளிப்பதிவை குறித்த தொலைக்காட்சி நிறுவனத்திடம் கோரியுள்ளதாகவும் ஐசிசி தெரிவித்துள்ளது.

## இலங்கையின் ஆட்டம் மெய்சிலிர்க்க வைக்கிறது: கங்குலி




ரி-20 உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை வெல்வதற்கு சாத்தியம் உள்ளது என்று இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் சவுரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில் உலகக் கிண்ணத்தை கைப்பற்ற இரு அணிகளுக்கும் சம வாய்ப்பு உள்ளது. சொந்த மண்ணில் நடைபெறுவதால் இலங்கை அணிக்கு கிண்ணத்தை கைபபற்ற வாய்ப்பு அதிகம் தான்.

ஆனால் ரி-20 போட்டியை எந்த அணி வெற்றி பெறும் என்றும் கூறுவது கடினம்.

குறிப்பாக எதிர் அணியில் கிறிஸ்கெய்ல் போன்ற அதிரடி வீரர் இருக்கும் போது எதையும் கணிக்க இயலாது. அவர் 20 ஓவர் போட்டியில் உலகின் சிறந்த வீரர் ஆவார்.

இரு அணியிலும் சிறந்த வீரர்கள் இருப்பதால் சமவாய்ப்பு இருப்பதாக கருதுகிறேன்.

இலங்கையும்இ மேற்கிந்திய தீவுகளும் சிறப்பாக விளையாடியே இறுதிப்போட்டிக்கு முன்னேறி வந்தன.

சிறிய நாடான இலங்கையின் ஆட்டம் என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது.

2007ம் ஆண்டில் இருந்து அந்த அணி 4 முறை உலகக் கிண்ண (ஒருநாள் மற்றும் டி20) இறுதிப்போட்டிக்கு நுழைந்து உள்ளது.

இதற்கு அணித்தலைவர் ஜெயவர்த்தனவும்இ முன்னாள் அணித் தலைவர் சங்கக்காராவும் காரணமாவார்கள்.

இதேபோல மேற்கிந்திய தீவுகள் அணி நீண்ட இடைவேளைக்கு பின்பு சர்வதேச கிரிக்கெட்டில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

## ருவென்டி ருவென்டி தரவரிசையில் இலங்கை அணி முதலாமிடத்தில்



சர்வதேசக் கிரிக்கெட் சபையின் டுவென்டி டுவென்டி போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேசக் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. வெளியிடப்பட்டுள்ள தரவரிசைப் பட்டியலின் முதலிடத்தில் இலங்கை அணி தொடர்ந்தும் காணப்படுகிறது.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக டுவென்டி டுவென்டி தொடரின் நடுவே முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட இலங்கை அணி முதன்முறையாக ஒரு தொடரின் பின்னர் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

உலக டுவென்டி டுவென்டி தொடர் முழுவதும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை அணி ஏனைய அணிகளை விடத் தொடர்ச்சியானஇ தொடர்ந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது.

முதலிடத்தில் காணப்படும் இலங்கை அணி இரண்டாமிடத்தைப் பிடித்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணியை விட 6 புள்ளிகள் அதிகமாகப் பெற்று முதலிடத்தில் தெளிவான நிலையில் காணப்படுகிறது.

இந்திய அணி மூன்றாமிடத்தில் காணப்படுகிறது.

வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தல்:

இலங்கை
மேற்கிந்தியத் தீவுகள்
இந்தியா
இங்கிலாந்து
தென்னாபிரிக்கா
பாகிஸ்தான்
அவுஸ்திரேலியா
நியூசிலாந்து
பங்களாதேஷ்
அயர்லாந்து
சிம்பாப்வே

## இந்திய அணியின் பலவீனங்களை சர்வதேசம் அறிந்து விட்டது

இலங்கையில் நடைபெற்ற ருவென்டி20 உலக கிண்ண தொடரில் இந்திய அணி அரையிறுதிக்கு கூட முன்னேற முடியாமல் வெளியேறியது. இதற்கு ஐபிஎல் தொடர் தான் காரணமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இலங்கையில் நடைபெற்ற ருவென்டி20 உலக கிண்ண கிரிக்கெட் தொடரில் மொத்தம் 12 அணிகள் பங்கேற்றன. இதில் லீக் சுற்றில் 4 அணிகள் வெளியேறின. ஆனால் கடந்த ஆண்டு ஒருநாள் போட்டிகளுக்கான உலக கிண்ணத்தை வென்ற இந்திய அணி லீக் சுற்றில் சிறப்பான வெற்றிகளை பெற்று சூப்பர் 8 சுற்றிற்குள் நுழைந்தது.

ஆனால் சூப்பர் 8 சுற்றில் சொதப்பிய இந்திய அணி தட்டி தடுமாறி 2 வெற்றிகளை பெற்றது. எனினும் அரையிறுதி சுற்றிற்கு முன்னேறும் அளவிற்கு ரன் ரேட் இல்லாமல்இ தொடரில் இருந்து வெளியேறியது.

இந்த நிலையில் லீக் சுற்றில் சிறப்பாக ஆடிய இந்திய அணிஇ சூப்பர் 8 சுற்றில் வெளியேற காரணம் என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது. லீக் சுற்றில் இந்தியா விற்கு எதிரான ஆடிய கத்துக்குட்டி அணியான ஆப்கானிஸ்தான் அணியை சேர்ந்த எந்த வீரர்களும் ஐபிஎல் தொடரில் பங்கேற்கவில்லை.

அதேபோல பாகிஸ்தான் அணியை சேர்ந்த வீரர்கள் யாரும் ஐபிஎல் தொடரில் பங்கேற்வில்லை. இதனால் அவ்விரு அணிகளுக்கு எதிரான போட்டிகளில் இந்திய அபார வெற்றி பெற்றுள்ளது.

ஆனால் ஐபிஎல் தொடரில் அவுஸ்திரேலியா தென் ஆபிரிக்கா அணிகளை சேர்ந்த வீரர்கள் கலந்து கொண்டனர். இதில் சூப்பர் 8 சுற்றில் அவுஸ்திரேலியாவிடம் படுதோல்வி அடைந்த இந்தியாஇ தென் ஆப்பிரிக்காவிடம் ஒரு ஆட்டத்தால் வெற்றி பெற்றது. இதனால் ஐபிஎல் தொடர் மூலம் இந்திய வீரர்களின் பலவீனங்களைஇ சர்வதேச கிரிக்கெட் அணிகள் அறிந்து கொண்டதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த நிலையில் சந்தேகத்தை உறுதி செய்யும் வகையில்இ தென் ஆப்பிரிக்க வேகப்பந்து வீச் சாளர் ஆல்பி மார்கல் அளித்த பேட்டி அமைந்தது.

இந்தியாவுக்கு எதிரான போட்டியில் கலந்து கொள்ளும் முன் பேட்டி அளித்த அளித்த அவர் கூறியதாவது.

இந்தியாவில் நடைபெற்ற ஐ.பி.எல் தொடர்களில் நான் பங்கேற்றுள்ளேன். இதன்மூலம் இந்திய அணியில் உள்ள முக்கிய வீரர்களுடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது. வீரர்களின் அறையில் இருக்கும் போதுஇ இந்திய வீரர்களின் பலம் மற்றும் பலவீனங்களை குறித்து அறிந்து கொள்ள முடிந்தது. இதை குறித்து தென் ஆப்பிரிக்க வீரர்களுடன் ஆலோசித்து அதற்கேற்ப திட்டமிட்டு இந்தியாவை எளிதாக வீழ்த்துவோம் என்றார்.

இதேபோல சர்வதேச கிரிக்கெட் அணிகளின் துடுப்பாட்டவீரர்களை மிரட்டி வந்தவர் இலங்கை வேகப்பந்துவீச்சாளர் மலிங்கா. ஆனால் ஐபிஎல் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக ஆடிய அவரது பந்துவீச்சைஇ உலக கோப்பை தொடரில் துடுப்பாட்ட வீரர்கள் அடித்து ஆடினர்.

ஆனால் இந்திய தலைவர் டோணி மேற்கண்ட கருத்தை முழுமையாக மறுக்கிறார். ஐபிஎல் தொடருக்கு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்கிறார் அவர்.

இது குறித்து டோணி கூறியதாவது

ஐபிஎல் என்பது ஒரு உள்ளூர் தொடர். அதில் அதிகளவிலான சர்வதேச வீரர்களுடன் அனைத்து அணிகளும் களமிறங்குகின்றன. ஆனால் தொடரில் உள்ளூர் வீரர்களுக்கு தான் பொறுப்பு அதிகம். ஆனால் சர்வதேச போட்டிகளை பொறுத்த வரை அணியில் உள்ள அனைத்து வீரர்களுக்கும் பொறுப்பு உண்டு. இதனால் ஐபிஎல் தொடர் மூலம்இ சர்வதேச போட்டிகளில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்றார்.

## சர்வதேச கிரிக்கெட் பேரவையின் அணித் தலைவராக மஹேல தெரிவு!

இலங்கை சர்வதேச கிரிக்கெட் பேரவையின் உலக கிண்ண இருபதுக்கு-20 கிரிக்கெட் போட்டிகளுக்கான அணியின் தலைவராக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தன பெயரிடப்பட்டுள்ளார்.

உலக கிண்ண இருபதுக்கு-20 கிரிக்கெட் தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணியுடனான இறுதிப் போட்டியில் தோல்வியடைந்து ஒருநாள் கடந்துள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஐவர் அடங்கிய சர்வதேச கிரிக்கெட் பேரவையின் குழுவினால் இந்த அணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை அணிசார்பாக மூன்று வீரர்களும், மேற்கிந்திய தீவுகள் அணிசார்பாக இருவரும், 11 வீரர்கள் அடங்கிய இந்த அணியில் இடம் பெற்றுள்ளனர்.

கிறிஸ் கெய்ல் மற்றும் ஷேன் வொட்சன் ஆகியோர் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் விராட் கோஹ்லி, இங்கிலாந்தின் லுக் ரைய்ட், மற்றும் மேற்கிந்திய தீவுகளின் மார்லன் சமுவெல்ஸ் ஆகியோர் மத்தியவரிசை வீரர்களாக அணியில் இடம்பெற்றுள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் இளம் வீரர் மிச்சேல் ஸ்டாக், இலங்கை அணியின் லசித் மாலிங்க, ஆகியோர் வேகப்பந் துவீச்சாளராக அணியில் இடம்பிடித் துள்ளனர்.

பாகிஸ்தானின் சயிட் அஜ்மால் மற்றும் இலங்கையின் அஜந்த மெண் டிஸ் ஆகியோர் சூழற்பந்துவீச்சாளர் களாக சர்வதேச கிரிக்கெட் பேரவையின் அணியில் பெயரிடப்பட் டுள் ளனர்.

நியூசிலாந்து அணியின் முன்னாள் தலைவர் பிரண்டன் மெக்கலம் விக்கெட் காப்பளா ராக அணியில் இடம்பிடித்துள்ளார்.




இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 10.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.